
வேலூர் கோட்டை

# ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர்

கோயில் வரலாறு



ஆசிரியர்: பி.ஜெயராமன்



# தினசரி பூஜை டிரஸ்ட்

400 வருடங்களாக வழிபாடு இல்லாமல் இருந்த வேலூர் கோட்டை ஸ்ரீஜலகண்டேஸ்வரர் கோயிலில் தொடர்ந்து தங்கு தடையின்றி காலபூஜைகள் நடைபெற,

காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜெகத்குரு சங்கராச்சார்ய
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்
திருவலம் சித்தர் யோகீஸ்வரர் சிவானந்த மவுன சுவாமிகள்
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்
மயிலைமாமுனிவர் குருஜி சுந்தரராம் சுவாமிகள்

அவர்களுடைய ஆசிபெற்று அறக்கட்டளைகள் ஏற்படுத்த ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனத்தாரால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அறக்கட்டளை ஏற்படுத்த விரும்புவோர் ரூ. 1500/- செலுத்தி ஒரு வருடத்தில் ஒரு நாளில் ஒரு கால பூஜையின் அறக்கட்டளையை ஏற்படுத்தலாம். (பதிவு செலவு தனியாக செலுத்தவேண்டும்.)

முதல்கட்டத்தில் ஒரு நாளைக்கு 2 கால பூஜைகளுக்கு அறக்கட்டளைகள் சேர்க்கப்படும். முதலில் வருபவர்களுக்கு அவரவர் விரும்பும் தேதியும் காலமும் கொடுக்கப்படும். பின் வருபவர்கள் மீதமிருக்கும் தேதிகளில் அறக்கட்டளைகள் ஏற்படுத்தலாம்.

நீங்களும் இப்புனித தொண்டில் பங்கு கொண்டு ஸ்ரீ ஜகதாம்பிகை (எ) ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் அருளுக்கு பாத்திரராகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—: விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :—


ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனம்
சங்கப்பதிவு எண்: 36/81
37, கொசத்தெரு, வேலூர்-632001.
டெலிபோன்: 20992.

ஸ்ரீஜலகண்டேஸ்வரர் ஆலயம்
கோட்டை, வேலூர்-632005
டெலிபோன்: 23412

வேலூர் கோட்டை

# ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் வரலாறு




வெளியீடு :

## ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தருமஸ்தாபனம்

பதிவு எண் 36/81
37, விநாயகர் கோயில் தெரு, வேலூர்-63200

## அணிந்துரை

வேலூர் கோட்டை ஸ்ரீ ஜகதாம்பிகை (எ) அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் பற்றி கல்வெட்டுகள் சரித்திர சம்பந்தமான சரியான தகவல்கள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் ஸ்தல புராணம் இதுவரையில் வெளியிடப்படவில்லை. ஓலைச்சுவடிகள் வாயிலாகவும், வரலாற்று ஆதாரங்களில் காணப்படும் குறிப்புகளையும் சேகரித்து வரிசைப்படுத்தி ஒர் புத்தக ருபமாக ஸ்ரீஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனத்தின் வெளியீடாக அமைத்த பெருமை அருமை நண்பர் வேலூர் மாலைமுரசு நிருபர் உயர்திரு. P. ஜெயராமன் அவர்களுக்கு உரியதாகும். அன்னாருக்கு ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கொண்டு சரித்திர சம்பந்தமாகவோ, கல்வெட்டுகள் மூலமாகவோ கிடைக்கும் குறிப்புகள் பற்றி அறிந்தவர்கள் தெரியப்படுத்தினால் அவைகளை அடுத்து வரும் வெளியீடுகளில் சேர்க்க ஏதுவாக இருக்கும். வணக்கம்.



அன்புள்ள
K. S. மணி
செயலாளர்
ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனம்

விலை ரூ. 5

முதற்பதிப்பு : நவம்பர் 1982
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1983

இந்நூலை உருவாக்கியவர்களுக்கு நன்றி.

1) கனரா பிரிண்டர்ஸ் சென்னை-86. 2) கண்ணன் கலர் கிராபிக்ஸ் சென்னை-14.
3) ஓவியர் சின்னையா ஜோதி, சென்னை-39.

# முன்னுரை

தமிழகத்திலே பிரம்மாண்டமான கோட்டையையும், அழகிய ஆழ அகழியையும் அரணாக கொண்டு கலையெழில் தழும்ப நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஆலயம் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர்'' திருவாலயம் ஒன்றே ஆகும். இத்தகைய சிறப்பும், பெருமையும், புகழுமுடைய இத்திருகோயிலில் அருள் பாலிக்க எழுந்தருளியுள்ள நாயகரின் மெய் சிலிர்க்க வைக்கும் மகிமைகள் பற்றி சரித்திர பூர்வமாகவும், ஆதார பூர்வமாகவும், உள்ள வரலாறுகள் காலத்தின் கோலத்திலுல், சில தலைமுறைகளாக மூடி மறைக்கப்பட்டிருந்தது. சில ஆண்டு காலம் இவற்றை அறிந்து, புரிந்த உணர்வின் உத்வேகத்தின் விளைவே இச் சிறிய நூலின் தொகுப்பின் பிறப்பாகும்.

வேலூர் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் வரலாறு பற்றி தொகுத்து எழுத எண்ணம் மனதில் வித்திட்ட பொழுது அதற்கு கருவாக இருந்து நல்வாய்ப்பு நல்கிய "வேலூர் மாலை முரசு" நிறுவனத்துக்கும், அதன் நிர்வாக இயக்குநர் திருமிகு கே. பி. கந்தசாமி, எம். ஏ., அவர்களுக்கும் முதற்கண் எனது இதயங்கனிந்த நன்றியை சமர்ப்பித்துக் கொள்கிறேன். எனது எண்ணத்துக்கு வண்ணம் கொடுக்கும் வகையில் உதவிய பேராசிரியர் திரு. சி. சண்முகக்கனி, எம்.எஸ்சி., அவர்களுக்கும், அவரது துணைவியார், பேராசிரியை திருமதி திரிலோகசுந்தரி, எம்.ஏ., எம்.பில்., அவர்களுக்கும், இப் பணியில் ஈடுபட எனக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த புலவர் திரு. எஸ். வெங்கடாச்சலம், புலவர் திரு. கே. ஏகாம்பரம், எம்.ஏ., திரு. ஏ. பிச்சையா (செய்தி ஆசிரியர்-மாலை முரசு) ஆகியவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இப்புத்தகத்தை தங்கள் பொறுப்பில் வெளியிட மன முவந்து முன்வந்த "அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாப னத்துக்கும்" அதன் நிர்வாகிகள் அனைவருக்கும் எனது மன மார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இப்புத்தகத்தை உருவாக்க வரலாற்று தகவல்களையும் சான்றுகளையும் தந்துதவிய டாக்டர் திரு. வி. எம். புருஷோத்தம், மற்றும் தகவல் கள் நல்கிய திரு. சி. எஸ். ராமமூர்த்தி, திரு. கே. எஸ் மணி, பி.எஸ்சி., வழக்கறிஞர் திரு. ஏ. தணிகாச்சலம், பி. ஏ. பி. எல்., வழக்கறிஞர் திரு. பி. எஸ். சுப்பிரமணியன், பி. காம்., பி. எல்., திருவண்ணாமலை திரு. இராமலிங்க சிவாச்சாரியார், ஆம்பூர் மேல்சாணூர்குப்பம் திரு. பி. என். ராஜகோபால், திரு. வி. எம். சிவலிங்கமணி திரு. வி. எம். கே. சாமி ஆகியவர்களுக்கும், இப் புத்தகத்தை சிறப்பாக அச்சிட்டு நல்லதொரு நூலாக உருவாக்க உறுதுணைபுரிந்த "ஹரிஹர அச்சக" உரிமையாளர் திரு. வி. ஜெ. சத்தியநாராயணா அவர்களுக்கும், மற்றும் ஊழியர்களுக்கும், சிறந்த முறையில் பிளாக்குகளை தயாரித்துக் கொடுத்த ஆர்ட் சர்வீஸ் உரிமையாளர் திரு. ஆர். வி. நீலகண்டன் அவர்களுக்கும் புகைப்படங்கள் தந்துதவிய புகைப்பட நிபுணர் திரு. வி. வி. பத்மநாபன் அவர்களுக்கும் மற்றும் அணிந்துரை நல்கிய புலவர் கங்கை மாவடிநாதன் அவர்களுக்கும், பேராசிரியர் பி. பெருமாள் எம் ஏ.,எம்.பில்., அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய பெரு மக்களுக்கும் இப்பணியின் போது அவ்வப்போது ஊக்குவித்து, பிழைதிருத்தம் செய்து உதவிய திருமதி சுந்தரி ஜெயராமன் அவர்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் எனது இதய நன்றி யினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூர்.
21—11—1982

**பி. ஜெயராமன்,**
(மாலை முரசு நிருபர்)

# அணிந்துரை

ஓராயிரம் ஆண்டுகளாக ஓயாத போர்கள் பல நடந்து, பேரரசுகள் பலவற்றின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் இருப்பிடமாக விளங்கிய ஊர்கள் பலவற்றை உடையது இன்றைய வடாற்க்காடு மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் நடந்த போர்களால் தமிழக வரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும் திருப்பங்கள் பல ஏற்பட்டுள்ளன. இவற்றுள் வேலூரை மையமாகக் கொண்டு நடந்த நிகழ்ச்சிகள் வரலாற்று நூல்களில் உரிய இடம் பெறாமல் போனமை வருந்தத் தக்கதாகும்.

விசய நகர, முஸ்லீம் மராட்டிய மன்னர்களோடு வெளிநாட்டு வணிகர்களாக வந்து சேர்ந்திருந்த ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோரின் சண்டைகளால் நாடு திக்குத் தெரியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்த நாளில் எழுந்தது வேலூர் கோட்டை. இந்திய மன்னர்களின் ஆட்சியில் கடைசியாக எழுந்ததும், செப்பமாக அமைந்ததும் இந்தக் கோட்டையே எனலாம். உருவான நாள்முதல் பல ஆட்சி மாற்றங்களுக்கு இடமாகிவிட்ட இக்கோட்டையிலுள்ள கோயில் எப்போது 'சாமி இல்லாத கோயிலாக' மாறியது என்பது முடிவாகாத வரலாறாக உள்ளது.

வேலூர் மக்கள்–ஏன் இந்திய மக்கள் அனைவருமே அறிந்து கொள்ள வேண்டிய வரலாற்றைத் திரு. பி. ஜெயராமன் அவர்கள் 'வேலூர் கோட்டை அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் வரலாறு' என்னும் நூலாக உருவாக்கி யளித்துள்ளார். பலவகைக் கோணங்களில் ஆராய வேண்டிய ஆராய்ச்சிக்கு இந்நூல் ஆரம்ப நூல் எனலாம்.

இப்போதுள்ள வேலூர் கோட்டை உட்கோட்டையே என்றும், துப்பாக்கி முதலிய மேனாட்டு ஆயுதங்களைப் பயன்படுத்தும் வசதிகளோடு கோட்டையின் மதில்கள் அமைந்துள்ளன என்றும் கூறியுள்ள செய்திகள் புதிய ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளன. கோட்டை கோயிலின் உள்ளும் புறமும் மண் மூடிப் போயுள்ள பகுதிகள், பல புதிய கண்டு பிடிப்புகளுக்குரிய புதையலாக இருப்பதைச் சுட்டிக் காட்டியிருப்பது அகழ்வாராய்ச்சி யாளர்களின் கவனத்திற்குரியது.

தமிழகத்தின் கலை, இலக்கிய, பண்பாட்டு, நாகரிக வளர்ச்சியில் வடார்க்காடு மாவட்டத்தின் பங்கு என்ன என்பதைப் பற்றிய நெடிய வரலாறு இனிமேலாவது எழுதப்பட்டாக வேண்டும் என்பதை இந்நூல் நினைவூட்டுகின்றது.

இக்கோட்டைக் கோயில் எழுந்த வரலாறும், அங்கு நின்று போயிருந்த இறை வழிபாட்டிற்கு உயிரூட்ட நல்லோர் பலர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பற்றிய தகவல்களும் மக்களுக்கு இதுவரை கிட்டாமல் இருந்த குறையை இந்நூல் போக்குகின்றது. ஆராய்ச்சி நூலாக மக்களுக்கு மருட்சியூட்டாமல், எளிய நடையில் தெளிவாக எழுதியுள்ள திரு பி. ஜெயராமன் அவர்களின் முயற்சி பாராட்டுதற்குரியது. ஆலயத்திற்குள்ளேயுள்ள கலைக் கூடங்கள் பற்றியும், தரைமட்டத்திற்குக்கீழே முடங்கிக்கிடக்கும் கிணறு களின் அதிசய அறைகள் பற்றியும் எழுதி வெளியிடுதல் பயனுள்ள தாக இருக்கும்.

இப்பணி தொடர்வதாகுக; அவரது முயற்சி வெல்வதாகுக.

வேலூர்,
16—11—82

*சா. பெருமாள்*
எம்.ஏ.எம் பில்.,
தமிழ்ப் பேராசிரியர்,
அரசினர் திருமகள் ஆலைக்கல்லூரி, குடியேற்றம்.

---


# நூலின் நுகர்வு

ஒன்றில்தோன்றி மன்றில்மலர
ஒல்காபுகழிலோர் மலர்ஆக்கிட
கருத்துபலகமழ நற்கலைநூலாய்
கருவில்வைத்துரை யகம்தந்த

சரித்திரச் சான்றுகளை
சரியாகக் கோவையுடன்
தித்திக்கும் தீந்தமிழால்
தந்திட்டசெய ராமனூலினை

கற்றவர் போற்றிட மற்றவர் மருண்டிட
கவிலோர் ஏற்றிட கலைஞர் காத்திட
உள்ளங்கள் வாழ்த்திட உயர்ந்தோர் பேசிட
உன்னதமிக்கதோர் உயர்நூலாகும்.


*புலவர் கங்கை மாவடிநாதன்.*




காஞ்சி காமகோடி பீடம்
ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சுவாமிகள்

ஸ்ரீ சங்கரானந்தேந்திர
சரஸ்வதி சுவாமிகள்



திருவலம் சித்தர் யோகீஸ்வரா
ஸ்ரீ சிவானந்த மவுன சுவாமிகள்




தஞ்சை சாந்தாஸ்ரமம்
ஸ்ரீ ரமானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள்



அருள்மொழியரசு


திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்



மயிலை மாமுனிவர்

குருஜி சுந்தரராம் சுவாமிகள்

# ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் சன்னதி





ஸ்ரீ வலம்புரி விநாயகர்

ஸ்ரீ செல்வ விநாயகர்



ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர்　　ஸ்ரீ ஜகதாம்பிகை (எ) அகிலாண்டேஸ்வரி


ஸ்ரீ பாலாஜி
ஸ்ரீ துர்கை




ஸ்ரீ நடராஜர் ஸ்ரீ வள்ளி ஸ்ரீ சண்முகா ஸ்ரீ தெய்வயானை

மாணிக்கவாசகர் ஸ்ரீ சிவகாம சுந்தரி


## ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தருமஸ்தாபனம் கமிட்டி



## மகா கும்பாபிஷேக மலர் கமிட்டி



# பழைய கமிட்டி














# ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சன்னதி



# பஞ்சலோக விக்ரகங்கள்


கணபதி


சோமாஸ்கந்தர்


அம்மன்


பிரதோஷ மூர்த்தி அம்மன்


அஸ்திர தேவர்


சந்திரசேகர் அம்மன்


அம்மன்


பராசக்தி


சண்டிகேஸ்வரர்

# துவஜஸ்தம்பம்

[illegible] அந்த துவஜஸ்தம்ப [illegible] பிரம்மோற்சவம் நடத்த வேண்டுமென்று ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் உத்தரவிட்டதால் வேலூர் பொதுமக்கள் ஆவலுடன் 1981, 1982, 1983 ஆக மூன்று பிரம்மோற்சவங்களை நடத்தினார்கள்.



1981, 1982 இரு ஆண்டுகளிலும் இந்த மூங்கில் [illegible] தான் துவஜஸ்தம்பம்



1983-ம் ஆண்டு 46 அடி உயரமுள்ள தேக்கு மர துவஜஸ்தம்பம் செப்புத் தகடு [illegible]



# வாகனங்கள்



அதிகார நந்தி வாகனம்

# வேலூர் கோட்டை
# ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் வரலாறு

---

வேலூர், வரலாற்றுச் சிறப்பு மிக்க வடாற்காடு மாவட்டத்தின் தலைநகராகும். இந்திய விடுதலைப் போருக்கு முதலில் வித்திட்ட சிறப்பு வாய்ந்த நகரம் இது. ஆதியில் வேல மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த காட்டின் காரணமாக "வேலங்காடு" என பெயர் கொண்டு பின்னர் வேலப்பாடி என்ற குடியிருப்பு இங்கு தோன்றிற்று. நாளடைவில் இச்சிற்றூர் பெயர் மருவி நகராகி "வேலூர்" ஏற்பட்டது என வரலாறு உண்டு. அதோடு இராய வம்ச மன்னர்கள் இங்கு ஆட்சிபுரிந்த காரணத்தினால், இதற்கு இராய வேலூர் என்ற சிறப்புப் பெயரும் உள்ளது.

சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து சுமார் 140 கிலோமீட்டர் தொலைவில் சித்தூர்-கடலூர் தேசிய நெடுஞ்சாலைச் சந்திக்குமிடத்திற்கு அருகாமையில் தென் மேற்கு பகுதியில், வீரத்தின் சின்னமாக, தியாகத்தின் தழும்பாக, வரலாற்றுப் பெட்டகமாக, வேலூர் கோட்டையும், அதனுள் அமைந்திருக்கும் கோவிலும் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, ஆகியவற்றிலிருந்தும் இந்நகருக்கு புகைவண்டி, பேருந்து வசதிகளும் உள்ளன.

## தொல்பொருள் துறை

சரித்திரப் புகழ்பெற்ற வேலூர் கோட்டை நாலாபக்கத்திலும், மலைகளை அரணாகக் கொண்டு ஒரு எழில் மிகு பள்ளத்தாக்கில் அங்கு தவழ்ந்தோடும் பாலாற்றுங்கரையில், ஒரு சமவெளியில்

கட்டப்பட்டிருக்கிறது. இக்கோட்டையும், அதனுள் கட்டப்பட்டுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலும், இவற்றைச் சுற்றியுள்ள அழகுமிகு அகழியும், தற்போது மத்திய அரசின் தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் பராமரிப்பில் இருந்து வருகின்றன. இக்கோட்டைக் கொத்தளங்களும் அதன் நடுவே, கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டிருக்கும், இக்கோயில் வீர காவியம் படைத்தவை இவற்றின் வரலாறு. வரலாற்று ஆசிரியர்களின் **விவாதத்திற்கு உரிய விஷயமாக இருந்துக் கொண்டிருக்கிறது**

இந்து-முஸ்லீம் சாம்ராஜ்யங்களின் மாமன்னர்கள், மற்றும் குறுநில மன்னர்கள் பலரை இது மண்டியிட வைத்து ரத்த ஆற்றை ஓடவிட்டு பரணி பாடியது ஆகும். அதோடு, இக்கோட்டையும், கோயிலும், தமிழ்நாட்டிலேயே, என் இந்தியாவிலேயே கூட கண்டும், கேட்டிராத அளவிற்கு பழமையும், புதுமையும் கலந்து ஒருவித நவரசத்தை உண்டாக்கக் கூடியதாக அமைந்திருக் கின்றன. மேலும், இதன் அமைப்பும், அதைச் சுற்றி உள்ள அகன்ற ஆழமான அகழியும் நமது கலை இலக்கிய பண்பாட்டை யும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

## இந்து சாம்ராஜ்யம்

தென்னிந்தியாவில், கோய்சலா சாம்ராஜ்யத்திற்குப் பிறகு இந்து சாம்ராஜ்யமான விஜய நகர சாம்ராஜ்யம் கி. பி. 1336-ம் ஆண்டு அரிகரர், புக்கர் என்ற இரு சகோதரர்களால் ஏற்படுத் தப்பட்டது. இப்பேரரசை நிறுவிய முதல் புக்கரின் குமாரரான குமார கம்பண்ணா, இங்கு படையெடுத்து வந்து ராஷ்டிரகுட்டர் வம்சத்தினரைத் தோற்கடித்து, வேலூரை முதலில் பிடித்து தமது ஆட்சியை ஏற்படுத்தினார்.

விஜய நகர பேரரசு சீரோடும், சிறப்போடும் விளங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் ஏறத்தாழ 200 குறுநில மன்னர்கள்

(சிற்றரசர்கள்) இந்த சாம்ராஜ்யத்தின் பல்வேறு இடங்களில் பேரரசின் ஆணைக்கு உட்பட்டு சேய்யரசராக ஆட்சிபுரிந்து வந்தனர். இக்குறுநில மன்னர்கள் "நாயக்கர்" என்று சிறப்புப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வந்தார்கள். "நாயக்கர்" என்று சொல் அக்காலத்தில் கவர்னர், வைஸ்ராய், தளபதி என்ற சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

## பொம்மி ரெட்டி

வேலூர் கோட்டையைப் பொறுத்த வரையில் அக்காலத்தில் மூன்று நாயக்க மன்னர்கள் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். முதன் முதலாக ஆட்சி புரிந்த நாயக்க மன்னரின் பெயர் வீரப்ப நாயக்கர். இவருடைய காலம் என்ன காரணத்தினாலோ, துல்லிய மாக ஏடுகளில் வரையறுக்கப்படவில்லை. அதன்பிறகு கி. பி. 1526-1595-ம் ஆண்டு வரை பொம்மி நாயக்கர் (ரெட்டி) ஆண்டு வந்துள்ளார். மூன்றாவது நாயக்கர் மன்னராக கொலுவீற்று கோலோச்சியவர் லிங்கம்ம நாயக்கர். இவருடைய காலம் கி. பி 1595-1604 வரை ஆகும். இவர்களில் இரண்டாவது நாயக்கர் மன்னர் காலமான கி. பி. 1526 முதல் 1595 வரையான 69 ஆண்டு காலம், ஆட்சி புரிந்த பொம்மிரெட்டி காலத்தில் தான் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையும், அதன் வடகிழக்கு மூலையில் நிர்மாணிக்கப்பட்ட அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலும் கட்டப்பட்டிருக்கின்றன. வேலூர் கோட்டையும், சிவன் கோயிலும், சின்னபொம்மி நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது என இந்நகரை அடுத்த அரப்பாக்கத்தில் உள்ள கல்வெட்டில் குறிப்பு உள்ளதென வரலாற்றுத் தகவல் கூறுகிறது.

## ஸ்ரீ அப்பைய தீட்சதர்

**பொம்மி நாயக்கர் அரசுக் கட்டிலில் வீற்றிருந்த காலத்தில் அவரது அமைச்சரவையில் ஸ்ரீ அப்பைய தீட்சதர்**

ராஜகுருவாக இருந்தார். " சிவார்க்கமணி தீபிகா " என்ற நூலை எழுதிய பிறகு அரசனால் கனகாபிசேகம் செய்யப்பட்டார். அப்பொருளைக் கொண்டு வேலூர் ஆரணி அடையபலத்தில் 500 மாணாக்கர்களைக் கொண்ட கலாசாலை நிருவி சைவத்திற்கும், அத்துவைதத்திற்கும் அறிய தொண்டாற்றினார் என்று அடைய பலத்தில் உள்ள காலகண்டேஸ்வரர் ஆலய கல்வெட்டுகள் கூறு கின்றன

சைவ மதத்திற்கு முக்யத்வம் கொடுத்த ஸ்ரீ தீட்சதர் பிற மதங்களை மதித்து வந்தார். அவர் வழி தோன்றல்களில் அநேக மகான்கள் உண்டு. ஸ்ரீ நீலகண்ட தீட்சதர். (தேவி உபாசகர் மதுரை திருமலை நாயக்கரின் மந்திரியாகவும், குல குருவாகவும் திகழ்ந்தவர்) ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி (சிவானந்தா ஆஸ்ரமம், ரிஷிகேசம்) ஒரு சிலர் ஆவர். எழில்மிகு கோட்டைக்குள் எழுந் தருளியுள்ள ஸ்ரீ ஜலகண்டேஸ்வரரின் திருக்கோயில் இவருடைய ஆலோசனையின்படிதான் கட்டப்பட்டதாக தகவல் கூறுகின்றன.

## 455 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது

கி. பி. 1530-ம் ஆண்டு வேலூரை ஆண்டு வந்த அரசரான பொம்மி நாயக்கர் ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு ஒரு கிராமத்தை வரிவிலக்கு கொடுத்து நன்கொடையாக வழங்கினார் என வரலாற் றுத் தகவல் கூறுகின்றது. எனவே, அப்போழுதே இந்தக் கோயில் இப்போழுது காணப்படுவது போல் முழுமையாகவோ அல்லது முற்றுப் பெறாமலோ கட்டப்பட்ட நிலையில் தெய்வ வழி பாட்டுடன் இருந்திருக்க வேண்டும் என்று இதன் மூலம் தெளிவா கிறது. வரலாற்று கூற்றிற்கு ஏற்ப **பொம்மி நாயக்கர்** ஆட்சிக்கு வந்த கி. பி. 1526-ம் வருடமே அவர் இந்த கோட்டையையும், கோவிலையும் நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பாரேயாயின், இன்றைக்கு ஏறத்தாழ 455 வருடங்களுக்கு முன் இது கட்டப் பட்டிருக்க வேண்டும்.

## மானியமாக வழங்கப்பட்ட கிராமங்கள்

அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோவிலைக் கட்டி முடித்த பொம்மி நாயக்கர் (ரெட்டி) இக்கோவிலைச் சிறப்பாக நிர்வகிக்க கி. பி. 1530-ம் வருடம் வையப்ப நாயக்கர் ஆணையுடன் ஒரு கிராமத்தை வரிவிலக்குச் செய்துக் கொடுத்தும், இராம நாயக்கர் காலத்தில் அரும்பருத்தி கிராமத்தையும் கொடுத்தார். பின்னர் கி. பி. 1576-ம் ஆண்டு செஞ்சிக் கோட்டையை ஆண்டு வந்த கிருஷ்ணப்ப நாயக்கர் அனுமதியுடன் திப்பசமுத்திரம் கிராமத்தை ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோவிலுக்கு மான்யமாக வழங்கியுள்ளார். இதுபோல் இங்குள்ள சத்துவாச்சாரி, **பெருமுகை** சம்பாநல்லூர் ஆகிய கிராமங்கள் இக்கோவிலுக்கு இவரால் மானியமாக வழங்கப்பட்டதாக கல்வெட்டுகளில் உள்ளது.

கி. பி. 17-ம் நூற்றாண்டின் மத்தியில் இக்கோட்டையை ஒரு மூஸ்லீம் மன்னர் முற்றுகையிட்டு பிடித்ததாகவும், அம்மாமன்னரின் மகன் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலின் கர்ப்பகக் கிரகத்தில் நாகரத்தினம் என்ற நடன மாதுவை (தேவதாசி) கொலை செய்து விட்டதாகவும், அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சில காலம் தெய்வ வழிபாடு நடைபெறவில்லை என்றும் ஒரு தகவல் கூறுகிறது. **17-ம் நூற்றாண்டின் முதல்பாதி என்றால் சுமார் கி பி 1650-ம்** வருடத்தையொட்டியதாகும். ஆனால், ஏன் அவன் அங்கு அந்த நடன மாதுவைக் கொலை செய்தான்? எந்த ஆண்டு, எந்த சந்தர்பத்தில் இந்த நிகழ்ச்சி நடந்தது? என்பது பற்றிய தகவல்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. அதன் பிறகு சிறிது கால இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இக்கோயிலில் தெய்வ வழிபாடு தொடங்கி அது நீண்ட காலம் நடைபெறாமல் கி. பி. 1708-ம் ஆண்டில் திரும்பவும் நின்று விட்டதாகவும் மற்றொரு தகவல் உள்ளது.

விஜய நகர சாம்ராஜ்யம் கி. பி. 1672-ம் ஆண்டு அழிவுற்ற பின் கி. பி. 1674-ம் ஆண்டு பீஜப்பூர் சுல்தான் ஒருவரின் ஆட்சி வேலூரில் முடிவுற்றதாக ஒரு வரலாறு உண்டு இதையும், கோயில் நர்த்தகி கொலையின் காரணமாகத் தடைபட்ட தெய்வ வழிபாடு மீண்டும் தொடங்கி கி. பி. 1708-ம் ஆண்டு திரும்பவும் நின்றுவிட்டது என தெரிவிக்கும் குறிப்பையும் ஒன்று சேர்த்து ஆராய்ந்து பார்த்தால், இன்றைக்கு சுமார் 274-ம் ஆண்டு முதல் 319 ஆண்டுகளுக்கு முன் இத் திருக்கோயிலில் தெய்வ வழிபாடு தடைபட்டிருக்கக்கூடும். அன்று முதற்கொண்டு தான் இக் கோயில் "சாமி இல்லாத" கோயில் என்ற அடைமொழிக்கு இலக்காகி இருக்கக் கூடும் என்பது தெளிவாகிறது.

## வீர சிவாஜி-நவாப்

கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் பரவி வேருன்றியிருந்த முஸ்லீம் மன்னர்களின் ஆட்சியை வீழ்த்த மராட்டிய மன்னர்கள் பல முறை இங்கு படையெடுத்து வந்துள்ளனர். மராட்டிய வீரன் வீர சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரர் வெங்கோஷி இந்நூற்றாண்டில் இக்கோட்டையை முற்றுகையிட்டு பிடித்தார் என்பது வரலாறு. அதோடு கி. பி. 1724-ம் ஆண்டில் கர்நாடக (ஆற்காடு) நவாப் ஆற்காட்டிலிருந்து தன் இருப்பிடத்தினை வேலூர் கோட்டைக்கு மாற்றி விட்டதாகவும் சான்றுகள் உள்ளன.

இக்கோட்டையின் வரலாற்றில் இந்தக் காலம் மிகவும் கஷ்டமானது என்றும் இந்து-முஸ்லீம் மன்னர்களின் கைக்கு இது அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தது என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன.

## இரண்டு கோட்டைகள்

வேலூர் கோட்டை என இப்போது காட்சியளித்துக் கொண்டிருக்கும் இச்சிறப்புமிக்குக் கோட்டை ஒன்று மட்டுமல்லாமல்,

இன்னொரு கோட்டையும் அக்காலத்தில் இருந்திருக்கிறது நாம் எல்லோரும் இன்று பார்த்து மகிழும் கோட்டையும், கோயிலும், வேலூர் கோட்டையின் உட்புறக் கோட்டையாகும். அப்படியானுல் வெளிப்புறக் கோட்டை எங்கே? எந்த இடத்தில்? எந்த வகையில் அமைக்கப்பட்டிருந்தது?

வேலூர் ஆற்காடு தேசிய நெடுஞ்சாலையில் இன்றைய காகிதப்பட்டரைக்கும் – சத்துவாச்சாரிக்கும் இடையில் உள்ள எல்லைப் பகுதியான மேட்டுப் பகுதியில் அந்த வெளிப்புறக் கோட்டை அமைந்திருந்ததற்கான சான்றுகளும், தடயங்களும் இன்று கூட இருக்கின்றன. காகிதப்பட்டரையின் கிழக்குக் கோடியில் 'டான்சி' ஒர்க்ஷாப் அருகாமையில் உள்ள மேட்டுப் பகுதியில் இக்கோட்டை அமைந்திருக்கிறது. இதன் தென் புறத்திலுள்ள மலையினை ஒரு மருங்காகவும், வடக்குப் பக்கத்தில் வளைந்து நெளிந்தோடும் பாலாற்றங்கரையினை மற்றொரு கரையாகவும் கொண்டு இவ்வெளிப்புறக் கோட்டை எழுப்பப்பட்டுள்ளது.

## எப்போதும் வெள்ளம்

தண்ணீர் இல்லாத ஆறு என்று வேலூர் அதிசயங்களில் ஒன்ருகக் கூறப்படும் பாலாறு அக்காலத்தில் நுங்கும் நுரையுமாக கரைபுரண்டோடும் வெள்ளத்தோடு எக்காலத்திலும், எப்போதும் காட்சியளித்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் அக் காலத்தில் இன்றைய கர்நாடகமாநிலத்தில் உள்ள 'பேத்தமங்கலம்' போன்ற ஏரிகள் கட்டி அக்காலத்தில் பாலாற்றில் ஓடி வந்த தண்ணீரை தடுக்காத காலம். எனவே, வெளிப்புறக் கோட்டை பாலாற்றை ஒரு கரையாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந் நகரிலுள்ள சைதாப்பேட்டை பி. எம், செட்டித் தெருவில் ஒரு பிள்ளையார் கோயில் இன்றும் உள்ளது. இதற்கு என்ன பெயர்

தெரியுமா? 'கோட்டைப் பிள்ளையார் கோயில்' ஆகும். எனவே வெளிப்புறக் கோட்டைக்கும், உட்புறக் கோட்டைக்கும் இடையில் இந்த பிள்ளையார் கோயில் இருந்த காரணத்தினால் இப் பெயர் வழங்கப்பட்டது என்பதோடு, வெளிப்புறக்கோட்டை இருந் திருக்கிறது என்பதற்கு இது நிருபணமாகும்.

## சிவலிங்கம்

வெளிப்புறக்கோட்டையும், ஸ்ரீ ஜலகன்டேஸ்வரர் கோயிலில் சென்ற ஆண்டு பிரதிஷ்டை செய்து வைத்திருக்கும் சாமி சிலை யையும் (சிவலிங்கம்) அதனைப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்தையும் நாம் ஒரு கணம் எண்ணி ஆராய வேண்டும். வெளிப் புறக் கோட்டையிலிருந்து சுமார் 300 மீட்டர் தூரத்தில் தான் இந்த லிங்கம் பாதுகாக்கப்பட்டச் சிறிய கோயில் இருக்கிறது. வெளிக் கோட்டையின் எல்லைக்கு அப்பால் அதுவும் வெகு அருகாமையில் இச்சிவலிங்கம் காணப்படுவதற்கு என்ன காரணம்! யார் இதை தூக்கி வந்தார்கள்? அல்லது யாரால் இது அங்கு தூக்கி எறியப்பட்டிருக்க வேண்டும்? யார் காலத்தில் இது நடைப் பெற்றிருக்கக்கூடும்? என்பது போன்ற வினாக்களுக்கு நாம் விடை காண வேண்டியவர்களாக இன்று இருக்கிறோம்.

தற்போது, ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் லிங்கம் சாதாரண லிங்கம் அல்ல. ஏறத் தாழ 4½ டன் எடை கொண்டது. அப்படிப்பட்ட சிவலிங்கத்தைக் கோயிலிலிருந்து அகற்றி, கொஞ்சமும் சிதையாமல், வெளிக் கோட்டைக்கு அப்பால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அப்படியே சிவலிங்கத்தைத் தூக்கி வந்தாலும் ஒன்றிரண்டு பேர்களால் அதை இங்கு தூக்கி வந்திருக்க முடியாது பலர் ஒன்று சேர்ந்து தான் அதைத் தூக்கி வந்திருக்க வேண்டும் அல்லது வண்டியில்

ஏற்றி இங்கு கொண்டுவந்திருக்கக் கூடும். சிவலிங்கம் பாது காத்து வைக்கப்பட்டிருந்த கோயிலின் அருகில் ஒரு சிறியகுளம் இருந்ததாகவும், அந்தக் குளத்தில் சிவலிங்கம் புதைந்திருந்த தாகவும், சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு மண் மூடிக் கிடந்த சிவலிங்கம் வெளியில் தெரியத் தொடங்கியதென்றும், பின்னர் அந்த கிராமத்து மக்கள் வேலூர் திரு. ஏ. தாமோதர செட்டியார் உதவியுடன் அதை அங்கேயே ஒரு இடத்தில் நிறுவி பூஜித்து வணங்கி வந்தார்கள் என்றும், இக்கிராமத்தில் உள்ள வயது முதிர்ந்தவர்கள் இன்று கூறுகிறார்கள்.

எனவே, யார் காலத்தில் எந்த அரசர் காலத்தில் இந்த சிவ லிங்கமும் மற்றும் சிலைகளும் அத்திருவாலயத்திலிருந்து அகற்றப் பட்டிருக்க வேண்டும் என்பதை வரலாறு கூறும் சான்றுகள் மூலம் முடிவு செய்ய வேண்டியதாக உள்ளது. ஒரு இந்து கோயிலில் அவர்கள் வழிபடும் தெய்வ விக்ரகங்கள் அகற்றப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அந்த மதத்தைக் கடுமையாக நிந்தித்து துவேசிக்கும் பிற மதத்தினரால் அப்பகுதிக்கும் அங்குள்ள கோயில் களுக்கும் ஆபத்து விளையக்கூடும் என்று உறுதியான நம்பிக்கை ஏற்பட்டாலொழிய இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெற்று இருக்காது.

## ஒரு மைல் தூரம்

இவ்வளவு பெரிய சிவலிங்கம் இத்தனை ஆண்டு காலங்கள் கொஞ்சமும் சேதப்படாமல் இருப்பதை வைத்துப் பார்த்தால் ஒரு வேளை கோட்டையைப் பிடித்த முஸ்லீம் மன்னர் அனுமதியோடு இச்சிவலிங்கம் கோட்டைக் கோயிலுக்கு வெளியில் அப்புறப் படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது மேலும், இச்சிவலிங்கம் ஒன்றிரண்டு பேர்களால் மறைத்துத் தூக்கிச் செல்லும் நிலையில் உள்ள சிவலிங்கமும் அல்ல. அதோடு, உட்புறக்கோட்டைக்கும், வெளிப்புறக் கோட்டைக்குமிடையேயுள்ள

ஏறத்தாழ ஒரு மைல் தூரத்திற்கு இதனைத் தூக்கிக் கொண்டு வரவேண்டுமென்றால் பலர் ஒன்று சேர்ந்து தூக்கிக் கொண்டு வந்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது ஒரு வண்டியில் ஏற்றி அதை சாலையின் ஓரத்திலுள்ள குளத்தில் போட்டிருக்க வேண்டும். எனவே, அந்தக் காலத்தில் இந்து-முஸ்லீம் மன்னர்களிடையே நிலவிய மதக் கொள்கை, இனவெறி, ஆகியவற்றை அடிப்படையாக வைத்துப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ந்து பார்த்தால் முஸ்லீம் படையினர் இக்கோட்டை முற்றுகையிட்ட பொழுதோ, அல்லது கோட்டையைக் கைப்பற்றிய பிறகோ தான் படையெடுப்பாளர்கள் கோயிலை கொள்ளையடித்து நாசப்படுத்தி விடுவார்களோ என்று எண்ணிப் பயந்த இந்துக்கள் இவற்றையெல்லாம் அங்கிருந்து அகற்றியிக்ருக வேண்டும் என்று தெளிவாகிறது.

## வனப்பு மிகுத் தோற்றம்.

மலரும், மணமும், இளமையும், எழிலும், நிலவும் ஒளியும், கடலும், அலையும், இவற்றை எப்படிப் பிரித்துக் கூற முடியாதோ அது போல் தான் இந்தக் கோட்டையையும், அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருவாலயத்தையும் பிரித்துக் கூற முடியாது. ஏனென்றால், இக்கோட்டையின் வரலாறும், கோயிலின் வரலாறும், ஒன்றையொன்று பின்னிக் கிடக்கின்றன. இந்தக் கோட்டையின் வடிவமைப்பு, பொறியியல், திறனைப் பார்த்தால் பிரான்ஸ் நாட்டு நிபுணர்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருக்கும் என கருதப்படுகிறது. உயர்ந்த மலைகளின் மீதோ அல்லது மேட்டுப் பாங்கான இடங்களிலோ இவ்வெழில்மிகுக் கோட்டை எழுப்பப்படாமல், சாதாரண சமவெளித் தரையில் இது நிர்மாணிக்கப்பட்டிருப்பது இதற்கு ஓர் சிறப்பாகும். இதன் அழகு மிகு தோற்றமும், அதனை நாலா பக்கங்களிலும் சூழ்ந்துள்ள அகழியின்

சுவர்ச்சி மிக்க வனப்பும், அதில் தேங்கி நிற்கும் தண்ணீரின் கண் கொள்ளாக் காட்சியும், கற்பனை உலகில் சஞ்சரிக்கும் கவிஞர்களுக்கு ஓர் அறிவுக்களஞ்சியமாகவும், அறிஞர்களுக்கு ஆராய்ச்சிக் கருவூலமாகவும் திகழ்கின்றன.

## இரண்டு கடின சுவர்கள்

வெளியே இருந்து பார்க்கக் கோட்டையின் வடிவமைப்பு ஏறத்தாழ நீண்ட சதுர வடிவம் போன்று உள்ளது இதன் வெளிப்புற நீளம் சுமார் 2, 500 அடி. அகலம் சுமார் 1, 500 அடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இக்கோட்டை இரண்டு கடினமான வெளிப்புறச் சுவர்களால் பாதுகாக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. சுமார் 25 அடி நீர் நிரம்பிய அகழியைத் தரையாகக் கொண்டு நீர் நிலைக்கு உயரே சுமார் 10 அடி உயரத்தில் மற்றும் 20 அடி முதல் 25 அடி அகலத்தில் முதல் சுவர் அமைந்திருக்கிறது. இரண்டாவது சுவர் முதல் சுவரின் மேல் தளத்திலிருந்து 20 அடி முதல் 25 அடி உயரமும், 30 அடி முதல் 35 அடி அகலத்தில் இருக்கிறது.

முதல் சுற்றுச் சுவர்களில் காவலர்கள் ஆங்காங்கே தங்கிக் காவல் புரியும் அறைகளும், போர்த்தளவாடங்களுடன் வீரர்கள் உலவி வரும் வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கரையோர சுவர்களில் துப்பாக்கியும், ஈட்டியும், வேலும், வில்லும் துளைக்க முடியாத தன்மை கொண்ட நீண்ட சதுரமும், அரை வட்ட வடிவமைப்பும் உடைய பெரிய பாராங்கற்கள் வரிசையாக கவசம் போன்று நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன.

## துப்பாக்கியால் சுடக்கூடிய துவாரங்கள்

அவற்றில் ஒன்று விட்டு ஒரு கல் என்று கூறும் வகையில் ஒவ்வொரு கல்லிலும் உட்புற அகன்ற துவாரமாகவும் வெளிபுறம் அவை மூன்று குறுகிய துவாரங்களாக மாறுபட்டக் கோணங்களில் காணப்படுகின்றன. இத்துவாரங்களையும், அக்காலப் போர் நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த துவாரங்களின் வழியாக அம்புகளையோ அல்லது ஈட்டிகளையோ கொண்டு வேகமாக எறிந்து கோட்டையை நெருங்கும் எதிரிகளைத் தாக்க அமைக்கப் பட்டிருக்கலாம் என்று கருத முடியவில்லை. இத்துவாரங்களின் உயரத்தையும், தரையின் மேல் தளத்தையும், உயரத்தையும் இணைத்துப் பார்த்தால், கோட்டையை நோக்கி வரும் எதிரிகளை மூன்று கோணங்களில் குறி வைத்து துப்பாக்கியால் சுட இத்துவாரங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று வரலாற்று நிபுணர்களின் கருத்துக்களில் ஒன்றாக உள்ளது.

இது தவிர, இரண்டாவது அரணில் ஆங்காங்கே சாய் தளங்களைப் போன்ற சரிவான பகுதிகள் காணப்படுகின்றன. முதல் சுற்றுப் பகுதிக்கு இச்சுவற்றிலிருந்து வீரர்களையும் காவலர்களையும், ஏணிகளின் மூலம் ஏற்றவும் இறக்கவும், எதிரிகள் நுழைந்து விட்டால் ஏணியை அகற்றிவிட்டு மேல் பகுதியிலிருந்து தாக்குவதற்கு வசதியாகவும் இவை அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்துக்களின் பேரரசாக விளங்கிய விஜய நகர சாம்ராஜ்யம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய காலத்தில் இந்த அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் கட்டப்பட்டு இருந்தாலும், இக்கோயில் திராவிட கலையும், சாளுக்கிய பாணியும் கலந்து கட்டப்பட்ட கோயில் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இந்த கலப்பு கலையின் மூலம் உருவாக்கப்பட்ட எண்ணற்ற

சிற்பங்களும் சிலைகளும் கோவிலின் கோபுரம், கல்யாண மண்டபம் ஆகிய இடங்களில் எழில் ஓவியங்கள் போல் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.

## இரகசியப் பாதை

கோட்டையின் உட்புறத்திலிருந்து இரு கோட்டைச் சுவர்களையும் குகை வழியாகக் கடந்து அகழியின் நீர்ப் பகுதியை அடைய ஆங்காங்கே படித்துறைகளும் உள்ளன. பேரரசு, குறுநில மன்னர்களால் போற்றிப் புகழப்பட்ட பளிங்கு அரண்மனையும், ஆயுதத் தொழிற்சாலையும், ஆயுதக் கிடங்கும் அமையப் பெற்றதாக கருதப்படும் தென்மேற்குப் பகுதியிலிருந்து கோட்டையின் வெளிப்புறச் சுற்றுச் சுவர் பகுதிக்கு படைக் கலன்களையும், வீரர்களையும் அனுப்பி வைக்க வசதிகள் காணப்படுகின்றன. மேலும், இக்கோட்டையின் தெற்கு புறத்தில் அகழிக்குச் செல்லும் ஓர் இரகசியப் பாதை அமைப்பு உள்ளது. அரச குடும்பத்தினர் மற்றும் முக்கிய விருந்தினர்கள் இவ்வழியாக முழு நிலாக் காலங்களில் அகழியில் உலாவி வர இவை அமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது போர்க்கால நெருக்கடியின் போது மன்னர் குடும்பத்தினர் தப்பிக்கும் இரகசிய வழியாகவும் இது ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் எண்ணப்படுகிறது.

இச்சிறப்புமிகு கோட்டையைச் சுற்றி அரணாகவும், அழகு மிகு ஆரமாகவும், நாலாப்பக்கமும் நீர் நிரம்பிய ஆழமான அகழி உள்ளது. இந்த அகழியின் சுற்றளவு ஏறத்தாழ எட்டாயிரம் அடி ஆகும். அகலம் நூற்றுதொண்ணூறு அடி. கி. பி. 1921-ம் ஆண்டு எடுத்த கணக்குப்படி இதன் ஆழம் இருபது அடி. அகழி தோண்டப்பட்ட தொடக்கக்காலத்தில் இதன் ஆழம் இதை விட அதிகமாக இருந்திருக்கக்கூடும் என புவிஇயல் நிபுணர்கள் கருது

கிறார்கள். ஆனுல் தற்போது இதன் ஆழம் பதினைந்து அடி முதல் பதினெட்டு அடியாக உள்ளது.

இக்கோட்டைக்கு எழில் மிகு அரணாகவும், ஆரமாகவும் விளங்கிய ஆழமான அகழி, கோட்டையை நெருங்கி வரும் எதிரிகளுக்கு எமனாகவும் இருந்து வந்தது. இவ்வகழியில் எண்ணற்ற பயங்கர முதலைக் கூட்டத்தை அக்கால அரசர்கள் உலாவவிட்டு வந்துள்ளனர். இவைகளுக்கு ஆடு, மாடு, கோழி போன்றவைகளை தினந்தோறும் இரையாக போடப்பட்டு வந்தன. தப்பித் தவறி யாராவது அகழியில் ஆனந்தமாக நீந்தி குளித்தாலோ, அல்லது அகழியில் விழுந்துவிட்டாலோ, முதலைக் கூட்டங்களில் இருந்து தப்பிவெளியில் வர முடியாதாம்.

பின்னர் ஆங்கிலேயர்கள் இவ்வழகுமிகு கோட்டையை முற்றுகையிட்டு பிடித்து அரசாளும் காலத்தில் இவ்வகழியில் உள்ள முதலைகளுக்கு ஆடு, மாடுகளோடு மரணதண்டனை நிறைவேற்றப் பட்ட கைதிகளின் உடல்களையும் இரையாக வீசி வந்ததாகவும் கூறப்படுவதுண்டு. அதன்பிறகு இத்தகைய கைதிகளைத் தூக்கிலிடாமல், அவர்களை உயிரோடு இந்த அகழியில் தள்ளி முதலைகளுக்கு இரையாக்கி உள்ளனராம். காலப்போக்கில் முதலைகளுக்கு இரைபோடுவதில் பிரச்சனை உண்டாகி கோர்ட்டுகளில் சிறிய குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டால். அவர்களை அந்த தொகைக்கு ஈடாக ஆடு, மாடு, கோழி முதலியவைகளை கொண்டு வரச்சொல்லி, அகழியில் வீசி வந்ததாகவும், அதன்பின் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரருக்கு பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் ஆடு, மாடு மற்றும் பொருட்களை அகழியில் வாழும் முதலைகளுக்கு இரையாக போட்டால், அவர்களுக்கு புண்ணியமும், பலனும் உண்டாகும் எனக்கூறி மக்களை ஏமாற்றி முதலைகளுக்கு தீனிப்போட்டு வந்ததாக ஒரு தகவல் கூறுகிறது.

இவ்வளவு பெரிய அகன்ற ஆழமான அகழியை அமைக்க தோண்டி எடுக்கப்பட்ட மண் மலையைப்போல் குவிந்திருக்குமே. அவற்றை எங்கு கொண்டு போய் கொட்டினார்கள் ? என்ற வினா எழும்புவது எல்லோருக்கும் இயற்கை. அந்த மண்களின் பெரும் பகுதி, பெரிய பெரிய பாராங்கற்களால் உருவாக்கபட்ட இரண்டு கோட்டை மதில்சுவர்களின் இடையிலும், மீதமுள்ள கொஞ்ச மண் கோட்டையைச்சுற்றியுள்ள திறந்தவெளி மைதானத்திலும் கொட்டப் பட்டுள்ளது. பொதுவாக வெளியிலிருந்து இக்கோட்டையைப் பார்ப்பதற்கு, கருப்புநிற பாறாங்கற்களாலான கருங்கல் கோட்டை போன்று தோன்றும். ஆனல் உண்மையிலே, இக்கோட்டை பெரிய பெரிய கற்களால் சேர்த்தப்பட்ட அகன்ற சுவர்களை உடைய உறுதியான மண் கோட்டை ஆகும்.

## ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில்

அக்காலத்தில் இரவு, பகலென்று, பாராத சிறு, சிறு குன்றுகளென நடமாடிக்கொண்டிருந்த யானைகளின் பிளிறல் குதிரைகளின் கனைப்பு,உருண்டோடும் இரதங்களின் இரைச்சல், காவலர்கள் ஊதும் எக்காளங்களின் ஒலி ஆகியவற்றில் மூழ்கிக்கிடந்த கோட்டையின் வட கிழக்கு ஈசான மூலையில் கலைக்கூடமாகத் திகழும் அருள்மிகு ஜலகண்டேஸ்வரரின் திருக்கோயில் அமையப் பெற்றுள்ளது. இத்திருவாலயத்திற்கு கோபுரங்கள் உண்டு. குளங்கள் உண்டு. புண்ணியத் தீர்த்தங்கள் உண்டு. கோயிலை நிர்வகிக்க மன்னர்களால் எழுதி வைத்த மானியங்களும் உண்டு. ஆனால், காலக்கட்டத்தில் இவை இருந்தும் இல்லாமலும். இருந்த காலங்களும் உண்டு. இக்கோட்டையின் பிரதான வாயிலின் வழியாக உள்ளே நுழைந்ததும் இடதுபுறத்தில் இன்று காணப்படுவது பொதுப்பணித்துறை ஊழியர்களின் மனமகிழ் மன்றம். அதன் உள்ளே நீண்டசதுர

வடிவத்தில் 'டென்னிஸ்' விளையாட்டு மைதானம் உள்ளது. இந்த மைதானம் தான் இத்திருவாலயத்தின் அன்றைய சிம்மக் குள-மாகும். இக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் இக்குளத்தில் இறங்கி கால், கைகளைக் கழுவிக்கொண்டு கோயிலுக்குச் செல்-வார்களாம். இது போல், அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில்முன் காணப்படும் காவல் துறையினரின் பயிற்சி மைதானம் தான் அக்காலத்தில் தெளிந்த நீரும், ஆம்பலும், தாமரையும் பூத்துக் குலுங்கிய சந்திரக் குளம். கோட்டையின் **தென்திசையில்** 'சூரிய குள மேடு' என்று இன்றழைக்கப்படும் இடம் தான் கோயிலின் அன்றைய சூரியக் குளமாக இருந்துள்ளது. இக்குளத்-தில் தேக்கி வைக்கப்படும் நீரைக் கொண்டு கோட்டை அகழி, மற்றும் குளங்களை அவ்வப்போது நீரினால் நிரப்பி வந்துள்ளனர்.

இதிகாசங்கள், புராணங்களில் வரும் கதைகள் போன்று இக்கோயிலையும், இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானையும் பற்றி பக்தர்களும், மக்களும் பல்வேறு கதைகள் கூறுகின்றனர். கி.பி. 16-வது நூற்றாண்டில் வேலூரும், அதன் சுற்றுப்புறப் பகுதி களும் மன்னர் பொம்மி ரெட்டியின் ஆணைக்குட்பட்ட சிறு நாடாக இருந்துள்ளது. இவருக்குச் சொந்தமான பல நூறு பசுக் கள் அடங்கிய ஒரு பெரிய மாட்டுப் பண்ணை இருந்ததாம். அந்த மாட்டுப் பண்ணையில் உள்ள ஒரு கறவைமாடு காலையில் அதிக அளவு பால் கறந்து வந்தது. ஆனால் நாள் முழுவதும் காட் டில் உள்ள பச்சைப் புற்களை மேய்ந்துவிட்டு வீடு திரும்பும்போது வற்றிய மடியுடன் காணப்படுவது வழக்கமாம். இதனால், மாடு மேய்க்கும் பணியாள் மீது மன்னர் பொம்மி ரெட்டிக்கு ஐயம் உண்டானது. அப்பணியாளரை அழைத்து விவரத்தைக் கூறி மன்னர் கண்டித்தாராம். அரசரின் கோபத்திற்கு ஆளான அப்பணி யாள் அந்தக் குறிப்பிட்ட பசுவை அன்று முழுவதும் பின் தொடர்ந்து கண்காணித்து வந்தார். மாட்டு மந்தையோடு நின்று

மேய்ந்துக் கொண்டிருந்த அப்பசு மாலை வெயில் நேரத்தில் தனி யாகப் பிரிந்து அருகிலுள்ள ஓர் புதருக்குள் சென்றது. அங்கு புல் புதர்களாலும், முட்செடிகளாலும் மூடிக் கிடந்த ஒரு பழைய பாம்புப் புற்றின் அருகில் போய் அந்த பசு நின்றது.

## ஐந்து தலை நாகம்

உடனே, அப்பாம்புப் புற்றிலிருந்து ஐந்து தலை நாகப்பாம்பு ஒன்று வெளியில் வந்ததாம். அருகில் நின்ற அப்பசுவின் மடியில் அப்பாம்பு வாயை வைத்து பாலை உறிஞ்சிக் குடித்தது. இவ்வதி சயக் காட்சியைக் கண்ட மாடு மேய்க்கும் அப்பணியாள் அப் படியே மயங்கி விழுந்து பின் மயக்கம் தெளிந்து தான் கண்ட கண்கொள்ளாக் காட்சியையும், மாலைதோறும் மாடு பால் வற்றிய மடியுடன் திரும்பும் காரணத்தையும், மன்னரிடம் எடுத்துக் கூறினான். மறுநாள் மாடுகள் எல்லாம் காட்டுக்குள் மேயச் சென்றதும், ஒருவரும் அறியாமல் மன்னர் பொம்மிரெட்டி அம்மாட்டைக் கண்காணித்தார். மாலை நேரம் வந்ததும் பணியாள் கூறியபடி பசு புதருக்குள் சென்றது. அங்கு பசுவின் மடியில் பாம்பு பால்குடிக்கும் அற்புதத்தை அரசர் கண்டு அதிச யித்துப் போய்விட்டார். அதன் பிறகு பொம்மிரெட்டி தன் குலதெய்வத்தை வணங்கி அந்த அதிசய நாகத்தின் விருப்பம் என்னவென அறியவேண்டினார். அந்த இடத்தில் ஓர் கோட்டை யும் ஓர் திருவாலயத்தையும் எழுப்புமாறு ஆண்டவர் அவர் கனவில் தோன்றி அருள் வாக்கு அருளி மறைந்தாராம்.

மன்னர் பொம்மிரெட்டி அந்தப் பாம்புப் புற்றிற்கு மறுநாள் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ள அமைச்சர் பெரு மக் களுடன் அங்கு சென்றார். அப்போது அந்த நாகம் தோன்றி

கோட்டையையும், கோயிலையும் கட்டுவதற்கான ஒரு பெரும் புதையலைக் காட்டியதாம். பின்னர் கோட்டையையும், கோயிலையும் எங்கு நிர்மாணிப்பது என கண்டறிய அக்காட்டை அரசர் சுற்றிப் பார்வையிடும்போது அங்கு திடீரென்று ஓர் அழகிய மாய முயல் தோன்றியது. அம்முயல் ஓர் குறிப்பிட்ட இடத்தில் சுற்றி சுற்றி பல முறை ஓடிவிட்டு மாயமாக மறைந்து விட்டதாம். இக் காட்சியைக் கண்ட பொம்மிரெட்டி, அதன் அர்த்தத்தையும், நோக்கத்தையும் தெரிந்து கொள்ள தன் குல தெய்வத்தை வேண்டினார். அன்று இரவு இறைவன் அவர் கனவில் மீண்டும் தோன்றி முயல் சுற்றி வந்த பகுதியில் ஜலகண்டேஸ்வரரின் திருவாலாயத்தை அமைக்கும்படியும், இக்கோயிலையும், கோட்டையையும் ஒன்பது ஆண்டு காலத்திற்குள் கட்டி முடிக்கும்படியும் கூறி மறைந்து விட்டாராம்.

## தந்தை - தனயன் இணைத்த இடம்

ஆண்டவரின் திருக்கட்டளைப் படி இக்கோட்டையையும், திருக்கோயிலையும் கட்ட மன்னர் பொம்மிரெட்டி ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் காலத்தில் தென்னாடு யாத்திரையை முடித்துக் கொண்டு கணபதி ஸ்தபதி (சிற்பி) என்பவர் இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. பொம்மிரெட்டியை இவர் சந்தித்து ஆண்டவரின் அசரீரி வாக்குப்படி இங்கு எழுப்பப்படும் கோயில் எந்த முறையில் நிர்மாணிப்பது என்பது பற்றி ஆலோசனை கூற தான் இங்கு வந்ததாகவும், அவர் தெரிவித்தார். இவரது வருகைக்காக காத்துக் கொண்டிருந்த பொம்மிரெட்டி அவரது நல்லாலோசனைகளின்படி கோயிலைக் கட்டத் தொடங்கினார். சிறிது காலம் சென்றதும், கோயிலில் கட்டிட வேலைகள் எல்லாம் முடிந்து விக்கிரகங்கள், மற்றும் உட்புற அமைப்புகள் அமைக்கும் நேரம் வந்தது. ஒருநாள் பொம்மிரெட்டியும், கணபதி சிற்பியும் கோயில்

ப்ரகாரங்களை எவ்வாறு அமைப்பது என்று ஆலோசித்துக்கொண்டு இருக்கும்போது அங்கு ஒரு இளம்சிற்பி வந்தார். கோயிலின் கட்டுமானப் பணியை அவர் பார்வையிட்டு விட்டு இவர்களின் வார்த்தைகளை அவர் காது கொடுத்து கேட்டதாகச் சொல்லப் படுகிறது.

இத்திருவாலயத்திற்கு கால்கோள் விழா எடுத்த நேரத்தில் சிற்பம் மற்றும் கட்டிடக் கலைச் சாஸ்திரப்படி சிறு தவறு நேர்ந்துளளது என்றும் இக்கோயிலில் கருவூலப் பகுதியில் உள்ள ஓர் கல்லுக்குள் 'தேரை' குடியிருப்பதாகவும் அவர்களிடம் அந்த இளஞ்சிற்பி கொஞ்சமும் பயமின்றி துணிவுடன் எடுத்துரைத்தார். இதைகேட்ட கணபதி சிற்பியும் மன்னரும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி சிறிது நேரம் தங்களை மறந்தார்களாம். பின்னர் கணபதி சிற்பி அவ்விளஞ்சிற்பியிடம் எந்தெந்த சாஸ்திரம் முறையில் தவறுகள் நேர்ந்துள்ளன என விளக்குமாறு அவர் அறிந்த சாஸ்திர முறையில் கேட்டாராம். உடனே அவ்விளஞ்சிற்பி ஓர் குறிப்பிட்ட சூத்திரத்தைக் கூறி அதன்படி இவ்வாலய அமைப்பில் தவறு உள்ளது என்று எடுத்துரைத்தார். அதைக் கேட்டதும், கணபதி சிற்பி நேர்ந்துவிட்ட தவறை ஒப்புக்கொண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார். கோயில் கட்டப்பட்டுவிட்டது. இப்படியே பிரதிஷ்டை செய்தால் என்ன பலன் உண்டாகும் என்று கணபதி சிற்பி இளம்சிற்பியிடம் மீண்டும் வினவினார். அதற்கு அவ்விளம் சிற்பி "இத்திருவாலயத்தில் தெய்வ வழிபாடு தொடங்கி வைக்கும் காலத்திலிருந்து தொன்று தொட்டு தொடர்ச்சியாக வழிபாடு நடைபெறாது. இடையில் இரண்டு தடவை தெய்வ வழிபாடு தடைபட்டு "சாமியில்லாத கோயில்" என்ற அவப்பெயரைப் பெறும். அதன்பிறகு சில ஆண்டுகள் கழித்து மீண்டும் தெய்வ வழிபாடு தொடங்கி அது சந்திர, சூரியர் இருக்கும் காலம் வரை சிறப்புற நடைபெறும் என்று எடுத்துரைத்தார்.

சிறுவன் இவ்வளவு துல்லியமாக கணக்கிட்டுக் கூறியதையும் தனக்கும், தன் மனைவிக்கும் தெரிந்த விசேஷ சூத்திரத்தை இளம்சிற்பி பயன்படுத்தியதையும் கண்ட கணபதி ஸ்தபதி (சிற்பி) அவனது பிறப்பு வரலாற்றை வினவினார். "என் சொந்த ஊர் ஆந்திராவில் உள்ளது. தகப்பனார் பெயர் கணபதி ஸ்தபதி என்றும், தென்னாட்டு யாத்திரைச் சென்ற அவர் பல்லாண்டு காலமாகியும் ஊருக்குத் திரும்பி வரவில்லை எனவும், அவரைத் தேடி தான் சென்றுக் கொண்டிருப்பதாகவும், அவ்விளம்சிற்பி பதில் கூறினார். இதனைக் கேள்விப்பட்டதும் கணபதி ஸ்தபதி ஆனந்த கண்ணீர் விட்டு தனது ஆருயிர் தனயனை அரவணைத்துக் கொண்டார். அதிலிருந்து இத்திருக்கோயிலுக்கு "தந்தையையும் தனயனையும் இணைத்து வைத்த இடம்" என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று. பிற்காலத்தில் குடும்பத்தில் யாராவது பிரிந்தால், அவர்கள் வந்துசேர, பிரார்த்தனை செய்யும் புண்ணிய ஸ்தலமாக இது விளங்குபது இச்சிறப்புமிக்க திருக்கோயிலின் பெருமையைப் பற்றி கூறப்படும் இரண்டாவது கதையாவது :-

## ராமேஸ்வரம் போகும் வழியில்

விஜயநகர பேரரசின் ஆட்சிக்கும், ஆணைக்கும் உட்பட்ட பொம்மிரெட்டி சுமார் 450 ஆண்டுகளுக்கு முன் ராமேஸ்வரம் செல்லும் வழியில் இங்கு வந்தார். அப்பொழுது இந்தப் பகுதியில் புல்லும் புதரும் அடர்ந்த பெருங்காடாக உள்ளது. இந்தபகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் அவரும், அவரோடு கூட வந்தவர்களும் சில நாட்கள் தங்கினார்கள். ஒரு நாள் மன்னர் பொம்மி ரெட்டி அருகாமையிலுள்ள இந்தக் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றார் அப்போது அவருடன் வேட்டை நாய்களும் சில சென்றன.

அந்த புல்லும் புதரும் நிறைந்த காட்டில் அவருடன் சென்ற ஒரு வேட்டை நாய் ஒரு முயலைக் கண்டு துரத்தியது. அம்முயல் பயந்து அங்குமிங்கும் ஓட, நாயும் விடாமல் அதைத் துரத்தியது. இவ்வாறு நடந்த நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு முயல் சென்றதும், திடீரென்று அம்முயல் அவ்வேட்டை நாயை நோக்கி துள்ளி எகிறித் தாக்கத் தொடங்கியதாம். அக்காட்சியை பார்த்த பொம்மி ரெட்டி ஆச்சரியத்தில் மூழ்கினார். அவருடைய வாழ்நாளிலேயே இது போன்ற அதிசயச் சம்பவத்தை அதுவரை பார்த்ததில்லை. அன்று இரவு அவர் கனவில் நாயை முயல் துரத்திய இடத்தில் ஒரு லிங்கம் புதைந்து கிடப்பதாகவும், அதோடு, கோட்டை முன் உள்ள மலையில் ஒரு பெரும் புதையல் இருப்பதாகவும் இறைவன் தெரிவித்தார். இறைவனின் திருவாக்கிற்கேற்ப அப்புதையலைத் தோண்டியெடுத்து, முயல் வேட்டை நாயை திரும்பித் தாக்கிய இடத்தில் பூமிக்குள் மறைந்து கிடந்த சிவலிங்கத்தை வெளியில் எடுத்து, இக்கோட்டையையும், கோயிலையும் அங்கு கட்டினாராம்.

இவ்வாறு கோட்டையையும், கோயிலையும் இணைத்து பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன. இருப்பினும், இந்தக் கோயிலின் உயிர் நாடியான **சிற்பங்களும்** அபூர்வமாகக் காணப்படும் கோபுரங்களின் அமைப்பும், அவற்றைப் பார்த்து மகிழ்பவர்களின் உள்ளத்தில் இறைவனின் பெருமையையும் அக்கால சிற்பிகளின் ஒப்பற்ற திறமையையும் எடுத்து விளம்பிக்கொண்டு இருக்கின்றன.

## மஞ்சு விளையாடும் கோபுரம்

சிறப்பு மிக்க கோட்டையின் ஈசான மூலையில் நான்கு புறமும் அகன்ற இடைவெளிவிட்டு இத்திருவாலயம் நீண்ட சதுர அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது. இக்கோவிலுக்கு

மஞ்சு கொஞ்சி விளையாடும் விண்ணைமுட்டும் கோபுரமும் விஜய நகர பேரரசு காலத்தில் நிர்மாணிக்கப் பட்டதற்குச் சான்றாக விளங்கிக்கொண்டிருக்கும் திறந்தவெளி பிரகாரங்களும் உண்டு. தவிர, **தாமரைத் தடாகம்** புண்ணிய தீர்த்தம், விழாக்கால மண்டபங்கள், உற்சவ மூர்த்திகள் மற்றும் பல்வேறு அம்சங்கள் சாஸ்திர படி இருந்துள்ளன என்பதைச் சான்றுகள் மூலம் காணமுடிகின்றன. கோயிலின் முன் போய்நின்றதும், நாம் காண்பது விசுவரூபம் எடுத்தாற்போல் இருபுறங்களிலும் நிறுத்தப்பட்டிருக்கும் காவல் தெய்வங்களான துவாரபாலர்கள் சிலைகள் தான்.

அதையடுத்து, காணப்படுவது ராஜகோபுரம். இத்தனை ஆண்டு காலமாகியும், கொஞ்சமும் உருக்குலையாமல் நிலை குலையாத வீரன் போல் இன்றும் அது கம்பீரமாய் தோற்றமளித்துக் கொண்டு நம்மை அதிசயிக்க வைக்கிறது. இக்கோபுரம் ஏழு நிலைகளைக் கொண்டது. கோபுர முகத்துவாரத்திற்கு உயரே சுமார் 80 அடி உயரம் உள்ளது. ஒவ்வொரு நுழை வாசலின் இரு பக்கங்களிலும் ஒவ்வொரு பெண் உருவம் அமைக்கப்பட்டிருக்கிறது. கோபுர விமானத்தின் தெற்கு, வடக்கு பக்கங்களில் கலைகள் சிந்து பாடும் வகையில், மலர் மங்கைகள் கொண்ட சிற்பங்கள் நிறைந்ததாக அமைக்கப்பட்டு இருக்கின்றன.

## கலை மிளிரும் கல்யாண மண்டபம்

இத்திருவாலயத்தின் அழகுக்கும், பொலிவுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போல் அமையப் பெற்றிருப்பது கல்யாண மண்டபம் ஆகும். வெளிப் பிரகாரத்தில் ராஜ கோபுரம் அருகே தென் மேற்கு மூலையில் எழுப்பப்பட்டிருக்கும் இதைக் கல்யாண மண்டபம் என்று கூறுவதை விட, சிற்பக் கலையின் திறனும், பொலிவும் துள்ளி விளையாடும் கலைக் கூடம் என்று வர்ணிப்பது சாலப் பொருத்தமாகும். ஆம்! அத்தனை அழகு மிகு சிற்பங்கள்

இம்மண்டபத்திலுள்ள தூண்களிலும், மேல் கூரையிலும் சிற்ப வல்லுனர்கள் வடிவமைத்து இருக்கின்றனர். இந்த கல்யாண மண்டபத்தில் 32 பெரிய தூண்களும், 16 சிறிய தூண்களுமாக மொத்தம் 48 தூண்கள். முன் வரிசையில் இருகோடி தூண்களையும் நீக்கி, வெளிப்புறமாக காட்சி அளித்துக்கொண்டிருக்கும் மீதமுள்ள 6 பெரியகல் தூண்களும், விசேஷ சிற்ப வேலைப்பாடுகளுடன் அமையப் பெற்றுள்ளதாத இருக்கின்றன.

ஒவ்வொரு தூண்களிலும் அசுர வேகத்துடன் வரும் குதிரைகளின்மீது வீரன் ஒருவன் அமர்ந்து சிறுத்தையை வேட்டையாடும் காட்சி சித்தரிக்கப் பட்டு இருக்கிறது. இங்குள்ள தூண்கள் ஒவ்வொன்றும் மூன்று தளங்களை உடையதாக உள்ளது. ஒவ்வொரு தளமும் நான்கு பக்கங்களைக் கொண்டு பக்கத்துக்கு ஒரு சிற்பமாக இருக்கிறது. மூன்றாவது தளத்துக்கு மேல் தவழ்ந்து வரும் பொதிகை உள்ளது. தவிர, மண்டபத்தில் உள்ள தூண்களில் சிவன் மூர்த்திகள், நரசிம்ம அவதாரம், மச்சாவதாரம் ராமாவதாரம், மயிலேறும் வேலவன், ஆனை முகத்தவனின் மாறுபட்ட உருவங்கள், லட்சுமி, சரஸ்வதி மற்றும், அநுமார், வராகம், சிங்கம், யானைகள், யாழிகள், எண்ணற்ற தெய்வ மாதுகள் போன்றவைகள் கண்ணுக்கும் கருத்துக்கும் வண்ணம் கொடுக்கும் வகையில் உள்ளன. எங்கும்பார்க்கமுடியாத இத்தகைய கலை நுணுக்கங்கள் நிறைந்த சிற்பங்கள் இந்திய சிற்பக் கலைக்கே பெருமைதேடித் தந்து கொண்டிருக்கின்றன.

மண்டபத்தின் மேல் விதானத்தில் மலர்ந்து விரிந்து தாமரை மலரின் ஒவ்வொரு இதழ்களையும் கொஞ்சும் கிள்ளைகள் மேல் நோக்கியும், தலை கீழாகவும் தங்கள் அலகினால் கொத்தி, வட்டமாககுழல்வது போன்று ஒரே கல்லில் அமைந்திருப்பது அற்புதமாக

உள்ளது. இந்த கல்யாண மண்டபத்தை ஒரு முறைவலம் வந்தால் உலக மூர்த்திகளை எல்லாம் வணங்கி, பூஜித்த பலன் கிடைக்கும் வகையில் இம்மண்டபம் அமைக்கப்பட்டு இருப்பதாகக் கூறுவர்.

## திருக்கல்யாண மண்டபத்தை லண்டன் கொண்டு போக முயற்சி

கடந்த நூற்றாண்டில் 1915-1916-ம் ஆண்டில் புதைபொருள் ஆராய்ச்சித்துறை மேற்பார்வையாளர் திரு. லாங்கர்ஸ்ட் (Mr. Longhurst) என்னும் ஆங்கிலேயர் " மதுரையிலும், விஜய நகரத்திலும் மற்றும் வேறு பல இடங்களிலும் உள்ள புகழ்வாய்ந்த ஆயிரங்கால் மண்டபங்களைவிட வேலூர் கோட்டை ஸ்ரீ ஜல கண்டேஸ்வரர் கோயிலில் அமைக்கப்பட்டிருக்கும் திருக்கல்யாண மண்டபம் சிறியதாக இருந்தாலும், தென் இந்தியாவிலே உள்ள மிகவும் கலை அழகு வாய்ந்த மண்டபம் என்பது என் பணிவான அபிப்பிராயம் " என்று ஒரு குறிப்பில் எழுதியுள்ளார்.

வேலூர் கோட்டையை கைப்பற்றிய கும்பினி ஆட்சியாளரின் தளபதி ஒருவர் இக்கல்யாண மண்டபத்திலுள்ள தூண்கள் மற்றும் உள்ள பாகங்களுக்கும் தனித்தனி எண்களைக் கொடுத்து அப்படியே பெயர்த்து கப்பலில் லண்டன் பிரைட்டன் கலைக்கூடத்தில் வைக்க திட்டமிட்டாராம். லண்டனுக்கு ஏற்றி செல்லவந்த கப்பல் கடலில் மூழ்கிவிட்டதால் திருக்கல்யாண மண்டபம் பெயர்த்து எடுக்கப்படாமல் தடைபட்டது என வரலாறு ஒன்றும் இத்திருக் கல்யாண மண்டபத்திற்கு உண்டு.

இந்த கண் கொள்ளா காட்சியைக்கண்டு மகிழ்ந்து கொண்டு வெளிப் பிரகாரத்தை வலம் வந்தால், இயல், இசை, நாடகம் நடைபெறும் வசந்த மண்டபம் வருகிறது. அதையடுத்து வேதம் ஓதும் யாகசாலை. ஆண்டுக்கு ஒருமுறை நடராஜரை அலங் கரித்துவைக்கும் ஆருத்திரா மண்டபம், மடப்பள்ளி, சிவகங்கை தடாகம் (தோண்டப்பட்ட குளம்) ஆகியவைகள் உள்ளன. இதைக் கடந்து இரண்டாம் பிரகாரத்தில் பிரவேசித்தால் ஆனை முகத்தோன், அன்னை அகிலாண்டேஸ்வரி, மற்றும் விக்ரகங்-களை அபிசேகம் செய்யநீர் எடுக்கக் கூடிய புண்ணிய தீர்த்தக் கிணறு வருகிறது.

## *சிவலிங்கம்*

கர்ப கிரகத்தையொட்டி மூடிய உட்பிரகாரம் உள்ளது. அங்கு தான் அத்திரி முனிவரால் பூஜிக்கப்பட்டு, பின் பாம்பு புற்றால் மூடி, பொம்மிரெட்டியால் வெளிப்பட்ட சிவலிங்கம் இருக் கிறது. கற்கோட்டைப்போல் கட்டப்பட்டிருக்கும் இக்கர்ப கிரகத்தை யொட்டிய பிரகாரத்தில் பஞ்சகோஷ்ட விக்ரகங்களான நர்த்தன கணபதி, தட்சிணாமூர்த்தி, லிக்கேஸ்வரர், பிரம்மா துர்க்கை, சண்டீஸ்வரர் ஆகியவைகள் இருந்த இடங்களும், 63 நாயன்மார்கள் வைக்கப்பட்டிருந்த இடங்களும் உள்ளன. இது தவிர, திருவிழாக் காலங்களிலும், உற்சவத்தின் போதும் உற்சவ மூர்த்திகள் வீதிகளில் உலாச்சென்று வரக்கூடிய திட்டி வாசலும், கொடி மரமும், மக்கள் நெரிசல் காலத்தில் மாற்று வழியில் செல்லக் கூடிய வடக்கு வாசலும் இங்கு இருக்கின்றன.

மேலும் கோயிலின் மூலஸ்தானத்தின் மேல் அமைக்கப்பட்டி ருக்கும் ஈஸ்வரர் கோபுரமும் அதன் விதானமும், நாலா பக்கங்க ளில் இருந்து ஐந்து தலை நாகப் பாம்புகள் அவற்றை தாங்கி சுமந்துக் கொண்டிருப்பது போல் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது.

இக்கோபுர கலசத்தை நாக கலசம் என்றும், இதுபோன்ற அரிய அற்புத நாக கோபுர கலசம் கோயில்களில் காணப்படுவது மிகவும் அபூர்வம் ஆகும். அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கற்பகிரகம் (மூலஸ்தானம்) இருக்கும் இடத்தில் அக்காலத்தில் ஒரு பழைய பாம்பு புற்று இருந்தது என்றும், அந்த பாம்பு புற்றைச்சுற்றி யுள்ள தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்கி ஒரு சிறு குளம் போல் காட்சி அளித்துக் கொண்டு இருந்ததாம். "வானுலக தேவர்களும், முனிவர்களும் பூஜித்து வணங்கி வந்த சிவலிங்கம் அப்புற்றுக்குள் புதைந்து கிடக்கிறது. அவற்றை வெளியில் எடுத்து அந்த இடத்தில் ஒரு ஆலயத்தை நிர்மாணிக்கவும்" என ஒரு நள்ளிரவில் மன்னர் பொம்மி ரெட்டி கனவில் இறைவன் இயம்பி சென்றாராம். ஆண்டவன் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு மறுநாள் மந்திரிகள் மற்றும் பரிவாரங்களுடன் மன்னர் அங்கு சென்று, குளத்தின் மத்தியில் காணப்பட்ட பாம்பு புற்றினை உடைத்து, தோண்டி பார்த்தாராம். இறைவாக்கின்படி அங்கு சிவலிங்கம் காணப்பட்டதும் மன்னர் மற்றும் அங்கிருந்த அனை வரின் உள்ளங்களும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியதாம். நான்கு புறங்களிலும் ஜலத்தினால் (தண்ணீரினால்) சூழப்பட்டு அவற்றின் மத்தியில் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டதால் இதற்கு ஜல கண்டேஸ்வரர் என பொம்மி ரெட்டி பெயர் சூட்டி, அங்கு இக் கோயில் எழுப்பி வழிபாடு செய்து வந்ததாகவும் இதற்கு ஸ்தல வரலாறு ஒன்று உண்டு.

## கோயிலின் மகிமை

இவ்வளவு அற்புதமாக சாஸ்திரப்படியும், கலை நிபுணத்துட னும் கட்டப்பட்ட இக்கோயிலின் அமைப்பைக் கண்ணுற்ற நாம் இக்கோயிலில் எழுந்தருளியுள்ள திருமறை நாயகனான சிவ பெருமானின் மகிமையையும் கேட்டறிய வேண்டாமா? இவ்வால

யத்தின் மகிமையைப் பற்றி பழங்காலம் முதற் கொண்டே மெய் சிலிர்க்க வைக்கும் பல்வேறு கதைகள் கூறப்பட்டு வருகின்றன

அவை வருமாறு :—

ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் வானவரும், விண்ணவரும் அகம் மகிழும் வகையில் பல நாட்கள் திருவிழா கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகும். இத்திருவிழா காலங்களில் இத்திருக் கோயிலின் நாயகரையும், அன்னை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியையும், மற்றும் மன்னர் குடும்பத்தினரையும் அக்கம் பக்கத்து க்ராமங்களில் உள்ள மக்கள் திரளாக வந்து வணங்கச் செல்வது உண்டாம். ஒரு இளவேனிற் கால திருவிழாவின் போது மரபுக்கு மாறாக கடும் புயலோடு மழையும் கொட்டியதாம். அருகாமையில் உள்ள பாலாறும் மற்றும் பல சிற்றோடைகளும் நீர் நிரம்பி கரைப்புரண்டோடின. இதனால், பல க்ராமங்கள் வெள்ளத்தில் மூழ்க எண்ணற்ற மக்களும், ஏராளமான கால்நடைகளும் செத்து மடிந்தன. அதோடு காலரா, பிளேக், விஷக்காய்ச்சல் போன்ற கொள்ளை நோய்களும் பரவி மக்களை வாட்டிவதைத்தன.

பெரும்பாலான மக்கள் உண்ண உணவின்றியும், பசியும் பட்டினியுமாக வெளியில் தலைக்காட்ட முடியாத நிலையில் வாடி வதங்கினார்கள். மனித குலமே இப்பகுதியில் வேரற்றுப் போய் விடுமோ என்ற அளவுக்கு வெள்ளம், பொங்கும் கடல் போன்று பெருக்கெடுத்து ஓடியது. பொன்னும், மணியும் மின்னும் வைரங்களால் அலங்கரிக்கப்பட்ட உற்சவ மூர்த்திகள் வெளியில் வர முடியாத நிலையில் கோயிலுக்குள்ளேயே அலங்கரித்து வைக்கப் பட்டு இருந்தனர். மக்கள் வெள்ளம் நிரம்பி வழிய வேண்டிய கோயில் அடை மழையினால் மனித சஞ்சாரம் இன்றி காணப்

பட்டது. இதைக் கண்ட தலைமை அர்ச்சகர் (குரு) மன வேதனை அடைந்து, ஸ்ரீ ஜலகண்டேஸ்வரரை வணங்கி வருண பகவானின் சீற்றத்தை குறைத்து, பொங்கி வரும் பாலாற்று வெள்ளத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றுமாறு இறைவனை வேண்டி சன்னதியில் மயங்கி விழுந்து விட்டாராம்.

## வறண்டு வாழ்வளிக்கும் பாலாறு

பின்னர் இறைவன் அவர் கனவில் தோன்றி, "பொங்கி பெருகும் பாலாற்றின் சீற்றம் தணிந்து, வற்றி வறண்ட ஆறாக அதுமாறி மக்களுக்கு பிற்காலத்தில் வாழ்வு அளிக்கும் என்றும், அழிந்த சிற்றூர்கள் ஒன்று சேர்ந்து பெரும் ஊராக மாறும் எனவும், கொள்ளை நோய்பரவி மக்கள் மடிந்தஇடம் உலகிலே நோய்தீர்க்கும் ஸ்தலமாக விளங்கும் என்றும்" அசரீரி வாக்காக இறைவன் கூறினாராம். ஆண்டவர் அருட்பாலித்த மொழியைக் கேட்டு அர்ச்சகர் கண்விழித்து எழுந்தபோது, புயலின் சீற்றம் அடியோடு ஓய்ந்து, மழைத்தூரலும் நின்று, கோபுரத்தின் மீது புள்ளினங்கள் எழுப்பும் குரல் கேட்டதாம். உடனே அர்ச்சகர் ஈஸ்வரரின் சன்னதியில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, ஸ்ரீ ஜலகண்டேஸ் வரரின் சக்தியையும், மகிமையையும் எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்டு உள்ளம் உருகி நின்றாராம்.

அன்று ஆண்டவர் அருளிய அருள் வாக்கினால் தான் இன்றும் பாலாறு வறண்டு காணப்படுகிறது என்றும், அவ்வாறு அது வறண்டு கிடந்தாலும், தாய்ப்பால் போன்று சுரந்து அதன் நிலத்தடி நீர் மக்களை வாழ வைத்துக்கொண்டு இருக்கிறது. மேலும் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றபழ மொழிக்கு ஏற்ப இந்நகரில் சி.எம்.சி, ஆஸ்பத்திரி தோன்றி சாதி, மத பேதமின்றி அனைவருக்கும் நோய் தீர்க்கும் ஸ்தலமாக திகழ்ந்து

கொண்டிருக்கிறது என்று இக்கோயிலின் மகிமையைப் பற்றி கூறப்படுகிறது. இதுபோன்று இவ்வுலக நாயகனின் மற்றொரு திருவிளையாடல் பற்றி கூறப்படுவதாவது:-

## எண்ணெய் தண்ணீரான அதிசயம்

அக்காலத்தில் இந்நகரில் (வேலூரில்) வணிகச் செட்டியார் ஒருவர் வசித்து வந்தாராம். இவருடைய முன்னோர்கள் பரம்பரை, பரம்பரையாக அருள்மிகு ஜலகண்டேஸ்வரரின் கொடி மரத்திற்கு அகல்விளக்கு ஏற்றி பூஜித்து வணங்கி வந்தனர். அவர்களுடைய வழி தோன்றலான சிவலிங்க செட்டியார் பிற்காலத்தில் இப்புதியப் பணியை ஏற்றுச் செவ்வனே செய்து வந்ததாக கூறப்படுகிறது. இவ்வாறு அவர் பூஜித்து வரும்போது ஒரு நாள் அந்தி மயங்கும் வேளையில் கொடிமரத்திற்கு விளக்கேற்றச் சென்றார். அப்போது அங்கு கடும் காற்றோ, மழையோ இல்லை. சிவலிங்க செட்டியார் மறையோனை மனதில் எண்ணிக் கொண்டு எப்போதும் போல் அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றி தீபத்தை ஏற்றினார். ஆனால் அகல் விளக்கு ஒளிவிட்டு எரியவில்லை. பலமுறை நெருப்பு குச்சியை உராய்ந்து விளக்கை ஏற்ற அவர் எவ்வளவோ முயன்று பார்த்தார். நெருப்பு குச்சிதான் ஒவ்வொன்றாக வீணானதே தவிர தீபத்தை அவர் ஏற்றின பாடு இல்லை. மனச் சஞ்சலத்துடன் அவர் விளக்கின் திரியை தூண்டிவிட விரலை நீட்டி திரியை தொட்டார் பனி மலை கட்டியை தொட்டது போன்று விரல் 'ஜில்' என்று குளிர்ச்சியின் பரிசத்தை உணர்த்தியது. அவருடைய விழிகள் அகல விரிந்து எண்ணெய் கொண்டு வந்த சின்ன கிண்ணத்தை நோக்கின. அங்கும் தண்ணீரே இருந்தது.

அறியாமல் ஏதோ தவறு நடந்துவிட்டது என எண்ணி அவர் மனம் வெதும்பினார். "ஆண்டவரே, அறியாமல் செய்த பிழையை மன்னித்து அருள் புரிவாயாக" என வேண்டியவாறு நொந்த

உள்ளத்துடன் அவர் வீடு திரும்பினார். அவ்வாறு அவர் திரும்பும் வழியில் கோயிலின் வாயிலைத் தாண்டி வரும்போது, எதிரில் முதுபெரும் வயதான கிழவர் ஒருவர், நீண்ட சடையுடன், நெற்றியில் விபூதி பட்டைகளுடன் உடலெல்லாம் விபூதி மணக்க காணப்பட்டார். அந்த கிழவர் தனது கையை நீட்டி "கொஞ்சம் எண்ணெய் கொடுக்கிறாயா ?" என்று கேட்டார். உடனே சிவலிங்கச் செட்டியார் தண்ணீர் இருந்ததை எண்ணிப் பார்க்காமல் கிண்ணத்தை சாய்த்து கிழவர் கையில் ஊற்றினார். அங்கு தண்ணீருக்குப் பதில் சுத்தமான நல்லெண்ணெய் இருந்ததாம். அங்கு கண்ட காட்சி கனவா ? அல்லது நினைவா ? என்று செட்டியார் எண்ணி குழம்பிய மனதுடன் வீடு சென்றடைந்தார். அன்று இரவு ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் அவர் கனவில் தோன்றி "காலவிதியின்படி சிறிது காலம் வெளியில் இருக்க வேண்டியது உள்ளது. எனக்குச் சேரவேண்டிய எண்ணையை கோயிலுக்கு வெளியே, கிழவர் வடிவில் நானே நேரில் வந்து உன்னிடம் பெற்றுக்கொண்டேன். சிறிது காலம் கழித்து உன் வம்சவழியினரால் மீண்டும் நான் எழுந்தருளுவேன். தினந்தோறும் என்னை பூஜித்து வணங்கி வந்த உன் குலம் கொடிமரம் போல் உயர்ந்தோங்கும்" என்று சொல்லி மறைந்து திருவிளையாடல் செய்ததாகவும் ஒரு சிறப்பு மிகு வரலாறும் இத்திருவாலயத்துக்கு உண்டு. மேலும் இக்கோயில் பற்றி கூறப்படும் மகிமையாவது.

## ஒளி கொடுத்த நாகமணி

பொம்மிரெட்டி நீதி தவறாது, நெறிமுறையோடு ஆட்சி-புரியும் காலத்தில் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் சீரோடும், செல்வச் செழிப்போடும் விளங்கிக் கொண்டிருந்தது. அந்நியர்களின் நாடு பிடிக்கும் பேராசையால் போர் மேகம் சூழ்ந்திருந்த நேரம், அன்று ஒரு நாள் அந்திமயங்கும் வேளையில்

அந்நியர்களின் படை 'திடீரென்று' கோட்டையை முற்றுகையிட வருவதாக ஒற்றர்கள் மூலம் மன்னருக்கு தகவல் வந்தது. உடனே கோட்டை மற்றும் நகரம் முழுவதிலும் இந்த செய்தி காட்டுத் தீ போன்று பரவி மக்களிடையே பதட்டமும், பரபரப்பும் உண்டாகியது. அதைத் தொடர்ந்து கோட்டையிலும், கோயிலிலும் ஏற்றிய விளக்குகள் எல்லாம் இறக்கப்பட்டு இருள் கப்பிக் கிடந்ததாம். அப்போது போர் வீரர்களையும் மற்றும் பாதுகாப்பு அரண்களில் இருப்போரையும் உற்சாகப்படுத்தும் வகையில் மன்னர் கோட்டைக்குள் சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டு வந்தாரம். அவ்வாறு வந்து கொண்டிருந்த பொழுது அவர் இறைவனை வழிபட கோயிலுக்குள் சென்றதாக கூறப்படுகிறது. அங்கும் எல்லா இடங்களிலும் விளக்குகள் இறக்கப்பட்டு காரிருள் குடி கொண்டிருந்தது. கோயிலை வலம் வந்த மன்னர் கர்ப்பகிரகத்தின் முன்னால் வந்து உள்ளே எட்டிப் பார்த்தாராம். அவருக்கு ஒரே ஆச்சரியம்! ஆச்சரியத்திலும் ஆச்சரியம் !! அங்கு சர விளக்குகளோ அல்லது விடியா விளக்கோ இல்லையாம். ஆனால் கர்ப்பகிரகம் முழுவதும் ஒளிநிறைந்து காணப்பட்டது. இதனால் பொம்மி ரெட்டி மலைத்துப் போய் உள்ளே உற்று நோக்கினார். பல்லாண்டு காலம் வாழ்ந்த குறுகிய நாகப் பாம்பு ஒன்று தன் வாயில் உள்ள விலை மதிக்க முடியாத ஒளி மிகுந்த நாகமணியை அங்கு கக்கி இருளில் ஈஸ்வரனுக்கு ஒளி வழங்கிக் கொண்டு இருந்ததாம். அந்த காட்சியை கண்டதும் ஈஸ்வர மூர்த்தியின் மகிமையை எண்ணி மன்னன் மெய்சிலிர்த்துப் போனாராம்.

## இருள் சூழ்ந்த காலம்

இரண்டாம் கர்நாடகப்போர் கி. பி. 1748 முதல் 1754-ம் ஆண்டு வரை ஏழு ஆண்டு காலம் நடந்தபோதிலும், ஆற்காடு

நவாப் சந்தா சாகிப்பை கி. பி. 1749-ம் ஆண்டு திருச்சியை அடுத்த ஸ்ரீரங்கத்தில் ஆங்கிலேயர்கள் உதவியால் முகமது அலி தூக்கிலிட்டு கொன்ற பிறகு, வடாற்காடு மாவட்டம் முழுவதும் ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது. அதிலிருந்து கி. பி. 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ம் நாள் இந்தியா சுதந்திரம் அடையும்வரை 198 ஆண்டு காலம், இந்த மாவட்டம் அவர்கள் ஆட்சிக்கு உட்பட்டே இருந்து வந்தது. ஏறத்தாழ இந்த இரண்டு நூற்றாண்டு காலம் இம் மாவட்ட மக்களுக்கு மட்டுமின்றி, இது இந்திய மக்கள் அனைவருக்குமே இருள் சூழ்ந்த காலம் ஆகும். இது நாட்டு மக்கள் மீது ஆங்கிலேயர் ஆட்சி என்னும் அடிமை விலங்கு பிணைக்கப்பட்ட காலம். 'பரங்கியர்கள்' என்னும் ஆங்கிலேயர்கள் தங்களை கிறிஸ்தவர்களாக மாற்ற முனைகிறார்கள் என்று இந்துக்கள் எண்ணி மனம் குமுறிக்கொண்டிருந்த வேளை, சிலை சிதைப்பாளர்களால் இந்து மதம் எங்கு அடியோடு வேரறுந்து விடுமோ என இந்துக்கள் அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த நேரம். அதே சமயம் இக்-கோட்டையின் நாலாபக்கங்களிலும் உள்ள நீண்ட, அகன்ற மதில்கள், அவற்றின் மீதுள்ள முக்கிய கேந்திரங்கள், மற்றும் கோட்டையின் வாயில் ஆகியவற்றில் ஆங்கிலேயர்களின் படைவீரர்கள் கையில் துப்பாக்கி ஏந்திய வண்ணம் மிடுக்காக அங்குமிங்கும் நடந்துகண்ணை, இமைகாப்பது போல், இக்கோட்டையை காத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வேளையில் இப்பகுதியில் உள்ள இந்து மதத்தினரை ஆங்கிலேயர்கள் அங்கு தங்கு தடையின்றி, தெய்வ வழிபாடு நடத்த அனுமதித்து இருப்பார்களா? என்பது வினாவிற்குரியது. அதோடு பரங்கியர்களின் பல்வேறு கெடுபிடிகளுக்கும், மற்றும் முழுவதும் மாறு பட்ட மதம், மொழி, இனமுடைய அந்நி-யர்கள் மத்தியில், இந்துக்கள் தங்கள் பெண்டு, பிள்ளைகளுடன் அவ்வளவு தைரியமாக சென்று, ஆலயத்தில் பூஜை நடத்தி,

தெய்வ வழிபாடு நடத்தியிருப்பார்கள் என்று இன்றும் நம்மால் எண்ணிப்பார்க்ககூட முடியவில்லை.

ஆனல் அதே வேளையில் சங்க நாதமும், தேன் மதுர தேவாரப்பாடல்களின் இனிய ஒலியும், அனைவரின் கவனத்தையும் இழுக்கக் கூடிய ஆலயமணியோசையும், கேட்க வேண்டியதற்கு பதில், அங்கு ஆங்கிலேயர்களும் மற்றும் இராணுவ வீரர்களும் அவ்வப்போது போர் ஒத்திகை பார்க்கும் பீரங்கிகளின் இடியோசையும், குறி வைத்து சுடும் துப்பாக்கிகளில் இருந்து சீறி பாயும் குண்டுகளின் முழக்கமும் தான் கேட்டுக் கொண்டு இருந்ததாக வரலாற்று ஆசிரியர்களின் வாயிலாக தெரிய முடிகிறது. அதோடு இவர்கள் காலத்தில் இக்கோயில் ஆயுத கிடங்காக பயன்படுத்தப் பட்டு வந்தது எனவும், இங்குதான் ஆங்கிலேயர் படைகளுக்கு தேவையான வெடிமருந்துகளும், நவீன போர் ஆயுதங்களும் சேமித்து வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தன எனவும் கூ ற ப் ப டு கி ற து. இத்தகைய எண்ணற்ற அதிசயங்களையும், அற்புதங்களையும் கொண்ட இக்கோயிலில் காலத்தின் கோலத்தால், விதியின் சதியால் சுமார் முன்னூறு ஆண்டு காலம், தீபமின்றி திருவிழாவின்றி, தெய்வ வழிபாடின்றி, வெண்ணிலா இல்லாத வானம் போல் இருந்து வந்தது. இப்பெரு நகரின் நாயகனாக விளங்கும் அருள்மிகு ஜலகண்டேஸ்வரரின் திருக்கோயிலில் மீண்டும் வழிபாடு தொடர இவ்விருபதாம் நூற்றாண்டில் பெரும் முயற்சிகள் பல்வேறு காலக் கட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

## தொல்பொருள் பாதுகாப்புத்துறை

இருபதாம் நூற்றாண்டு தொடக்கமான கி.பி. 1904ம் ஆண்டு ஆங்கிலேய அரசு தொல்பொருள் பாதுகாப்புத்துறைச் சட்டம் ஒன்று கொண்டு வந்தது. இந்த சட்டத்தின்படி, நூறு ஆண்டு-

களுக்கு மேற்பட்ட சிற்பவேலைப்பாடுகள் மிகுந்த அமைப்புகள், பாறைகள், குகைகள், கல் வெட்டுகள், கோட்டை, கொத்தளங்கள் மற்றும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், கட்டிடங்கள் போன்றவைகள், மற்றும் புராதான சின்னங்களாக கருதப்பட்ட அமைப்புகளும் அவற்றைச்சார்ந்த இடங்களும் தொல்பொருள்பாது காப்புத்துறையினரால் பாதுகாக்கப்பட வேண்டியது என்பது விதி. கி.பி 1921ம் ஆண்டு, மார்சுமாதம் 23ம் நாள் மத்திய அரசு ஆணை எண் 449 படி வேலூர் கோட்டையும், அதனுள் அமைக்கபட்டுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருவாலயமும் இந்த சட்டத்தின்படி தொல்பொருள் பாதுகாப்புத் துறையின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பின்னர் இந்தியத்தாய் திரு நாடு விடுதலை அடைந்ததும் இந்த சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பிற்காலத்தில் இந் நகர மக்கள் இத்திருவாலயத்தில் தெய்வ வழிபாடு நடத்த அனுமதி கோரிய பொழுதெல்லாம் தொல்பொருள் பாதுகாப்புத் துறையினர் இந்தசட்டத்தின் முக்கிய துணைவிதிகளைச் சுட்டிக் காட்டி அனுமதி மறுத்து வந்தார்கள். அதோடு என்னென்ன காரணங்களால் தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை பற்றியும் இத்துறையினர் குறிப்பிட்டு உள்ளார்கள். அதன் விபரம் வருமாறு :—

1 புராதான சின்னங்கள் மீது வர்ணம் பூசுதல், வெள்ளை அடித்தல், சிலைகளைக் கொண்டு வைத்தல் அல்லது சிலைகளை அப்புறப் படுத்துதல் போன்றவைகளால் அவற்றின் அழகுக்கும் எழிலுக்கும் பங்கம் விளையும்.

2 ஏராளமான பொது மக்கள், பக்தர்கள், பார்வையாளர்கள் கோவிலுக்கு வந்து தெய்வ வழிபாடு நடத்த நேரிடும். ஆதலால் ஏற்கனவே, உடைந்து கீறல் விழுந்துள்ள இக்கோயிலின் கலை-

யழகுமிகு கல்யாண மண்டபம், அதன் களங்கள் ஆகியவற்றிற்கு பாதுகாவல் இல்லாதுபோய் விடும்.

3 கோட்டைக்குள் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலகங்கள் செயல்பட்டு வருவதால், பக்தர்களும் பொது மக்களும் தெய்வ வழிபாடு நடத்த இக்கோயிலுக்கு வருவதன் மூலம் இங்கு வேலை செய்பவர்களுக்கு இடையூறுகளும், தொல்லைகளும் உண்டாகும்.

4 இந்திய புராதான கலை மற்றும் சிற்பங்கள் ஆகிய வற்றைப் பற்றி ஆராய்ச்சி நடத்த வரும் இந்துக்கள் அல்லாத குறிப்பாக வெளிநாட்டினரை இக்கோயிலுக்குள் செல்வதைத் தடை செய்ய நேரிடும்.

5 இந்த ஆலயத்தில் பல்லாண்டு காலம் இறை வழிபாடு இல்லாது இருப்பதால் இக்கோயில் ஒரு இறந்து போன கோயில். (DEAD TEMPLE) இங்கு தெய்வ வழிபாடு நடத்துவது சட்ட விரோதம் ஆகும்.

மேற்கண்ட காரணங்களை தொல் பொருள் பாதுகாப்புத் துறையினர் கூறி, இங்கு தெய்வ வழிபாடு நடத்த அனுமதி வழங்க மறுத்து வந்தார்கள்.

## நகரசபை உரிமை

இந்த கோட்டையை சுற்றியுள்ள அகழியில் மீன் பிடிக்க குத்தகைக்கு விடும் உரிமம் வேலூர் நகரசபைக்கா? அல்லது இந்திய தொல்பொருள் பாதுகாப்பு துறையினருக்கா? என்ற ஒரு பிரச்சனை எழுந்தபோது, இது சம்பந்தமாக 1942-ம் ஆண்டு மத்திய அரசுக்கு, மாநில அரசு விளக்கம் கேட்டு கடிதம் எழுதியுள்ளது. மத்திய அரசு அதற்கு 3—10—41-ந் தேதி எழுதிய

கடிதத்தில் 1935-ம் ஆண்டு இந்திய அரசு ஆணை 172-ன் படி வேலூர் கோட்டை, அதனுள் அமைந்திருக்கும் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில், இவற்றை சுற்றியிருக்கும் அகழி, அதை அடுத்திருக்கும் திறந்த புல்வெளி மைதானம் ஆகியவைகள் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது" என்று குறிப்பிட்டு இருந்ததாக, 8—1—1942-ந் தேதிய மாநில அரசு வருவாய் துறை கடித எண் 90-ல் உள்ளது.

மேலும் 1958-ம் ஆண்டு இந்திய தொல் பொருள் பாது காப்புத்துறை (Ancient monuments and Archealogical Sites and Remains Act 1958 Section 6-(1) ) சட்டப்படி வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் கோட்டை, கோயில், அகழி, அதை அடுத்துள்ள திறந்த புல்வெளி மைதானம் ஆகியவை சம்பந்தமாக தொல்பொருள் பாதுகாப்புத் துறையானது ஒரு ஒப்பந்தம் செய்திருக்கவேண்டும். ஆனால் 1958-ம் ஆண்டோ அல்லது அதற்குப் பிறகோ, அல்லது அதற்கு முன்போ எந்த ஒரு மாவட்ட ஆட்சித்தலைவர்களோ அல்லது இக் கோட்டையை கட்டியவர்களின் அதிகாரபூர்வமான வாரிசுகளோ, இத்தொல்பொருள் பாதுகாப்புத் துறையுடன், எந்த ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டதாக தகவலோ, குறிப்போ எதுவும் இல்லை. ஆனால் 14-10-1958ந் தேதி இத்துறையினர் வேலூர் நகரசபையுடன் அகழி, அதை சுற்றியுள்ள திறந்த புல்வெளி மைதானம் ஆகியவைகள் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயம் சம்பந்தமாக இத்துறையினர், எந்த காலத்திலும் யாருடனும், எந்த ஒரு ஒப்பந்தமும் செய்து கொண்டதாக எந்தவித ஆதாரங்களும் இருப்பதாக தெரியவில்லை.

மேலும் பொதுவாக இந்த சட்டத்தின்படி, தொல்பொருள் பாதுகாப்புத்துறையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு

அமைப்பும், அந்த பகுதியில் உள்ள அரசு ஆட்சியாளர்கள் (கலெக்டர்கள்) இத்துறையினருக்கு பத்திர (ரிக்கார்டு) அத்தாட்சி யுடன் எழுதி ஒப்படைக்க வேண்டும். வேலூர் கோட்டை, கோயில் ஆகியவற்றை பொறுத்தவரையில் எந்த ஆட்சியாளர்? எப்போது? எந்த தேதியில்? இவற்றை தொல் பொருள் பாதுகாப்புத்துறைக்கு ஒப்படைத்தார்? என்பது பற்றி ஆதார பூர்வமாக எந்த தகவலும் இருந்ததாகத் தெரியவில்லை.

## டாக்டர் மூஞ்சே தலைமையில் கமிட்டி

கி பி 1911-12 ஆம் ஆண்டு வேலூர் பொதுப் பணித்துறை இன்ஜீனியராக திரு ஆர் நரசிம்மாச்சாரி இருந்துள்ளார். இக்கோட்டையும் கோயிலும் அப்போது இத்துறையின் பராமரிப்பின் கீழ் தான் இருந்து வந்திருக்கின்றன. ஒரு நாள் இக்கோயில் கிணற்றில் அவர் 3 விக்கிரகங்களை கண்டெடுத்து அவற்றை விரிஞ்சிபுரம் கோயிலில் ஒப்படைத்துள்ளார் என்ற தகவல் குறிப்பு ஒன்று உள்ளது. அதன் பிறகு 1927-ம் ஆண்டு வரை 15 ஆண்டு காலம் இக்கோயிலில் தெய்வ வழிபாடு நடத்த யாரும் அவ்வளவு அக்கரையும், முயற்சியும் மேற்கொண்டதாக தகவலோ, குறிப்புகளோ, இல்லை. ஆனால், இந்த காலத்தில் "கோட்டை ஜலகண்டேஸ்வரர் கோயில் லிங்கம்" என்ற பெயரில் சத்துவாச்சாரி யில் இந்த லிங்கம் இருந்து வந்துள்ளது. 1928-ம் ஆண்டு இந்த சிவலிங்கத்தை, பஸ் கண்டக்டராக பணிபுரிந்த திரு. வி. எம். புருஷோத்தம் ஒருநாள் கண்டு இவ்வளவு பெரிய லிங்கம் இந்தச் சிறிய கோயிலில் எப்படி வந்தது? என ஆச்சரியமடைந்துள்ளார். அவர் உள்ளத்தில் அன்று எழுந்துள்ள உணர்ச்சியும், உத்வேகமும் இக்கோயிலின் மறுபிரதிஷ்டைக்கு வழிகோலும்படி அமைந்துள்ளது என கூறினால் அது மிகையாகாது. அதன் பிறகு சுமார் ஒன்பது ஆண்டு காலம் இந்த சிவலிங்கத்தை கோட்டை கோயிலுக்கு

கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து, இங்கு தெய்வ வழிபாடு நடத்த வேண்டும் என்பது இவருடைய எண்ணத்திலும் மற்றும் சிலருடைய எண்ணங்களிலும் இருந்ததேயொழிய அதை இவர்கள் செயல் வடிவத்தில் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை.

பின்னர் 1937-ம் ஆண்டு இப்பிரச்சனை இந்நகர மக்கள் உள்ளத்தில் மீண்டும் துளிர்விட தொடங்கியுள்ளது. அப்போது இங்கு இந்து மகாசபை செயலாளராகப் பணியாற்றிய திரு. ராமசாமி என்பவர் முதன் முதலில் இக்கோயிலில் மீண்டும் தெய்வ வழிபாடு நடத்த வேண்டும்என ஒரு கமிட்டி அமைத்தார். 1939-ம் வருடம் வரை இக்குழுவினர் அரசுடன் கடிதத்தொடர்பு கொண்டும், அதிகாரிகளை சந்தித்தும், கும்பாபிஷேகம் நடத்தவும் தெய்வ வழிபாடு மேற்கொள்ளவும் சாம, தான, தண்ட முறையில் முயற்சித்து உள்ளனர். அவையாவும் அன்று பலன் அளிக்க வில்லை. 1940-ம் ஆண்டு சேலத்தில் அகில இந்திய இந்து மகாசபை தலைவர் திரு. வீரவிநாயக தாமோதர்சாவர்கர் தலைமையில் நடந்த இந்து மகாசபை மாநாட்டில் "வேலூர் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் விக்கிரகங்களை நிறுவி, தெய்வ வழிபாடு நடத்த மத்திய மாநில அரசுகள் உடனடியாக அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள-வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதன்பிறகு கடந்த 1942-ம் ஆண்டு வேலூர் வந்த அகில இந்திய இந்து மகாசபை தலைவர் டாக்டர் பி. எஸ். மூஞ்சே தலைமையில் "கோட்டை அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் புணருத்தாரண கமிட்டி" என்ற அமைப்பு முறைபடியாக தொடங்கப்பட்டு உள்ளது. பதினான்கு ஆண்டுகளுக்கு முன் சத்துவாச்சாரியில் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் லிங்கத்தை எந்த இளைஞர் கண்டு வியப்புற்றாரோ அதே இளைஞரான திரு

வி. எம். புருஷோத்தம் இக்கமிட்டிக்கு ஆற்றல் மிக்க செயலாள ராக நியமிக்கப்பட்டார். ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலில் இந்த சிவலிங்கத்தை வைத்து மீண்டும் பிரதிஷ்டை நடத்த வேண்டும் என்று இவரும் மற்றவர்களும் எத்தனையோ முயற்சிகளை மேற் கொண்ட போதிலும், அவ்வளவும் விழலுக்கு இறைத்த நீரான கதையாக முடிந்தது.

## மூவாயிரம் பேர்கள் நுழைந்தார்கள்

இந்திய திருநாடு தன் அடிமை விலங்கை அறுத்தெறி வதற்கு முந்திய ஆண்டான 1946-ம் ஆண்டு இச்சிறப்பு மிக்க கோட்டையும், ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலும் தொல்பொருள் பாதுகாப்புத் துறையினரால் நிரந்தர காட்சிக்கூடமாக ஆக்கப் பட்டுள்ளது. இருப்பினும் இக்கோயிலின் புணருத்தாரண கமிட்டி தனது பணியில் அயர்ந்து ஒய்ந்து உட்கார்ந்து விடவில்லை. நாடு விடுதலை அடைந்ததும் 1947-ம் வருடம் இக்கமிட்டியினர் சார்பில் கோயிலில் மீண்டும் தெய்வ வழிபாடு தொடங்க சென்னை ராஜதானிய அறநிலையத்துறை அமைச்சருக்கு விண்ணப்பம் கொடுத்துள்ளார்கள். அதை தொடர்ந்து 13—1—1948-ந் தேதி பழமையை களைந்து புதுவன புகுத்தும் போகி தினத்தன்று வேலூர் கோட்டை மைதானத்தில் டாக்டர் பி. எஸ். மூஞ்சே தலைமையில் நடந்த இந்து மகாசபை மாபெரும் பொதுக் கூட்டத்தில் கோட்டை கோயிலுக்குள் நுழைவது என்று முடிவு எடுத்தார்கள். இந்த முடிவு இந்நகரில் உள்ள இந்துகள் இடையே புத்துணர்வை ஊட்டுவதாக அமைந்தது. மறுநாள் 14—1—1948-ந் தேதி பொங்கல் திருநாள் அன்று கதிரவனின் செங்கதிரை கண்டு புதுப் பானையில் பொங்கலிட்டு புத்தாடை அணிந்து இந்து மகாசபை உறுப்பினர்களும் மற்றும் இக்கோயிலில் எப்படியும் தெய்வவழிபாட்டை மீண்டும் தொடங்கிவிட வேண்டும்

என்ற எண்ணம் கொழுந்து விட்ட பக்தர்களும், துடிப்புள்ள வாலிப பட்டாளங்களும் இங்குள்ள கொசப்பேட்டையில் கையில் இந்து மகாசபை கொடியை ஏந்திய வண்ணம் கூடத் தொடங்கி விட்டார்கள்.

அணையின் மடை திறந்த வெள்ளம் போன்று திரண்டு வந்த கூட்டத்திற்கு டாக்டர் வி. எம். புருஷோத்தம் தலைமை ஏற்று கோட்டையை நோக்கி அவர்களை மிடுக்காக அணிவகுத்து அழைத்துச் சென்றார் "அரகரா, சிவ, சிவா" என்று கோஷமிட்டு அலை, அலையாக மோதி வந்தமக்கள் வெள்ளம் கோட்டைக்குள் நுழைந்து கோயிலை அடைந்ததும் எந்த வித எதிர்ப்பும், தடை-யுமின்றி சுமார் 3000 பேர்கள் கோயிலுக்குள் நுழைந்தார்கள். கூட்டத்தில் பங்கு கொண்டு வந்த தமிழ்நாடு இந்து மகாசபை தலைவர் திரு.சிவனாண்டித்தேவர், கோயிலில் ஸ்ரீ விநாயகப் பெருமானின் சிலையை பூஜை செய்து அபிஷேகமும் ஆராதனையும் நடத்தி வைத்தார். அங்கு கூடி இருந்த மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஒடியது. இந்த மகிழ்ச்சியும் ஆனந்தமும் நீர்க்குமிழி போல் மறுநாளே மறைந்துவிட்டது. ஆம்! கோயிலை பராமரித்து வந்த பொதுப்பணித் துறையினர் கோயில் வாசலின் கதவுகளை அடுத்த நாளே பூட்டிவிட்டார்கள். இதை கண்டதும் பக்தர்கள் மற்றும் நகர மக்களின் உள்ளம் பதை பதைத்தது. எரி மலையாய் குமுறியது. பின்னர் டாக்டர் வி. எம் புருஷோத்தம், நகரசபைத் தலைவர் திரு. ஏ. கே. மாசிலாமணி செட்டியார் ஆகியவர்கள், பொதுப் பணித்துறை அதிகாரியை சந்தித்து பேசினார்கள். "சட்டப்படி அனுமதி பெறும் வரை பூஜையோ, அர்ச்சனையோ மக்கள் நடத்தமாட்டார்கள்" என உறுதி கூறினால் கோயிலை திறந்து விடுவதாக அவர்களிடம் ஒப்புதல்பெற்று மீண்டும் அவர் கோயிலை திறந்துவிட்டார்.

அதன்பிறகு கோயில் புணருத்தாரண கமிட்டிச் சார்பில் 7-7-49-ந் தேதி சென்னை ராஜதானி இந்து பரிபாலன போர்டு உதவி கமிஷனர் திரு. எம். ஜி. மேனனை சந்தித்து, நகர மக்களின் எண்ணங்களை எடுத்துக்கூறி கோயிலில் தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி அளிக்குமாறு வேண்டிக் கொண்டார்கள்.

## மாசிலாமணி செட்டியார்

கோயிலின் புணருத்தாரண கமிட்டிக்கு புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுத்து, மேலும் தீவிரமாக செயல்பட 1949-ம் ஆண்டு சண்முக அடியார் சங்கத்தில் கமிட்டி கூட்டம் கூட்டப்பட்டது. இந்த கூட்டத்தில் நகரசபைத் தலைவர் திரு ஏ. கே. மாசிலாமணி செட்டியார் தலைவராகவும், வழக்கறிஞர் திரு.வி சி. ராஜகோபாலச் சாரி, இரும்பு வியாபாரி திரு. எஸ். எஸ். கிருஷ்ணசாமி முதலியார் ஆகியவர்கள் உதவித் தலைவர்களாகவும் டாக்டர் வி. எம். புருஷோத்தம், திரு கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் இணைச் செயலாளர்களாகவும், ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி மோட்டார் டிரான்ஸ் போர்டு லிமிடெட் உரிமையாளர் திரு ஆர். வி. மாணிக்கம் செட்டியார் பொருளாளராகவும், மற்றும் மாங்காய் மண்டி வியாபாரி திரு எஸ். நடேச முதலியார், திரு. கே .துரைசாமி நாயுடு. திரு. எஸ். எஸ். ஏகாம்பர அய்யர், திரு. ஆர். குப்புசாமி செட்டியார், நகரசபை உறுப்பினர் திரு. டி. சீனிவாசன், திரு. டி. எம். டீக்காராம், திரு. சி. ஆர். திருநாவுக்கரசு. திரு. லட்சுமிநாராயணலால் ஆகியவர்கள் கமிட்டி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

இப்புதிய கமிட்டி தனது பணியை பல்வேறு திசையில் திருப்பி, அதிகாரிகளையும், அரசியல் தலைவர்களையும், அவ்வப் போது சந்தித்து அனுமதி பெற முயற்சி மேற்கொண்டது.

அதோடு 1949-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7-ம் நாள் இக்கமிட்டி சார்பாக சென்னை ராஜதானியின் பிரதம அமைச்சராக இருந்த திரு. குமாரசாமி ராஜாவுக்கு கடிதம் எழுதி ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில், தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டது. பின்னர் 23—1—1950-ந் தேதி மேதகு ஆளுநர் பவா நகர் மகாராஜா அவர்களுக்கு கமிட்டி சார்பில் கடிதம் எழுதி னார்கள். மறுநாள் 24—1 1950-ந் தேதி இந்திய ஜனாதிபதி மேதகு பாபுராஜேந்திர பிரசாத்துக்கு கமிட்டி சார்பில் மற்றொரு கடிதம் வரைந்தார்கள். இக்கடிதத்தில் "1946-ம் வருடத்தில் இருந்து ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலில் விக்கிரகங்கள் வைத்து தெய்வ வழிபாடு தொடங்க முயற்சித்து வருகிறோம். மாண்புமிகு அமைச்சர்களும், மேதகு ஆளுநர்களும் அவ்வப்போது இத்திருக் கோயிலுக்கு விஜயம் செய்து பார்வையிட்டு செல்வதோடு, எங்களுக்கு உறுதி மொழியும் தருகிறார்கள். ஆனால் வழிபாடு நடத்த அனுமதி வழங்கும் செயல் ஆமை வேகத்தில் சென்று கொண்டு இருக்கிறது" என்று அதில் கமிட்டியினர் குறிப்பிட்டு இருந்தார்கள். பின்னர் 14—5—1950-ந் தேதி மாநில அரசின் அற நிலையத்துறை ஆணைக்குழு ஆணையருக்கு கமிட்டி சார்பில் ஒரு கடிதம் எழுதி வழிபாட்டுக்கு அனுமதி கேட்டார்கள்.

## நிபந்தனைகளோடு வழிபாடு

இதைத் தொடர்ந்து அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. ஏ. துரைராஜ் இக்கோயிலையும், அதன் சுற்றுப்புறங் களையும் பார்வையிட்டு ஆராய்ந்து சிலநிபந்தனைகளோடு கூடிய ஒரு திட்டத்தை தயாரித்து, அன்றே 14—5—1950ந் தேதி அரசுக்கு கடிதம் மூலம் சிபாரிசு செய்தார் "இந்த கோயிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்த 1939-ம் வருடமே திட்டம் இருந்துள்ளது. 11-3-29ம் ஆண்டு அரசு ஆணைப்படி இந்துக்கள் தெய்வ வழிபாடு

நடத்தும் கோயிலாக இந்துக்களிடம் இப்படியே வழங்குவது உசிதமாக கருதப்படவில்லல, கோட்டையின் பிரதான வாயில் வழியாக இந்துக்களை வழிபாட்டுக்கு அனுமதித்தால் கோட்டைக் குள் இருக்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலகங் களின் நிர்வாகத்துக்கு இடையூறு நேரிடும் என அனுமதி மறுக்கப் பட்டு வந்துள்ளது.

இக்கோயிலின் பிரதான வாயிலாக உள்ள தெற்கு புறமுள்ள கோபுர வாசலுக்கு முன்னால் ஒரு சுவர் எழுப்பி, கோட்டைக்குள் இருக்கும் அலுவலகங்களுக்கும், கோவிலுக்கும் எந்தவித சம்பந்த மும் இல்லாத வகையில் தனிமைப்படுத்தப்படவேண்டும். அதோடு கோயிலின் கிழக்கு, மேற்கு புறச்சுவர்களை அகழி வரை நீடித்து இணைக்கவேண்டும். அகழியின் வட கிழக்கு திசையில் ஒரு பாலம் அமைத்து அதன் வழியாக கோயிலுக்கு மக்கள் சென்று வழிபாடு நடத்த அனுமதிக்கலாம்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு சிபாரிசு செய்த கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். சென்னை மாநில அரசின் கிராம நலத்துறை உதவி செயலாளரிடம் இருந்து இது சம்பந்தமாக 18—7—1950-ந் தேதி புனருத்தாரண கமிட்டிக்கு ஒரு கடிதம் வந்தது. "வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் 14-5-1950-ந் தேதிய கடிதமும், அவற்றுடன் இணைக் கப்பட்டுள்ள இணைப்புகளும், அரசு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தை புதுப்பித்து திருப்பணி நடத்த புனருத்தாரண கமிட்டிக்கு விருப்பம் உள்ளதா ? அதோடு இவ்வாலயத்தை புதுப்பித்து திருப்பணி நடத்த ஆகும் முழுச்செலவு அதன் பிறகு கோயிலை பராமரிக்க உண்டாகும் செலவு ஆகியவற்றை புனருத்தாரண கமிட்டி, அவற்றின் நிதியை கொண்டு செலவு செய்யுமா ? என்பது பற்றி

மாவட்ட ஆட்சித்தலைவரிடம் விபரம் கேட்கப்படும்'' என்று அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

## சங்கராச்சாரி சுவாமிகள்

இந்த நிபந்தனைகளையும், யோசனைகளையும் பக்தர்களும், பொது மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. காஞ்சி காமகோடி **பீடாதிபதி** ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரி (பெரியவாள்) சுவாமியை பக்தர் பிரமுகர்கள் சிலர் சந்தித்து இந்த நிபந்தனைகளை பற்றி விளக்கி கூறினார்கள். "சிவன் கோயிலுக்கு வடக்கும் பார்த்து நுழைவாயில் வைப்பது இந்துமறை முறைப்படி சரியில்லை. இவ்வாறு வைக்கவும் கூடாது. இப்போது இருக்கும் தெற்கு வாசல் வழியாக கோயிலுக்கு சென்று வழிபாடு நடத்த அனுமதிக்குமாறு கோருங்கள். அனுமதி தராவிட்டால் பொறுத்திருங்கள், காலம் வரும்'' என்று அவர் பதில் கூறி அனுப்பி வைத்தார். அதோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கோயில் புனருத்தாரண கமிட்டிக்கு, எழுதிய கடிதத்துக்கு கமிட்டி சார்பில் 14-12-1950-ந் தேதி பதில் எழுதினார்கள் "இந்து ஆலயத்தில் பின் வழியாக பக்தர்கள் சென்று தெய்வ வழிபாடு நடத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்து உள்ளது. இந்து மத சமய வழிபாட்டுக்கு இது முரணானது, அதோடு உகந்ததும் அல்ல. கோயிலின் கோபுர வாசல் வழியாகத்தான் இந்துக்கள் ஆலயத்துக்கு சென்று தெய்வவழிபாடு செய்வது மரபாகும். கோயிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்த அரசு உதவியோ, மானியமோ தேவையில்லை. இங்கு பக்தர்கள் தெய்வ வழிபாடு நடத்த அரசு அனுமதி தந்தால் போதும்'' என்று அதில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

# சேட் சாவல்தாஸ் தலைமை

13—12—1951-ந்தேதி அரசு கிராம நலத்துறை செயலாளர் எழுதிய கடிதத்தில் " வேலூர் கோட்டை ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயக்கமிட்டி கலைக்டர் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி இக்கோயிலை புதுப்பித்து திருப்பணி வேலைகளை எடுக்க ஒத்துக் கொள்ளவில்லை. ஆதலால் இக்கோயிலை புணருத்தாரண கமிட்டியிடம் ஒப்படைப்பது கைவிடப்பட்டது. வேலூர் பொதுமக்கள் தளர்ந்துவிடாமல் மீண்டும் 5000 பேர்கள் கையெழுத்திட்டு அரசுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைத்தார்கள்

அதன்பிறகு 1952-ம் ஆண்டு இந்நகரின் பிரபல வியாபாரியான ராவ் சாஹெப் சேத் சாவல்தாஸ் பூல்சந்த் செய்சிங் தலைமையில் புணருத்தாரண கமிட்டி திருத்தி அமைக்கப்பட்டது. அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், திரு. ஆர் வி. மாணிக்க செட்டியார், உதவி தலைவர்களாகவும், திரு. பி. வாசுதேவ நாயுடு செயலாளராகவும், திரு. ச.எஸ். ராமமூர்த்தி இணை செயலாளராகவும், திரு. எம்.டி. நடராஜ முதலியார் பொருளாளராகவும் மற்றும் திருவாளர்கள் ஏ.ஆர். மாணிக்க முதலியார், பி.எஸ். வைத்யநாத அய்யர், மு. பெருமாள் முதலியார் வி.கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்கள் இக்கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றினார்கள்.

திரு. எம். மாணிக்கவேல் நாயக்கர் மாநில அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். இந்த பஞ்ச பாண்டவர்களின் மூலம் மாநில-மத்திய அரசுகளை அணுகி தெய்வவழிபாட்டுக்கு அனுமதி பெற புனருத்தாரண கமிட்டியினர் எவ்வளவோ முயற்சித்தார்கள். அப்போதைய முதல் அமைச்சராக இருந்த மாண்புமிகு கே. காமராஜரை, சென்னையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். ராமச்சந்தர் தலைமையில் திரு. பி. வாசுதேவ நாயுடு திரு. சி. எஸ். ராமமூர்த்தி, திரு. வி. ஆர். சித்தாபதி ஆகியவர்கள் சந்தித்து இக்கோயிலில் மீண்டும் தெய்வ வழிபாடு தொடங்க அனுமதி பெற்றுத்தர ஏற்பாடு செய்யுமாறு வேண்டிக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் மாண்புமிகு தாஸ் என்பவரும், மாநில அமைச்சர் மாண்புமிகு பரமேஸ்வரனும் கோயிலுக்கு வந்து பார்வையிட்டனர்.

பின்னர் மத்திய கல்வி அமைச்சர் மாண்புமிகு அபுல்கலாம் ஆசாத், மாண்புமிகு ஹூமாயூன் கபீர் ஆகியவர்களை பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். ராஜகோபால் நாயுடு டெல்லியில் சந்தித்து அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலில் திரும்பவும் தெய்வ வழிபாடு நடத்த அனுமதி வழங்க, வழிவகை செய்யுமாறு கேட்டார்.

"இக்கோயில் அழகும் இங்குள்ள சிற்பத் திறனும் தெய்வ வழிபாட்டிற்கு உரியவை என்பதில் வியப்பொன்றும் இல்லை" என்று 8—1—1956-ந்தேதி கோயிலை சுற்றிப்பார்த்த மைசூர் சமஸ்தான முதன்மந்திரி மாண்புமிகு கே. அனுமந்தையா குழுவினர் கருத்து தெரிவித்தார்கள் இதே கருத்தை 19—1—1956-ல் கோயிலை பார்வையிட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருவாளர் எச். வி. காமத் அவர்களும் தெரிவித்தார். மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக இல்லாதிருநல் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜெகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளை (பெரியவாள்) சந்தித்து விபரங்களை எடுத்துக் கூறி, ஆலோசனைப்பெற்று வந்தார்கள். இறுதியில் வழக்கமாக வருவது போன்று தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டு அரசிடம் இருந்து கடிதம் வந்து சேர்ந்தது.

## நகரமன்றத் தீர்மானம்

வேலூர் நகரசபையில் 6-2-1956 ந் தேதி நகரசபை உறுப்பினர் திரு. டி. *சீனிவாசன்*, ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்து, தெய்வவழிபாடு தொடங்க, கோயில் புனருத்தாரண கமிட்டியிடம் ஒப்படைக்க மத்திய-மாநில அரசுகளை கோரி, கொண்டுவந்த தீர்மானம், நகரசபை தலைவர் திரு. வி. ஆர். *சீத்தாபதி* மற்றும் உறுப்பினர்கள் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றப் பட்டு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது போல் 2-8-1956-ந் தேதியில் *திரு*. டி. பி. கேசவ ரெட்டியார் தலைமையில் நடந்த ஜில்லா போர்டு கூட்டத்தில் உறுப்பினர்கள் திருவாளர்கள், டி. குப்புராம் முதலியார், டி. பி. நாராயணசாமி ரெட்டியார், எம். மாணிக்கவேல் நாயக்கர், வி. சாம்பசிவ பிள்ளை, ஆகியவர்கள் இக்கோயிலை கும்பாபிஷேகம் செய்து, தெய்வ வழிபாடும், திருவிழாக்களும் நடத்த மாநில அரசு மூலம் மத்திய அரசை கேட்டுக்கொள்வது என்று கொண்டு வந்த தீர்மானமும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதன்பிறகு 25-3-1956-ந் தேதி காஞ்சி காமகோடி மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் ஆசியோடு சுப்ரீம் கோர்ட்டு முன்னாள் நீதிபதி திரு. எம். பதஞ்சலி சாஸ்திரியார் தலைமையில், கோயிலில் தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி வழங்குமாறு மத்திய - மாநில அரசுகளை கேட்டு மற்றொரு

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்டது. இது போன்று 10-8-1956-ந் தேதி மத்திய அரசின் கல்வி விஞ்ஞான துறை மந்திரிக்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது. சென்னை நகர பொதுமக்கள் சார்பில் 8-7-1957-ந் தேதி அடையாற்றில் உள்ள ஆசிரமத்தில் திரு. சிவப்பிரகாச ஆனந்தானந்த சாஸ்திரி சுவாமிகள் தலைமையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கோயிலில் தெய்வ வழிபாட்டுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஒய்வு பெற்ற நீதிபதி திரு எஸ். கே. ஓ. ராமசாமி சாஸ்திரி முன்மொழியவும், திருவாளர்கள் எஸ். சச்சிதானந்தப்பிள்ளை, நாராயணன் ஆகியவர்கள் வழி மொழிய, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். இந்த கூட்டத்தில் திரு. பி. ராமகிருஷ்ண அய்யர் (ஐ. சி. எஸ்.,) திரு. கே. வெங்கடேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

அப்பொது டெல்லி ராஜ்ஜிய சபை உறுப்பினராக இருந்த திரு. பி. எஸ். ராஜகோபால் நாயுடு இக்கோயிலில் பக்தர்கள் வழி பாடு நடத்த அனுமதிக்குமாறு மத்தியக்கல்வி விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. ஹுமாயூன் கபீரை சந்தித்து பேசி, ஆவன செய்யுமாறு வேண்டிக் கொண்டார். அதோடு ராஜ்ஜியசபையில் எழுத்து மூலம் இவர் 18-12-1956-ந் தேதி கேட்ட ஒரு கேள்விக்கு 11--12--1957-ந் தேதி திரு. டாக்டர். கே. எஸ். ஸ்ரீ மாலி பதில் அளித்தார். "இக் கோயிலில் இந்துக்கள் தெய்வ வழிபாடு நடத்த மாநில அரசு சிபாரிசு செய்து உள்ளது. ஆனால் புராதானத் தொல்பொருள் பாதுகாப்புச் சட்டத்தின்படி இங்கு தெய்வ வழிபாட்டுக்கு அனுமதிக் கொடுக்க முடியாது" என்று அவர் பதிலில் குறிப்பிட்டார்.

## சச்சிதானந்தப் பிள்ளை

இவ்வாறு இருக்கையில் புனருத்தாரண கமிட்டிக்கு மேலும் உத்வேகம் அளிக்கும் வகையில் 30-1-1958-ந்தேதி கமிட்டி திருத்தி அமைக்கப்பட்டது. இப்புதிய நிர்வாக கமிட்டிக்கு ஓய்வுபெற்ற மாவட்ட கல்வி அதிகாரி திரு. எஸ். சச்சிதானந்த பிள்ளை தலைவராகவும், திருவண்ணாமலை பாலசுப்பிரமணியர் பஸ்சர்வீஸ் உரிமையாளர் திரு. டி. வி. தேவராஜ முதலியார் (எம். எல். சி.) வேலூர் நகரசபை தலைவர் திரு வி. ஆர். சீத்தாபதி, வேலூர் லட்சுமி சரஸ்வதி பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு. எஸ். விஜய-ரங்க முதலியார், பக்த பிரமுகர் திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியவர்கள் உதவி தலைவர்களாகவும், வழக்கறிஞர் திரு. ரா்வ்பகதூர் சி. துரைசாமய்யா செயலாளராகவும், டாக்டர் வி. எம். புருசோத்தம் உதவி செயலாளரர்கவும், வேலூர் கிருஷ்ணா பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு. என். கிருஷ்ணசாமி முதலியார் பொருளாளரா்கவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

இதுபோல் திருவாளர்கள் எஸ்.எஸ். கிருஷ்ணசாமி முதலியார் வி. எம். பரசுராமன், வி. கே. வெங்கடசுப்பிரமணியம் அய்யர், பி. கிருஷ்ணமூர்த்தி அய்யர், ஏ. எஸ். அருணாசலம் பிள்ளை, வேலூர் பஸ் உரிமையாளர் ஆர். வி. எம். ஜெகநாதம், பச்சையப்ப முதலியார், வி. பி. சிவம், ஜி. பாலசுந்தர முதலியார், கே. எஸ். பட்டாபிராமன், ஆரணி கார்த்திகேயன் பஸ் உரிமையாளர் சுப்பிரமணிய முதலியார், கே. பாலையா நாயுடு, முனுசாமி முதலியார், பி. ரெங்கநாதம் செட்டியார் ஆகியவர்கள் ஆலோ-சனை கமிட்டி உறுப்பினர்களாகவும் இதே கூட்டத்தில் ஏகமன தாக தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். இந்த புதியநிர்வாக குழுவினர் தங்கள் நடவடிக்கைகளை கொஞ்சம் தீவிரப்படுத்தினார்கள். சத்துவாச்சாரியில் சிறிய கோயிலுக்குள் இருக்கும் 5 அடி உயரம் 9 அடி சுற்றளவு கொண்ட சிவலிங்கம், ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர்

கோயில் கருவறையில் லிங்கம் பெயர்த்து எடுக்கப்பட்டு காலியாக கிடந்த இடத்தின் அளவும், சரியாக உள்ளது என ஆதாரப்பூர்வ த்துடன் டாக்டர் வி. எம். புருசோத்தம் நிருபித்தார். இதை தொடர்ந்து இந்த சிவலிங்கத்தை ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு எடுத்துச் செல்ல தங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என கோயிலின் பாதுகாவலர் திரு. பொன்னப்ப செட்டியாரிடம் 20-2-1958-ந் தேதி கடிதம் ஒன்று எழுதி வாங்கப்பட்டது. இதற்கு ஆதரவாக 11-3-1958-ந் தேதி சத்துவாச்சாரி, பிரபல வியாபாரி திரு. கே. பாலையா நாயுடுவும், மற்றும் பி. ஜி. முனுசாமி முதலியார் ஆகியவர்கள், மற்றும் இரண்டு கடிதங்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள். இந்த காலகட்டத்தில் சென்னை ராஜ தானியின் மேதகு ஆளுநர் கோயிலுக்கு வருகை தந்தார். அப்போது இக்கோயிலின் சரித்திர முக்கியத்துவத்தையும், புகழையும் பற்றி ஆளுநருக்கு ஆலய கமிட்டி செயலாளர் ராவ் பகதூர் சி. துரைசாமிய்யா விளக்கி கூறினார்.

இதே ஆண்டு வேலூர் விஜயம் செய்த இந்திய உதவி ஜனாதிபதி மேதகு டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனை 4–6–1958-ந் தேதி புணருத்தாரண கமிட்டியினர் சந்தித்து பேசி மனுக் கொடுத்தார்கள். அதோடு அவரை இக்கோயிலுக்கு அழைத்து காண்பித்து, தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி வழங்க ஏற்பாடு செய்யுமாறும் அவரிடம் பரிந்துக் கேட்டுக்கொண்டார்கள். அதே மாதம் 16–8–1958-ந் தேதி இக்கமிட்டி முதல் முறையாக பதிவு செய்யப்பட்டது. பின்னர் 1966-ம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலை தெய்வவழிபாட்டுக்கு திறந்துவிடும்படி மத்திய அரசை கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியதோடு மாநாட்டில் கோயில் பற்றிய நிலை விளக்கமும் தரப்பட்டது. அதன் பிறகு 7—5—1960-ந் தேதி இக்கோயிலின் வழிபாடு சம்பந்தமாக மத்திய அரசுக்கும்,

17-5-1960-ந் தேதி சர். சி. பி. இராமசாமி அய்யருக்கும், கமிட்டி தலைவர் திரு. எஸ். சச்சிதானந்தப்பிள்ளை இரண்டு கடிதங்களை எழுதினார். 1960-ம் ஆண்டு வேலூர் கோட்டை மைதானத்தில் தமிழரசு கழக மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் வழிபாட்டுக்கு அனுமதி வழங்குமாறு மத்திய மாநில அரசுகளை கேட்டு, தலைவர் மா. பொ. சிவஞான கிராமணி கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது. இதே ஆண்டு மார்ச்சு மாதம் 9-ந் தேதி தமிழக மேலவையில் வித்துவான் திரு டி. முத்துக்கண்ணன் இக்கோயிலின் வழிபாட்டுக்கு அரசு அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

## வி. சி. ராஜகோபாலாச்சாரி தலைமை

அதன் பிறகு 19—3—1961-ந் தேதி இங்குள்ள வன்னியர் குல ஷத்திரிய மாணவர் விடுதியில் நடைபெற்ற ஆலய புணருத்தாரண கமிட்டிக் கூட்டத்தில் வக்கீல் வி. சி. ராஜகோபாலாச்சாரி தலைவராகவும், திருமுருக கிருபானந்த வாரியார், வேலூர் ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு. கே. வி. விஜயரங்க முதலியார் (எம். எல். சி.), திரு. வி. ஆர். சீத்தாபதி, வெல்ல வியாபாரி திரு. வி. கே. எம். நடராஜ முதலியார் ஆகியவர்கள் உதவி தலைவர்களாகவும், டாக்டர் வி. எம். புருசோத்தம் செயலாளராகவும், திரு. ஏ. எஸ். ஏ. அருணாசலம் பிள்ளை உதவிச் செயலாளராகவும், திரு. என். கிருஷ்ணசாமி முதலியார் பொருளாளராகவும் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். மற்றும் திருவாளர்கள் எஸ். என். கிருஷ்ணசாமி, பி. எஸ். ராஜ கோபால் நாயுடு, ஆர். ஜீவரத்தின முதலியார், வி. எம். கெஜராஜ் முதலியார், ஏ. டி. பி. ரெங்கநாத செட்டியார், ஆர். குப்புசாமி செட்டியார், வி. கே. விநாயக முதலியார்,

பி. வடிவேல் முதலியார், கே. ஆர். நரசிம்மலு நாயுடு, என். குப்புசாமி முதலியார், ஏ. ஆர். பாலையா நாயுடு, எம். டி. நடராஜ முதலியார், ஜி. பாலசுந்தர முதலியார், பி. விநாயக முதலியார், எம். பி. கந்தசாமி நாடார், எம். பெருமாள் முதலியார், ஏ. வி. ஜெயவேலு செட்டியார், ஜுஜ்மல் சேட்டு, வி. கே. குப்புசாமி பிள்ளை, வி. எஸ். திருவேங்கடம், வி. எம். பரசுராமன், கே. எஸ். மணி, ஜி. முனிரத்தின நாயுடு, கே. துரைசாமி, ஜி. பெருமாள் முதலியார், எஸ். கே. ஜி. பி. கந்தசாமி செட்டியார், ஆகியவர்கள் கமிட்டி உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இக்கமிட்டி சார்பில் இந்திய ஜனாதிபதிக்கு 11-12-1961-ந் தேதி மீண்டும் கடிதம் எழுதி "இக்கோயிலில் தெய்வவழிபாட்டுக்கு அனுமதி வழங்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். இதற்கு "தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி கோரியதை ஏற்க முடியாது'' என 9-1-1962-ந் தேதி பதில் வந்தது. பின்னர் 24-12-1961-ந்தேதி சண்முக அடியார் சங்கத்தில் வி. கே. எம். நடராஜ முதலியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. இக்கோயிலில் தெய்வ வழிபாடு தொடங்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப் படவேண்டும் என்பதைப்பற்றி வக்கீல் வி சி. ராஜகோபாலாச்சாரி, திரு ஆர். ஜீவரத்தினம், திரு. வி. கே. குப்புசாமி, திரு. பி. வடிவேல் முதலியார் ஆகியவர்கள் பேசினார்கள். டாக்டர் வி. எம். புருசோத்தம், ஏ. எஸ் ஏ. அருணாசலம் பிள்ளை உள்பட ஏராளமான நகர பிரமுகர்கள் கலந்துக் கொண்டார்கள். 1962-ம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது அப்போது தமிழக அமைச்சராக இருந்த மாண்புமிகு பி. பக்தவச்சலம் வேலூருக்கு வருகைத் தந்தார் இங்குள்ள பெருமாள் முதலியார் வீட்டில் அவரை

டாக்டர் வி. எம். புருஷோத்தமும் மற்றும் சிலரும் சந்தித்துக் கோயில் சம்பந்தமாக பேசினார்கள். "காங்கிரஸ் வேட்பாளர் திரு. ஆர். ஜீவரத்தினத்தை தேர்தலில் வெற்றி பெறச்செய்ய ஏற்பாடு செய்யும் படியும், கோயில் தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி பெற்றுத் தர ஏற்பாடு செய்கிறேன்" என்றும் அவர் உறுதி மொழி கூறியதாக சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் காஞ்சிபுரத்தில் உள்ள இந்து அறநிலையத் துறை உதவி கமிஷனர் திரு. ஆர். வரதராஜன், கோயில் புணருத்தாரண கமிட்டி செயலாளர் திரு. டாக்டர் வி. எம். புருஷோத்தம் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் கும்பாபிஷேக கமிட்டி நிதி ஏதாவது திரட்டி உள்ளதா? அவ்வாறு திரட்டி இருந்தால் அது எவ்வளவு தொகை? என்று தெரியப்படுத்தவும். இதுவரை நிதி திரட்டப்படாவிட்டால், பணம், வசூல் செய்வதில் உள்ள கஷ்டங்களை தெரியப்படுத்தவும்" என்ற இந்த கடிதத்துக்கு, 12--9--1962 ந் தேதி திருவாளர்கள் வி. ஆர். சீத்தாபதி, வி. கே. எம். நடராஜ முதலியார், ஏ. எஸ். ஏ. அருணாசலம் பிள்ளை ஆகியவர்கள் கையெழுத்திட்டு பதில் அனுப்பினார்கள். "இக் கோயில் வழிபாடு தொடங்குவது சம்பந்தமாக உங்களோடு நாங்கள் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளோம். நிதி திரட்டி கோயில் கும்பாபிஷேகம் நடத்தி வழிபாடு தொடங்க தயாராக இருக்கிறோம். அனுமதி தாருங்கள்" என்று அவர்கள் அதில் குறிப்பிட்டு இருந்தார்கள்.

## நிதி வசூல் கமிட்டி

1963-ம் ஆண்டு "காமராஜர் திட்டத்தின்படி தமிழ்நாடு முதல் அமைச்சராக பதவியில் இருந்த திரு. கே. காமராஜர் பதவி துறந்ததும் அதே வருடம் அக்டோபர் மாதம் இரண்டாம் நாள்

திரு. பி. பக்தவச்சலம் தமிழ் நாடு முதல் அமைச்சர் ஆனார். அவருடைய ஆட்சிக் காலத்தில் பக்த பிரமுகர் திருமுருக கிருபானந்த வாரியார் அவரை சந்தித்து ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயிலில் மீண்டும் தெய்வ வழிபாடு தொடங்க வழி வகை செய்யுமாறு கேட்டுக் கொண்டார். "கோயிலில் கும்பாபிஷேகம் செய்து, தொடர்ந்து அதை பராமரிக்க ஒரு லட்சம் ருபாய் திரட்டும் படி அவர் கூறியதோடு தெய்வ வழிபாட்டுக்கு அரசு மூலம் ஏற்பாடு செய்வதாகவும் அவர் உறுதி மொழி அளித்ததாக சொல்லப் படுகிறது. இதை தொடர்ந்து திருமுருக கிருபானந்தவாரியாரை தலைவராக கொண்டு அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் கும்பாபிஷேக நிதி வசூல் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. இந்த கமிட்டிக்கு திரு. ஏ. எஸ். அருணாசலம் பிள்ளை, திரு. ஆர். ஜீவரத்தினம் (எம்.எல்.ஏ.) திரு. வி. கே. எம். நடராஜ முதலியார், வக்கீல் வி. சி. ராஜகோபாலாச்சாரி ஆகியவர்கள் உதவி தலைவர்களாகவும், பொதுச் செயலாளராக திரு. கே. எஸ். மணியும், செயலாளர்களாக திரு. வி. கே. கிருஷ்ணமூர்த்தி, திரு. பி, வடிவேல் முதலியாரும், பொருளாளராக திரு. ஏ எஸ். ஏ. அருணாசலம் பிள்ளையும் நியமிக்கப்பட்டார்கள்.

இந்த நிதிக்குழுச் சார்பில் வன்னிய குல ஷத்திரிய மாணவ விடுதிக்கு எதிரேயுள்ள கோட்டை வெளி மைதானத்தில் திருமுருக கிருபானந்தவாரியாரின் ஏழு நாட்கள் இராமாயண பக்தி சொற் பொழிவு நடந்தது. பக்தி சொற்பொழிவு கேட்க வரும் பக்தர் களும் மற்றும் ஆண்களும், பெண்களும் தாராளமாக பணத்தை வாரி வழங்கினார்கள். ஒரு வார காலத்தில் ஏறத்தாழ எழுபது ஆயிரம் ருபாய்க்கு மேல் வசூல் ஆனது. நிதி திரண்டு வருவது குறித்து கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் நகர பிரமுகர்கள் உள்ளத்

தில் புதுத்தெம்பும், நம்பிக்கையும் பிறந்தது. வெண்ணை திரண்டு வரும்போது தாழி (பானை) உடைந்த கதைப்போன்று, பல்வேறு முயற்ச்சிகளுக்கு இடையே கடைசி நேரத்தில் தொல்பொருள் பாதுகாப்புத்துறையில் இருந்து வழக்கமாக வருவதுபோல் தெய்வ வழிபாட்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்து விட்டது. கொஞ்சமும் எதிர்பாராது வந்த அரசு உத்தரவு, நிதி வசூல் கமிட்டி உறுப்பினர்களையும் மற்றவர்களையும், செயல் இழக்கச் செய்து விட்டது. வசூல் செய்த பணத்தை என்ன செய்வது? என்று அவர்கள் எண்ணிய காலத்தில் மக்களுக்கு பயன்படும் வகையில் கல்யாண மண்டபம் ஒன்று கட்டுவது என்று யோசனை கூறப்பட்டது. பின்னர் சண்முக அடியார் சங்கத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் பக்தி சொற்பொழிவு நடக்கும் போது, திரளாக கூடியிருந்த மக்கள் இடையே இந்த யோசனையை அவர் எடுத்துரைத்தார். மக்களின் ஏகோபித்த ஒப்புதலுக்கு ஏற்ப இப்பணத்தைக் கொண்டு கிருஷ்ணா நகரில் திருமுருக கிருபானந்த வாரியார் கல்யாண மண்டபத்துக்கு நிலம் வாங்கப் பட்டு, பின்னர் கட்டி முடிக்கப்பட்டது.

## *சிறை சென்ற செம்மல்கள்*

சில நாட்கள் அமைதிக்குப் பிறகு 29-5-1966ந் தேதி காஞ்சி காமகோடி மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரி சுவாமிகள் ஒரு நாள் மாலையில் இந்த கோயிலுக்கு விஜயம் செய்தார்கள். அப்போது கோயிலில் மின் விளக்கு எதுவும் இல்லாத காரணத்தால் பந்தம் கொளுத்தி, அந்த ஒளியில் கோயில் கர்ப்பகிரகம் வரையில் சென்று அவர் பார்வையிட்டார். அப்போது சுவாமி அவர்களுக்கு கமிட்டி செயலாளர் திரு. கே. எஸ். மணி மாலை அணிவிக்கச் சென்றார். "இத்திருவாலயத்தில் விக்கிரகங்கள் வைத்து பிரதிஷ்டை செய்த பிறகு மாலை வாங்கி கொள்கிறேன்".

என்று அவர் திருவாய்மொழிந்து சென்றார். அந்நாள் என்று வருமோ? என்று பக்தர்கள் உள்ளம் ஏங்கிக் கிடந்தன. 1967-ம் ஆண்டு தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சி, நீக்கப்பட்டு, திராவிட முன்னேற்ற கழக அரசு ஆட்சிபொறுப்பினை ஏற்ற பிறகு இந்த கோயில் பிரச்சனையை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டார்கள். இரண்டாண்டு கழித்ததும் மீண்டும் இந்த பிரச்சனை எழத்தொடங்கியது. 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ந் தேதி இக்கோயிலில் சிவலிங்கம் ஒன்றை பிரதிஷ்டை செய்து, தெய்வ வழிபாடு தொடங்கப் போவதாக வேலூர் நகர மன்ற உறுப்பினர்களாக இருந்த திரு. வி. கே. குப்புசாமி திரு. வி. வெங்கட்ராமன், காகிதப்பட்டரை திரு. வி. கே. கண்ணப்பன், மற்றும் வழக்கறிஞர் திரு. வி. பத்மநாபன் ஆகியவர்கள் அறிவித்தார்கள். அருள்மிகு சோலாபுரி அம்மன் கோயிலிலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் செல்லும்முன் இவர்கள் நான்கு பேர்களையும் போலீசார் கைது செய்து வழக்குப் போட்டதில், இவர்களை பதினைந்து நாட்கள் காவலில் வைக்க கோர்ட்டில் உத்திரவிடப்பட்டது. இந்த கோயிலின் தெய்வ வழிபாட்டுக்காக சிறைச் சென்ற செம்மல்கள் இவர்களே ஆவார்கள்.

## "கங்க அப்பா"வின் பரிபாலனம்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று கோயில் இல்லாத ஊரில் குடியிராதே!" என்ற முதுமொழிக்கு ஏற்ப, தலைமுறை, தலைமுறையாக தொன்று தொட்டு இறை வழியிலும், ஆஸ்திக மரபிலும் தோய்ந்த இந்நகர மக்களிடையே இத் திருவாலயத்தில் எப்படியும் மீண்டும் தெய்வ வழிபாட்டை தொடங்கிவிட வேண்டும் என்ற துடிப்பும், ஆர்வமும் புரட்சி கனலாய் வெடித்தது! மாவட்டத் தலைநகரில், அதுவும் இதய பகுதியாக விளங்கும் இடத்தில் எல்லாம் இருந்தும் "சாமி இல்லாத கோயில்" என்று பூவும்

பொட்டும் இழந்த அமங்கல மங்கை போல் காட்சி அளித்துக் கொண்டிருந்த இக்கோயிலை மங்கல மங்கையாக மாற்ற நகரில் உள்ள பக்தபிரமுகர்களும், துடிப்பான இளந்தலைமுறை யினரும் திட்ட மிட்டார்கள். இது போன்ற நல்லதொரு திட்டம் எப்போது ? எந்த நேரத்தில் ? மக்கள் உள்ளத்தில் மீண்டும் துளிர் விடும் என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த பல்லாயிரக்கணக் கான மக்களுக்கு இது புதுத்தெம்பை உண்டாக்கியது. இவ்வாறு இருக்கையில் 1980-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் நாள் இத்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில், மக்கள் எல்லா வளமும் பெரும் வகையில் அல்லும் பகலும் தன் தலையில் "கங்கையை சுமந்து கொண்டிருக்கும் அப்பா" இங்கு ஆட்சி பரிபாலனம் செய்ய வந்தார். அழகு நர்த்தனமாட, எழில் கொஞ்சிட, கலை நுணுக்கத்துடன் அரண்மனைபோல் பிரமாண்ட மாக கட்டப்பட்டிருக்கும் அழகிய ஆலயத்தில் கொலுவீற்று அமர்ந்து அருள் பரிபாலனம் செய்ய வேண்டிய அருள்மிகு ஜலகண் டேஸ்வரர், ஆதரவற்றவரைப்போல் சத்துவாச்சாரியின் சாலை ஓரத்தில் சிறு குகை போன்ற ஒரு குறுகிய கட்டிடத்திற்குள் இத்தனைகாலமும் குடி புகுந்து கொண்டிருப்பதை அவர் அறிந்து தெரிந்ததும், உள்ளம் வேதனை அடைந்தது. அவரது நொந்த உள்ளத்துக்கு அவர் அருகாமையில் இருந்த ஸ்ரீமன் 'நாராயண னின்' திரு நாமத்தைச் சூட்டியவர்ஆறுதல் கூறி அவ்வப்போது ஆகவேண்டிய காரியங்களுக்கு நல் ஆலோசனை நல்கிவந்தார்.

1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ம் நாள் இந்நகர பக்தபிரமுகரும், இக்கோயில் விவகாரத்தில் பல்லாண்டு காலம் ஈடுபாடு கொண்டவருமாகிய திரு. கே. எஸ். மணி அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி. கங்கப்பா அவர்களுக்கு ஒரு மடல் வரைந்தார். "கோட்டை அருள் மிகு ஜலகண்டேஸ்வரர்

ஆலயத்தின் சிவலிங்கம் பல ஆண்டுகாலமாக இந்நகரை அடுத்த சத்துவாச்சாரியில் இருந்து வருகிறது. இக்கோட்டை கோயிலுக்கு ஒவ்வொரு நாளும் நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து நூற்று கணக்கான உல்லாச பிரயாணிகளும், பார்வையாளர்களும் வந்து பார்த்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே சத்துவாச்சாரியிலுள்ள சிவலிங்கத்தை எடுத்து அதற்குரிய கோட்டைகோயிலில் வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்'' என்று அவர் அந்த மடலில் குறிப்பிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் (கலெக்டர்) திரு. டி. கங்கப்பா இது சம்பந்தமாக டெல்லியில் உள்ள புராதான தொல் பொருள் பாது காப்புத் துறையின் (A.S.I.) இயக்குநருக்கு கடிதம் எழுதி, அதன் நகல்களை சென்னையிலுள்ள இத்துறையின் தென் பிராந்திய மேற்பார்வை அதிகாரி, மற்றும் வேலூர் கோட்டை வாயிலில் உள்ள இத்துறையின் அதிகாரி ஆகியோருக்கு அனுப்பிவைத்தார். கொஞ்ச நாட்கள் சென்றதும், இச்சிவலிங்கத்தை பார்வையிட சென்னையிலிருந்து வந்த இத்துறையின் அதிகாரியை திரு. கே. எஸ். மணி சத்துவாச்சாரிக்கு அழைத்துச் சென்று சிவலிங்கத்தை காண்பித்தார்.

இந்நகரிலுள்ள சண்முக அடியார் சங்கத்தில் 23--1-1981-ந் தேதி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. டி. கங்கப்பாவுக்கு நல்வர வேற்பு கொடுத்தார்கள். ''அப்போது தஞ்சை பெரு நகரில் உள்ள அருள் மிகு பிரகதீஸ்வரர் திருவாலயம், தொல்பொருள் பாது காப்புத்துறையின் நிர்வாகத்தின் கீழ் இருந்தும், உங்களுடைய சீரிய முயற்சியினால் ஏறத்தாழ 177 ஆண்டுகளுக்குப் பிறகு சென்ற 1980-ம் ஆண்டு அங்கு மகாகும்பாபிஷேக விழா சிறப்புற நடந்தேறியது. அதுபோல் இந்நகரில் உள்ள அருள் மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலில் பக்தர்கள் மீண்டும் தெய்வவழி பாடு நடத்தவும், மகா கும்பாபிஷேகம் செய்திடவும் தாங்கள்

அனுமதி பெற்றுத் தாருங்கள். இவற்றிற்கு ஏற்படக்கூடிய செலவு களை பொதுமக்கள் ஏற்றுக்கொள்வார்கள். நீங்கள் கைராசிக்காரர். நீங்கள் முயற்சி செய்தால் எல்லாம் செவ்வனே நடந்தேறும், என்று சண்முக அடியார் சங்கத்தலைவர் திரு. ஜி. பாலசுந்தர முதலியார் திரு. கே. எஸ் மணி ஆகியவர்கள் கையெழுத்திட்டு ஒருமனுவை ஆட்சித்தலைவரிடம் வழங்கினார்கள். "இப்புனித பணிக்கு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு என்னால் இயன்றதை எல்லாம் செய்கிறேன்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பதிலுறைத்தார்.

அரசன் இல்லாத படைகள் போல், அல்லோல கல்லோலப் பட்டுக்கொண்டிருந்த இவர்களுக்கு "கங்கையை சுமக்கும் அப்பா" வின் அருளும், ஸ்ரீமன் 'நாரயணனின்' ஆசியும் கிடைக்கபெற்றதும் புதுத்தெம்பும், புத்துணர்வும் உண்டாயின. ஏக்காரணத்தினாலோ, எந்த சூழ் நிலையிலோ இக்கோயிலில் இருந்து வெளியேற்றப் பட்ட ஈஸ்வர மூர்த்தியை மீண்டும் இத்திருவாலயத்தில் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டினார்கள். அதற்கு வான்மழை போன்று நாலாதிசைகளில் இருந்தும் ஆதரவு பெருகி இவ்வெண்ணம் என்ற இளம்பயிருக்கு எரு ஊட்டி நின்றது. எதற்கும் காலமும், நேரமும் வரவேண்டும் அல்லவா ? அதுபோல் பல்லாண்டுகளுக்கு முன்பு, விதியின் சதியால், சத்துவாச்சாரியில் தற்காலிகமாக குடியேறிய அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் தனது சொந்தவீடான கோட்டைகோயிலுக்குள் மீண்டும் கோலோச்சி, அரசாள வேண்டிய நேரம் வந்தது.

## மயிலை மாமுனிவர்
## ஸ்ரீ குருஜி சுந்தரராம் சுவாமிகள்

அப்போது ஆண்டவரின் தூதுவர் போன்று, தற்செயலாக தஞ்சை தவத்திரு இராமானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் இந் நகருக்கு வருகை புரிந்தார். சரித்திர புகழ் வாய்ந்த இத்திருக் கோயிலின் பெருமையையும், இங்குள்ள மூர்த்தியின் கீர்த்தியை

யும், அவரிடம் எடுத்துக் கூறி, பக்த பிரமுகர்கள் சிலர் அவரை அங்கு அழைத்துச் சென்று காண்பித்தார்கள். கோயிலையும் அதன் பிரகாரங்களையும் சுற்றி வந்த சுவாமியின் உள்ளம் ஒரு வித உணர்ச்சியால் நெகிழ்ந்தது. கர்ப்ப கிரகத்துக்குள் சென்று சிவலிங்கம் பெயர்த்தெடுக்கப்பட்ட இடத்தில் ஒருசில நிமிடங்கள் மௌனமாக நின்று சில மந்திரங்களை உச்சரித்து விட்டு அவர் வெளியில் வந்தார். சில நாட்கள் உருண்டோடின. உலக க்ஷேமத்துக்காகவும், மழைக்காகவும், வடபழனியில் மகாயக்ஞம் நடத்திய அறிஞர்களை இந்நகர பக்த பிரமுகர்கள் சிலர் சந்தித்து அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் தெய்வ வழிபாடு சம்பந்தமாக பேசி அறிவுரைப் பெற்றார்கள்.

இச்சிறப்புமிக்க செயலை சாஸ்திர முறைப்படி செவ்வனே செய்து முடிக்க, ஆற்றலும், தகுதியும் கொண்டவராக வள்ளிமலை சிவானந்த மவுனகுரு சுவாமிகளின் ஒப்பற்ற சீடராகத் திகழும் மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் அவர்களை அடையாளம் காண்பித்தார்கள். மார்கழி திங்கள் மை இருட்டில் வழி தெரியாது தத்தளித்து நிலை தடுமாறி தவித்துக் கொண்டிருப்பவருக்கு, வழி காட்டியும், சுடர்விளக்கையும் கொடுத்தால் எவ்வாறு இருக்குமோ! அதுபோல் பல்லாண்டு காலம் இக்கோயிலில் வழிபாடு நடத்த வழியும் வகையும் புரியாது தவித்துக் கொண்டிருந்த பக்தர்களின் உள்ளங்களில் இது மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் உண்டாக்கியது.

## தஞ்சை ஸ்ரீ ரமானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள்

பின்னர் 1981-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பதினான்காம் நாள் சனிக்கிழமை தஞ்சை தவத்திரு இராமானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகளும், மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகளும், மற்றும் சில அறிஞர் பெருமக்களும், சென்னை மாநகரில் இருந்து இங்கு வந்தார்கள். சத்துவாச்சாரி சாலையோரத்தில் அருள்மிகு ஜல

கண்டேஸ்வரர் சிவலிங்கம் இருந்த கோயிலுக்கு அவர்கள் சென்று உற்று நோக்கினார்கள். தெய்வீக களையுடன் அருளை அள்ளி வீசிக்கொண்டிருந்த அந்த சிவலிங்கத்தை கண்டதும் அவர்கள் கரங்கள் தானாகவே மேலெழுந்து வணங்கி நின்றன. இனிய உணர்வுகளால் அவர்கள் நெஞ்சங்கள் நெகிழ்ந்து, விழிகள் பனித்தன.

அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் சிவலிங்கத்தை அங்கிருந்து பகிரங்கமாக கோட்டைக்கு எடுத்துச்செல்வது இக்கலியுக சட்டத் திட்டங்களுக்கு உகந்தது அல்ல என்றும், ரகசியமாகக் கொண்டு செல்வது என்றும் முடிவு செய்தார்கள். அதற்கு "கங்கையை சிரசில் கொண்ட அப்பனின்" ஆதரவும் "நாராயணரின்" ஆலோசனையும் பேருதவியாக உதவின. இதைத் தொடர்ந்து அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலின் மேற்கு புறத்தில் உள்ள திறந்த வெளியில் உலக க்ஷேமத்துக்காக 'வருணயக்ஞம்' தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன் பிறகு ஆகம விதிப்படி சிவலிங்கத்தை அங்கிருந்து அகற்ற வேண்டிய ஏற்பாடுகள் யாவும் 15—3—1981-ந் தேதி செய்யப்பட்டன. இளம் கன்றுடன் கூடிய 7 கறவை மாடுகள் கொண்டு வரப்பட்டு அவற்றை நீராட்டி திருநீரும் திலகமும் இட்டு சில சடங்குகளை செய்தனர். அன்று இரவில் வைதீக முறைப்படி குருஜி சுந்தரராம் சுவாமிகள் மந்திரங்களை உச்சரித்து தேவதைகளுக்கு பூசணிக்காய், எலுமிச்சம்பழம் போன்றவைகளை தனது நெற்றியிலே உடைத்து பலி கொடுத்தார். இரவு 11-மணி வரை ஆகமமுறைப்படி சடங்குகள் எல்லாம் சீரோடும் சிறப்போடும் நடந்தேறின. அன்று இரவோடு இரவாக சிவலிங்கத்தை கோட்டை கோயிலுக்கு எடுத்துச் செல்ல திட்டமிட்டார்கள். ஆனால் அதற்கு காலமும், நேரமும் ஒன்று கூடி வரவில்லை.

எனவே, நள்ளிரவிற்குப் பிறகு அதிகாலையில் மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகளும் மற்றும் நகரில் உள்ள பக்த பிரமுகர்கள், நகர பிரமுகர்கள் சிலரும் மீண்டும் கோயிலுக்குச் சென்றார்கள். இந்து சாஸ்திரப்படி ஓமகுண்டங்கள் வளர்த்து பூஜைகள் நடத்தினார்கள். இறுதியில் கன்னி பூஜையும் சிறப்புற நடந்தேறியது. கிழக்கு வெளுக்கும் நேரம். அடி வானத்தில் ஆதவனின் செங்கதிர்கள் ஊடுருவி வெளிக்கிளம்பும் வேளைக்குச் சற்றுமுன் உள்ள தருணம். இப்பூவுலகை இரவு முழுவதும் ஆட்சி புரிந்து கொண்டிருந்த இருள் மங்கை, உலகெங்கும் விரித்திருந்த தனது கரிய கூந்தலை வாரி ஒன்று சேர சுருட்டிக் கட்டிக் கொண்டு கிளம்பும் வேளை. அப்போது குருஜி சுந்தரராம் சுவாமிகளும் மற்றவர்களும் சில பீஜாட்ச மந்திரங்கள், தர்ப்பை மற்றும் சில மூலிகைகளைக் கொண்டு மந்திரங்களை ஓதி பூஜித்து சிவலிங்கத்தின் கோமுகம், விஷ்ணு பாகம், பாணலிங்கம் ஆகிய மூன்று பாகங்களையும் பிரித்து எடுத்தார்கள். பிறகு சிவலிங்கத்தின் பீடமும், மற்றும் பாகங்களும் ஒவ்வொன்றாக ஆகம முறைப்படி மந்திரங்கள் ஒலிக்க கழற்றப்பட்டன. பின் இவை யாவற்றையும் பக்தர்களும், பொது மக்களும் ஒரு லாரியில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். ஜெகத்தையாளும், அருள்மிகு ஜலகண்டேஸ்வர பெருமானின் சிவலிங்கத்தை சுமந்து வந்த லாரி தங்கு தடையின்றி, கோட்டை வாயில் வழியாக நுழைந்து கோயில் அருகே வருணஜப மகாயக்ஞம் நடந்து கொண்டிருந்த இடத்தின் அருகே கம்பீரமாக போய் நின்றது.

## கண்கொள்ளாக் காட்சி

அன்று ரவுத்திரி ஆண்டு, பங்குனி மாதம் மூன்றாம் நாள் திங்கட்கிழமை (16—3—1981-ந் தேதி) காலை 7-30 மணி முதல் 9-மணிவரை இராகு காலம். அந்த நேரத்தில் சிவலிங்கத்தை கோயிலுக்குள் எடுத்துச் சென்று பிரதிஷ்டை செய்வது இந்து

சாஸ்திரப்படி உகந்தது அல்ல. எனவே, இராகு காலம் முடிந்ததும் லாரியை கோயில் கோபுர வாசல் முன்பு நிறுத்தி அதிலிருந்து சிவலிங்கத்தையும், மற்றும் பாகங்களையும் பூஜை செய்து ஒவ்வொன்றாக கோயிலுக்குள் எடுத்துச்சென்றார்கள். இந்த செய்தி காட்டுத் தீ போல நகரங்களிலும் பரவி விட்டது. மடை திறந்த, காட்டாற்றுவெள்ளம் போல், மக்கள் வெள்ளம் கோட்டைக்குள்ளும் கோயிலுக்குள்ளும் நிரம்பி வழிந்தன. எங்கு நோக்கினும் ஒரே பக்தியும், பரவசமாகவும் காணப்பட்டது. "அரகரா, சிவ சிவா" என்ற ஒலிகள் காதை பிளந்து, காற்று முழுவதும் பரவியது. அங்கு கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில், தெப்பம் போன்று சிவலிங்கம் ஒவ்வொரு பிரகாரமாக கடந்துச் சென்ற காட்சி கண்கொள்ளா காட்சியாக இருந்தது. இந் நகர மக்கள் உள்ளத்தில் அத்தனை ஆர்வம், அவ்வளவு பக்தி பரவசம். இவ்வளவு நாளும் எவ்வாறு? எங்கு, எப்படி எவ்வண்ணம் இது முடக்கப்பட்டு, தேங்கி கிடந்தனவோ என்று எண்ணும் அளவிற்கு இருந்தது

பின்னர் அன்று எமகண்டம் கழிந்ததும், பகல் 12-மணிக்கு மேல் ஆகம விதிப்படி, மந்திரங்கள் ஒலிக்க, சாஸ்திர முறையில் சிவலிங்கம் கர்ப்பகிரகத்தில் மறு பிரதிஷ்டை செய்து வைக்கப் பட்டது. பல்லாண்டு காலம் "சாமி இல்லாத கோயில்" என்று அழைக்கப்பட்டு வந்த அவப்பெயர் அது முதல் நீக்கப்பட்டு அருள் பொழியும் ஆலயமாக ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் கோயில் திகழத்தொடங்கியது. பொது மக்களின் பேராதரவோடு அன்று இக்கோயிலில் மீண்டும் தொடங்கப்பட்ட தெய்வவழிபாடு இன்றும் காலை மாலை பூஜையுடன் தொடர்ந்து நடந்து வருகிறது.

## ஆலயம் இல்லாத குறை நீங்கியது

ஏறத்தாழ முன்னூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இக்கோயிலில் தெய்வ வழிபாடு மீண்டும் தொடங்கிய செய்தி காட்டுத் தீ போல் நகரங்கள், கிராமங்கள், பட்டித்

தொட்டிகள் ஆகியவற்றில் பரவத் தொடங்கிவிட்டது. இம் மாவட்டத்தில் மட்டுமின்றி பிற மாவட்டங்கள், மற்றும் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா ஆகியவற்றில் இருந்தும் நாள் தோறும் மக்கள் ஆயிரக்கணக்கில் அலை அலையாக திரண்டு வந்து அருள்மிகு ஜலகண்டேஸ்வரரை தரிசித்து தங்களது பிறவியின் பலனை பெற்றுச்செல்ல தொடங்கினார்கள். அது நாள் வரை இக்கோட்டையையும், கோயிலையும் வெறுமனே பொழுது போக்காக பார்த்துச் சென்ற மக்கள், இக்கோயிலில் சிவலிங்கம், மறுபிரதிஷ்டை செய்த பிறகு. இங்கு ஈஸ்வரனை தரிசித்து, இக்கோயிலின் பெருமையையும், சிறப்பையும் எண்ணி மகிழ்ந்து செல்லலானார்கள். மேலும், "இவ்வளவு பெரிய கோயில் இருந்தும் இங்கு தெய்வ வழிபாடு தொடங்க முடிய வில்லையே" என்று பல்லாண்டு காலமாக எண்ணி உள்ளம் வேதனை அடைந்து கொண்டிருந்த இப்பெருநகர மக்களுக்கும் மற்றும் இலட்சோப இலட்ச இந்து சமூகத்தினருக்கும், இப் புதிய தெய்வ வழிபாடு ஆறுதலையும், ஆனந்தக் களிப்பையும் ஏற்படுத்தியது. பல்வேறு மாநிலங்கள், பல்வேறு வெளி நாடுகளில் இருந்து இந்நகருக்கு வருகை தரும் இந்துக்களும் மற்றவர்களும், இந்நகருக்கு ஏற்றம் தரும் வகையில் இங்கு ஆண்டவனை தரிசிக்க பெரியதொரு ஆலயம் இல்லாத பெருங் குறையும் நீக்கப்பட்டு, இந்நகர், வரலாற்றில் புதியதொரு அத்தியாயம் தொடங்கப்பட்டது.

## கலைக்டர் திரு கங்கப்பா, I.A.S.

இவ்வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியை தொடர்ந்து 18—3—1981-ந் தேதி நகர மக்கள் சார்பில் திரு. ஏ. எஸ். ஏ. பரமசிவம் தலைமையில் சுமார் ஆயிரம் பக்தர்கள், மற்றும் நகர பிரமுகர்களும், நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக

சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் (கலெக்டர்) திரு. கங்கப்பா விடம் ஒரு மனுவை கொடுத்தார்கள். "இக்கோயிலில் பல்லாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டிருக்கும் தெய்வ வழிபாட்டுக்கு தடை விதிக்கக்கூடாது" என்று அவர்கள் அந்த மனுவில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். மேலும் இத் திருவாலயத்தில் சிவலிங்கத்தை வைத்து என்று மறு பிரதிஷ்டை செய்தார்களோ, அன்றில் இருந்து 48 நாட்கள் மண்டல பூஜையும் தொடங்கப்பட்டது. இந்த நாட்களில் வேலூர் நகரத்தில் உள்ள ஒவ்வொரு பேட்டை (பகுதி) களில் இருந்தும், மற்றும் மாவட்டத்-தில் உள்ள ஆம்பூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் ஆற்காடு, ஆரணி, அரக்கோணம் முதலிய இடங்களில் இருந்தும் பக்தர்கள் புனித நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்தார்கள். அதோடு காசி, ராமேஸ்வரம் பத்ரிநாத், பவானி முதலிய இடங்களிலிருந்து புனித நீர் கொண்டு வரப் பட்டு விசேஷ பூஜையும், அபிஷேகமும் நடைபெற்றன.

பின்னர் 31—3—1981-ந் தேதி திருநெல்வேலி பிரமசமய கோளரி நாத ஆதீன மடாதிபதி சிவசண்முக ஆச்சாரிய சுவாமிகள் இக் கோயிலுக்கு விஜயம் செய்து, பிரகாரங்களையும், சன்னதிகளையும் சுற்றிப் பார்வையிட்டு உள்ளம் நெகிழ்ந்தார். இதே ஆண்டு மே மதம் முதல் தேதி இத்திருவாலயத்தில், முதல் சமய எழுச்சி மாநாடு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தலைமையில் விமரிசையாக நடந்தது. இம்மாநாட்டில், கோவை பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள், மயிலை குருஜி எஸ். சுந்தரராம் சுவாமிகள், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் சிவஞான பாலையா சுவாமிகள், தொண்டைமண்டலம் ஆதீனம் காஞ்சி ஞானபிரகாச சுவாமிகள், திருமாத்தூர் ஆதீனம் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள், முதலியவர்கள் பங்கு கொண்டு சொற்பொழிவு ஆற்றினார்கள். மாநாட்டு முடிவில்

"இக்கோயிலில் தொடங்கப்பட்டிருக்கும் தெய்வவழிபாடு தங்கு தடையின்றி நீடிக்க மத்திய மாநில அரசுகள் அனுமதி வழங்க வேண்டும்" எனக்கேட்டு தீர்மானம் நிறைவேற்றி, அனுப்பி வைத்தார்கள். மண்டல பூஜையின் இறுதி நாளான 2-5-1981-ந் தேதி தவத்திரு குருஜி. எஸ். சுந்தரராம் சுவாமிகள் தலைமையில் ஓமம் வளர்த்து விசேஷ பூஜைகள் நடைபெற்றன, இந்நகர வியாபார பிரமுகர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அன்று அருள்மிகு ஜலகண்டேஸ்வரருக்கு முதல் அன்னாபிஷேகம் செய்தார். அதே நாளில் இக்கோயிலுக்கு தவத்திரு காயத்ரி சுவாமிகள் வருகை தந்தார். "தொடங்கப்பட்ட தெய்வ வழிபாடு தடைபடாது, இத்திருவாலயத்தின் மூலம் கல்வி நிறுவனங்கள் வளர்ந்து, இந்து மதத்துக்கும், இந்து தர்மத்திற்கும் இது ஒளி விளக்காக திகழும்" என்று அவர் திருவாய் மொழிந்தார்.

## கோடி அர்ச்சனை

அதன் பிறகு இங்கு பிரம்மோற்சவ விழா 5—6—1981-ந் தேதி தொடங்கப்பட்டு 10 நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இவ்விழா காலத்தில் ஒவ்வொரு நாளும் இந்நகரில் உள்ள ஸ்ரீ சுந்தரேஸ்வரர் சுவாமி ஆலயத்தில் இருந்து சுவாமியை அலங்கரித்து, சப்பரத்தில் ஊர்வலமாக எடுத்து வந்து, கோட்டை மைதானத்தில் இரவில் இறக்கி வைத்து பக்தர்கள் தரிசனத்திற்கு வைத்திருந்த பின்னர் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு சுவாமியை எடுத்துச் செல்லும் காட்சி கண் கொள்ளா காட்சியாக இருந்தது. அதன் பிறகு ஜூலை மாதம் ஏழாம் நாள், ஆனி திருமஞ்சனம் விழாவும், செப்டம்பர் மாதம் 2-ந் தேதி விநாயகர் சதுர்த்தி விழாவும், விநாயகர் அகவல் ஒப்புதல் போட்டியும், நடைபெற்றது. பின்னர் 29—9—1981-ந் தேதி முதல் 7—10—1981-ந் தேதி வரை

இக்கோயிலில் முதல் லட்சார்ச்சனை விழா சிறப்பாக கொண்டாடப் பட்டது. அக்டோபர் மாதம் ஐந்தாம் தேதி அபிராமி அந்தாதி போட்டியும், முப்பதாம் தேதி கந்தர் அனுபூதி பாடல் போட்டியும், 11—11—1981-ந் தே தி அன்னாபிஷேகமும், 16—11—1981-ந் தேதி கார்த்திகை சோமவாரமும், 29—11—1981-ந் தேதி சிவபுராண பாடல் போட்டியும் நடந்தேறின.

ஆண்டு இறுதி திங்கள் இரண்டாம் வாரத்தின் கடைசியில் 14—12—1981-ந் தேதி இங்கு 1008 சங்காபிஷேகமும், லட்ச தீப விழாவும் சிறப்புற நடந்தது. அதன் பிறகு 1982-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ந் தேதி திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டியும், 19—2—1982 ந்-தேதி தே வா ர பதிகங்கள், வள்ளித்திருமணத் தி ர ட் டு ப் பாடல் போட்டியும் நடைபெற்றன. மார்ச்சு மாதம் 7-ந் தேதி திருவனந்தபுரம் அபேதானந்த சுவாமிகள் இக்கோயிலில் கோடி அர்ச்சனை விழாவை தொடங்கி வைத்தார். 9 நாட்கள் நடந்த பூஜையில் தவத்திரு மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் மற்றும் 15 சிவச் சாரிகள் உள்பட ஏராளமான பேர்கள் இதில் கலந்து கொண்டு மந்திரங்களை ஓதினார்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்களும் மற்றும் பொதுமக்களும் வந்து தரிசித்துச் சென்றார்கள். இறுதி நாளான 15—3—1982-ந் தேதி கோயிலில் சமபந்தி போஜனம் சிறப்பாகநடந்தது. பின்னர் 16—3—1982-ந் தேதி அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் சிவலிங்கத்தை பக்தர்கள் மறு பிரதிஷ்டை செய்த ஆண்டு விழா, விசேஷ பூஜை, தீபாரதனையோடு நடந் தேறியது. அன்றுகாலையில் இக்கோயிலில் இருந்து சாமியை அலங்கரித்து சத்துவாச்சாரிக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கு 108 பெண்களுக்கு குங்குமம், மற்றும் சேலைகளும் வழங்கியதோடு,

சிவலிங்கம் பாதுகாக்கப்பட்டு வைத்திருந்த கோயிலில் விசேஷ பூஜையும் நடத்தினார்கள். அங்கிருந்து இரவு மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் தலைமையில் மேள, தாளத்துடன் யானை மீது புனித நீர் எடுத்து வந்து அருள்மிகு ஜலகண்டேஸ்வரருக்கு அபிஷேகமும், அர்ச்சனையும், ஆராதனையும் செய்தார்கள்.

## ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனம்

இந்து மத பகைவர்களாலோ அல்லது காலத்தின் கோலத்தினாலோ அல்லது விதியின் சதியாலோ இக்கோயிலில் உள்ள சிலைகள் யாவும் அகற்றப்பட்டு, வெறுமனே காட்சிக் கூடமாக இருந்த இக்கோயிலில் மீண்டும் சிவலிங்கத்தை கொண்டுவைத்து மறுபிரதிஷ்டை செய்த பிறகு இதை இந்து ஆகம விதிப்படி நிர்வகிக்க "அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் தர்ம ஸ்தாபனம்" என்ற நிறுவனம் 20—3—1981-ந் தேதி சங்க பதிவு சட்டத்தின் கீழ் பதிவு எண் 36/81 படி சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டது. அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலை நிர்வகித்து, பராமரிக்கவும், விக்கிரகங்களை நிறுவி புணரமைப்பு செய்து திருப்பணி மகா கும்பாபிஷேகம் செய்யவும், மற்றும் கல்வி, மருத்துவம், தொழில், கலை, கலாச்சாரம், பக்தி முதலிய துறைகளை வளர்க்கவும், பக்தர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்கவும், தொடர்ந்து இக்கோயிலில் தெய்வ வழிபாடு நடத்துவதுமே இத்தரும ஸ்தாபனத்தின் தலையாய கொள்கைகளாகும். இத்தரும ஸ்தாபனத்துக்கு தற்போது திருப்புகழ் ஜோதி திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் தலைவராகவும், தவத்திரு மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள், ஜமீன்தார் திரு. பி. துரைசாமி முதலியார், திரு ஏ. எஸ். ஏ. பரமசிவம், திரு. என். கோதண்டபாணி முதலியார், திரு. வி. செட்டி ராதா கிருஷ்ண

செட்டியார், திரு ருக்ஜி ஆர். கன்னியாலால் ஆகியவர்கள் உதவி தலைவர்களாகவும், திரு. கே. எஸ். மணி செயலாளராகவும், திரு. ஏ. கே. எஸ். புலாபாய் தேசாய், திரு. கே. ராதாகிருஷ்ண நாயுடு ஆகியவர்கள் உதவி செயலாளராகவும், திரு ஏ. எஸ். ஏ. பரமசிவம் பொருளாளராகவும், திரு. பி. வி. ஸ்ரீபதி இணை பொருளாளரா கவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மற்றும் திரு. ஜி. பாலசுந்தர முதலியார், திரு. ஆர். மகாதேவ அய்யர், திரு. வி. எஸ். ஆத்மநாதன், திரு. வி. எம். கே. சுவாமி, திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், திரு. பி. எஸ். சுப்பிரமணியன், திரு. ஏ. கே. லாலாலஜபதி, திரு. ஏ. டி. பி. எஸ். பாண்டியன், திரு. பி. சம்பந்த முதலியார், திரு. வி. சீனிவாசன், திரு. மு. பெருமாள் முதலியார், திரு. அ. முனுசாமி, திரு. ஜே. தர்மலிங்க செட்டியார் திரு. பி. பரசுராமன் ஆகியவர்கள் நிர்வாக கமிட்டி உறுப்பினர் களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இப்புதிய நிர்வாக குழுவினரின் ஒருங்கிணைந்த முயற்சியை கொண்டு இந்த அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்த, கீழ்கண்டவர்கள் தலைமையில் கமிட்டிகள் அமைக்கப்பட் டன. அதன் விபரம் வருமாறு :—

திரு. வி. எஸ். ஆத்மநாதன்—யாகசாலை கமிட்டி,
திரு. வி. செட்டி ராதாகிருஷ்ண செட்டியார்—நிதி கமிட்டி,
திரு. கே. எஸ். மணி—பொதுத் தொடர்பு, வரவேற்பு கமிட்டி,
திரு. பி. மேகநாத முதலியார்—அஷ்ட பந்தன கமிட்டி,
திரு. ஏ. ரத்தினம்—போக்குவரத்து, தங்கும் வசதி கமிட்டி,
திரு. என். கோதண்டபாணி முதலியார்
திரு. பி. வி. ஸ்ரீபதி } விளம்பர கமிட்டி,
திரு. என். அண்ணாமலை செட்டியார்–இசைநிகழ்ச்சி கமிட்டி
திரு. டாக்டர் கே. விஸ்வநாதன்—மலர் கமிட்டி,

திரு. ஆர். மகாதேவ அய்யர்—அலுவலக நிர்வாக கமிட்டி,
திரு. கே. பாலசுந்தர முதலியார்—பந்தல் குழு கமிட்டி,
திரு. எஸ். சவுந்தரராஜன்—சேவா கமிட்டி,
திரு. ஏ. கே. அரங்கநாதன்—தண்ணீர், சுகாதாரக் கமிட்டி,
திரு. வி. எம். கே. சாமி—மின் அலங்கார கமிட்டி
திரு. ஏ. கே. எஸ். புலாபாய் தேசாய்—பொது ஏற்பாடு கமிட்டி
திரு. வி. என். பாலசுப்பரமணியம்—உணவு கமிட்டி
ஆக மொத்தம் 15 கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## "பொன் எழுத்துக்களால்"

இந்த கோயிலுக்கு வேண்டிய உற்சவ மூர்த்திகள் மற்றும் சாமி சிலைகள் செய்ய தங்கம், வெள்ளி, செம்பு. பித்தளை, இரும்பு ஆகிய பஞ்சலோகங்கள் தேவைப்பட்டன. பொது மக்களிடம் இருந்து இவற்றை அன்பளிப்பாக பெற அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் தர்ம நிறுவனம் விரும்பியது. இதற்காக இக்கமிட்டி உறுப்பினர்கள் நகரின் முக்கிய வீதிகளில் வீடு, வீடாக சென்று, தங்களால் இயன்றதை கொடுத்து உதவும்படி மக்களிடம் கோரினார்கள். தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை சிலர் கொடுத்தார்கள். மற்றும் சிலர் தங்கள்வீட்டில் உள்ள செம்பு, பித்தளை பாத்திரங்களை மன முவந்து வழங்கினார்கள். இந்த வகையில், குறுகிய காலத்தில் சுமார் இரண்டாயிரம் கிலோ கிராம் எடையுள்ள செம்பு, பித்தளை பாத்திரங்களை இக்கமிட்டியினர் பெற்றனர். இந்த உலோகங்கள் யாவும் பின்னர் பஞ்சலோக மூர்த்தி சிலைகள் செய்ய பயன்படுத்தப்பட்டன. இது தவிர, இந்த மாபெரும் கும்பாபிஷேகத்தை சீரோடும், சிறப்போடும், நடைபெறச் செய்ய, பொன் கொடுப்பவர்கள் பொன்னையும், பணம் கொடுப்பவர்கள் பணத்தையும், இவை இரண்டும் இல்லாதவர்கள் தங்கள் உடல் உழைப்

யையும் மனமுவந்து ஈர்ந்து, வானகமும், வையகமும் போற்றி புகழும்படி செய்தார்கள் என்றால் அது சாலவும் பொருந்தும். அதோடு திருமலை-திருப்பதி தேவஸ்தானம் இக்கோயிலுக்கு சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ருபாய் அளவில் பணமாகவும், பொரு ளாகவும் கொடுத்து உதவியது இக்கோயில் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது ஆகும்.

## சாமி சிலைகள்

அதோடு இக்கோயிலுக்கு வேண்டிய பஞ்சலோக சிலைகளை யும் மற்றும் கல் சிலைகளையும் செய்ய ஏற்பாடு செய்தார்கள். அதன்படி சுவாமிமலை திரு. எஸ். தேவசேனாபதி ஸ்தபதி உற்சவமூர்த்திகளான ஸ்ரீ நடராஜர், ஸ்ரீ சிவாகம சுந்தரி, அப்பர் சுந்தரர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் பஞ்சலோக சிலை களை செய்தார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் விநாயகர், சந்திர சேகரர் அம்மன், சோமாஸ்கந்தர், அம்பாள், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, சண்டிகேஸ்வரர், பிரதோஷமூர்த்தி, அஸ்திரதேவர் ஆகிய 10 பஞ்சலோக விக்கிரகங்களும், மற்றும் ஸ்ரீ வெங்கிடேச பெருமாள் சப்த (ஏழு) மாதர்களான பிராமி, மகேஸ்வரி, கௌமாரி வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி மற்றும் கணபதி, வீரபத்திரன் ஆகிய கற்சிலைகளும், அம்பாள் பஞ்சகோஷ விக்கி ரகங்களான மகேஸ்வரி, பிராமி, வைஷ்ணவி, துர்க்கை ஆகிய சிலைகளும் இரண்டு துவார சக்தி சிலைகளும் மற்றும் கெஜலட்சுமி, சண்டிகேஸ்வரி கணபதி ஆகிய 21 கற்சிலைகளு மாக 31 சிலைகள் செய்தார்கள்.

இது போல் சென்னையை அடுத்த பாலவாக்கத்தில் விநாயகர், சண்முகர், வள்ளி, தெய்வானை, பிரம்மா, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், அம்மன், பைரவர் சிலைகளை தற்சமயம் அமெரிக்காவில், டெக்சாஸ், ஹூஸ்டன் நகரில் ஸ்ரீ மீனாட்சி கோயில் கட்டும் திரு. எம். முத்தையா ஸ்தபதி அவர்கள் செய்தார்

## திருமலை-திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி

திருப்பதியில் செய்யப்பட்ட பஞ்சலோக மற்றும் கற்சிலைகள் லாரிமூலம் அங்கிருந்து கொண்டு வரப்பட்டன பின்னர் 29—6—1982-ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை இங்குள்ள தோட்டப்பாளையம் ஸ்ரீ தர்மராஜா கோயிலில் இருந்து ஷெ சிலைகளை தவத்திரு மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் தலைமையில் ஊர்வலமாக எடுத்து வந்தார்கள். நகரின் பிரதான வீதிகளான காட்பாடி ரோடு, ஆற்காடு ரோடு, காந்தி ரோடு, மெயின் பஜார், லாங்கு பஜார், கமிசரி பஜார், பில்டர்பெட் ரோடு. ஆபீசர்ஸ் லைன் வழியாக சென்று ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல் நிலைப்பள்ளி அருகில் திரும்பி, மீண்டும் ஆபீசர்ஸ் லைன் வழியாக, கோட்டைக்குள் நுழைந்து ஊர்வலம் கோயிலை அடைந்தது. அங்கு நடந்த விழாவில் திருமலை-திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. பி.வி.ஆர்.கே. பிரசாத், I.A.S. இந்த சிலைகளை ஆகம விதிப்படி அருள்மிகு ஜலகண்டேஸ்வர தர்ம நிறுவனத்தின் உதவி தலைவரான குருஜி ஆர். சுந்தரராம் சுவாமிகளிடம் ஒப்படைத்தார். அதோடு சாமி அம்மனுக்கு அலங்காரம் செய்ய சுமார் ரூபாய் 25 ஆயிரம் பெருமான 6-பட்டு பொன்னாடைகளை இவ்விழாவின்போது கோயில் நிர்வாகியிடம் அவர் கொடுத்தார்.

சென்னையை அடுத்த பாலவாக்கத்தில் சிறப்பாக செய்யப் பட்ட சிலைகளும், லாரியில் எடுத்துவரப்பட்டு பின் சத்துவாச்சாரி யில் இருந்து இவற்றை ஆற்காடு ரோடு, காந்திரோடு, மெயின்

பஜார் வழியாக கோயிலுக்கு 24—6—1982-ந் தேதி கொண்டு வந்தார்கள். இதுபோல் சுவாமி மலையில் செய்யப்பட்ட பஞ்ச லோக சிலைகளையும் லாரி மூலம் 4-7-1982-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை கோயிலுக்கு ஊர்வலமாக எடுத்து வந்தார்கள்.

## கோபுர கலசங்கள்

இப்புராதான கோயிலின் கோபுரங்கள் காலத்தின் கோலத்தினால் கலசங்களை இழந்து, பொலிவிழந்த நிலையில் காட்சி அளித்துக்கொண்டு நின்றன. இவ்வாறு காட்சி அளித்துக் கொண்டு நின்ற கோபுரங்களுக்கு கோபுர கலசங்களை அமைத்துக் கொடுக்க வடாற்காடு மாவட்ட பித்தளை பாத்திர வியாபாரிகள் சங்கம் முன் வந்தது. இக்கும்பாபிஷேக விழாவை ஒட்டி அவர்கள் இராஜகோபுரத்தில் பொருத்த 7-அடி 3-அங்குல உயரத்தில் 7 கலசங்களும், உள் கோபுரத்துக்கு 4-அடி உயரத்தில் 5-கலசங்களும், சுவாமி சன்னதி கோபுரத்துக்கு 3-அடி 3-அங்குல உயரத்தில் ஒரு கலசமும், அம்மன் சன்னதி கோபுரத்துக்கு 2-அடி 3-அங்குலம் உயரத்தில் ஒரு கலசமும், நடராஜர் சன்னதி கோபுரத்துக்கு 2-அடி 3-அங்குல உயரத்தில் 3-கலசங்களும், சுற்றுப்புற சுவர்களில் உள்ள 3-கோபுரங்களுக்கு தலா 3-கலசங்கள் வீதம் 9-கலசங்களுமாக ஆக மொத்தம் 26-செம்பு கலசங்களை பிரபல திருப்பூர் சிற்பி திரு. நடராஜன் மூலம் செய்தனர். இவற்றின் மதிப்பு ஏறத்தாழ 70 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த கோபுர கலசங்களை 1–7–1982-ந் தேதி வியாழக் கிழமை மாலையில் தவத்திரு. மயிலை குருஜி. சுந்தரராம் சுவாமிகள் தலைமையில் பேரி செட்டி சுப்பிரமணியசுவாமி கோயிலில் இருந்து நகரின் முக்கிய வீதிகளான மெயின் பஜார், லாங்கு பஜார், கமிசரி பஜார், பில்டர்பெட் ரோடு, ஆபீசர்ஸ் லைன்

வழியாக ஊர்வலமாக எடுத்துச் சென்று இறுதியில் ஊர்வலம் கோயிலை அடைந்தது. அங்கு குருஜி சுந்தரராம் சுவாமிகள் இக்கோபுர கலசங்களை ஆகம விதிப்படி அருள்மிகு ஜலகண் டேஸ்வர கோயில் தரும நிறுவனத்தினரிடம் ஒப்படைத்தார். பின்னர் இக்கோபுர கலசங்கள் கோபுரங்களில் சிற்பி நடராஜனால் பொருத்தப்பட்டன.

## சன்னதிகள்

இக்கோயிலில் ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் சன்னதி, ஸ்ரீ ஜெகதாம்பிகை என்கிற ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சன்னதி, ஸ்ரீ வெங்கடேச பெருமாள் சன்னதி, ஸ்ரீ நடராஜர் சன்னதி, ஆகிய சன்னதிகள் முன்பு இருந்துள்ளன. தற்போது வலம்புரி விநாயகர் சன்னதி, பச்சக்கல் ஆறு அடி செல்வ விநாயகர் சன்னதி, ஸ்ரீ சண்முகர் சன்னதி, ஆகியவைகள் அதோடு சேர்ந்து உள்ளன. இது தவிர நவக்கிரகம், பைரவர், லட்சுமி, சரஸ்வதி, நால்வரான அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், சண்டேஸ்வரர் சன்னதி, போன்றவைகள் இருக்கின்றன.

இத்திருக்கோயிலுக்கு கொண்டு வரப்பட்ட சாமி சிலைகளை ஆகம விதிபடி நிறுவும் வேலை 5—7—1982-ந் தேதி பௌர்ணமி அன்று இரவு தொடங்கியது. சுமார் 8-மணியளவில் முதல் முதலாக உட்பிரகார வாயில் எதிரே உள்ள வலம்புரி விநாயகர் சிலையை ஆகம விதிப்படி, பிரபல ஸ்தபதி (சிற்பி) திரு. எம். கணபதி அவர்கள் சடங்குகள் நடத்தி நிறுவினார். கொம்பரக்கு, குங்குலியம், செம்பஞ்சு, சாதிலிங்கம், சுக்கான் தூள் நற்காவி, தேன் மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டு பொருட்களால் தயாரிக்கபட்ட "அஷ்டபந்தனம்" என்ற மருந்தை

இச்சிலையின் அடிபாகத்தில் சுற்றி வைத்து உறுதியாக இருக்கச் செய்தனர். பின்னர் இதுபோன்று கோயிலில் எல்லா சிலைகளையும் அவர் ஆகம விதிப்படி கும்பாபிஷேக நாளுக்குள் நிறுவினார்.

இரண்டாவது பிரகாரத்தின் தென்மேற்கு (நிருதி) புறத்தில் நிறுவப்பட்ட ஆறடி உயரத்தில் ஸ்ரீ செல்வ விநாயகர் சிலை எல்லோரையும் பிரமிக்க வைக்கும் வகையில் அருள்பொழியும் முகத்துடன் இருக்கிறது. இந்நகரில் உள்ள பிரபல ஆயுர்வேத வைத்தியர் ஜி.எம். லட்சுமண நாட்டார் மூலமாக உபயமாக இவ் அழகிய சிலையும், சன்னதியும் நிறுவப்பட்டுள்ளது

மத்தியில் உள்ள ஸ்ரீ வெங்கடேச பெருமானின் சன்னதி இந்நகரத்தின் பிரபல நகை வியாபாரி, லயன்ஸ் கிளப் வேலூர் தலைவர் " திரு. வி. செட்டி ராதாகிருஷ்ண செட்டி அன் சன்ஸ் " அவர்கள் மூலமாக உபயமாக அமைக்கப்பட்டு இருக்கிறது.

அதற்கடுத்து ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சண்முகர் கருணைமுகம் பொழிய வீற்றிருக்கிறார். பெங்களூர் பிரபல வியாபாரம் " டி. அண்ணுமலை செட்டியார் அன் பிரதர்ஸ் " அவர்கள் மூலமாக இச்சன்னதி உபயமாக அமைக்கப்பட்டது. சன்னதிக்காக தேவைப்பட்ட சுமார் 5,200/- மதிப்புள்ள கருங்கற்களை ரத்தினகிரி சுவாமிகள் ஸ்ரீ பாலமுருகனடிமை அவர்கள் உபயமாக அளித்தார்.

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்மன் சன்னதி கோஷ்ட விக்கிரகங்கள் வேலூர் பிரபல நகை வியாபார நிறுவனமான "ரங்கா ஜுவல்லர்ஸ்" மூலமாக உபயமாக சிறப்புற அமைக்கப் பட்டு உள்ளது. அருள் பொழியும் அகிலாண்டேஸ்வரி அம்மனின் திருமுகத்தையும், அவரது மலரடிகளையும் கண்டுகளித்து அருளும், ஆசியும் பெரும் மக்கள் தங்கள் பிறவியின் பலனை பெற்றுவிட்டதாக எண்ணி அக மகிழ்கிறார்கள்.

## நவசக்தி சத்தியஜோதி

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்மன் சன்னதியின் எதிரில் "நவசக்தி சத்தியஜோதி" என்ற அணையா விளக்கு (ஜோதி) இங்கு அமைக்கப்பட்டு இருக்கிறது. பொதுவாக எல்லா திருவால யங்களிலும் காணப்படாத ஒன்றாகும் இது. வட்ட வடிவமாக அமைக்கப்பட்ட இந்த விளக்கில் சுற்றிலும் எட்டு ஜோதிகளும், நடுவில் பிரதான ஜோதியும் இருக்கின்றன. பக்தர்கள் தங்களால் இயன்ற அளவு நெய்யோ, தேங்காய் எண்ணையோ, அல்லது இலுப்பை நெய்யோ இவற்றில் ஏதாவது ஒன்றை தாமரை நூலுடன் கோயிலுக்கு கொண்டு வந்து "நவசக்தி சத்திய ஜோதியில்" ஊற்றி அவரவர்கள் இஷ்ட தெய்வத்தை நினைத்து தியானம் செய்து பதினாறு தடவை சுற்றி வந்தால், கணவன், மனைவி, குழந்தைகள் மற்றும் தாய், தந்தை மற்றும் நெருங்கிய பந்தங்களுக்கு இடையே குடும்பத்தில் உண்டாகி உள்ள துன்பங் களும், துயரங்களும் நீங்கி அமைதியும், சாந்தியும் ஏற்படும். பல்வேறு நோய்களால் அவதியுறும் நோயாளிகள் நோய் நீங்கி நல்ல சுகம் பெறுவார்கள்; நேத்திரங்கள் மற்றும் உடல் உபாதை யால் பாதிக்கப்பட்டவர்கள், தெய்வ அருள் பெற்று சுகம் அடை வார்கள்; திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் ஆகும்; அருள் ஞானமும் பெறுவார்கள்" என்பது இதன் பலனாக கூறப் பட்டுள்ளது.

## புதையலாக கிடைத்த புனித நீர் கிணறு

இதை அடுத்து இப்பிரகாரத்தின் ஈசான மூலையை நோக்கி சில அடிகள் தூரம் சென்றால், செஞ்சுடராய் நின்ற திருமறை யோனான அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் அபிஷேகத்திற்கு தண்ணீர் எடுக்கப்படும் புனித நீர் கிணறு உள்ளது. இக் கிணற்றை கண்டுபிடித்த வரலாறு விசித்திரங்களின் ஒன்று எனக்

கூறலாம். இத்திருக்கோயிலில் சிவலிங்கத்தை கொண்டு வைத்து மறு பிரதிஷ்டை செய்தபின், மற்ற விக்கிரகங்களை எங்கு? எவ்வாறு? அமைப்பது என திருவாக்குப் பெற அப்போது மகா ராஷ்டிர மாநிலத்தில் "சத்தாரா" வில் முகாமிட்டிருந்த காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள், (பெரியவாள்) ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரி ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் (புதுப்பெரியவாள்) ஆகியவர்களைச் சந்திக்க சென்னை ஆனந்தா பிக்சர்ஸ் உரிமையாளரும் பக்த பிரமுகருமான திரு. வி. எஸ். லட்சுமண அய்யர், திரு. வி. எஸ். ஆத்மநாதன், மற்றும் மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் குழுவினர் ஆகியவர்கள் அங்கு சென்று கோயில் பற்றிய புதிய வரலாற்றுக்காக செய்ய விரும்பும் ஆக்கப் பணிகளைப் பற்றி விளக்கக் கூறினார். இப்புனித பணியை சிறப்புற நிறைவேற்றிட பிரபல சிற்பிகளில் ஒருவராக திகழ்பவரும், சமீப காலத்தில் அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் மாநிலத்தில் இருக்கும் ஹூஸ்டன் நகரில் மீனாட்சி அம்மன் கோயிலை அழகுற நிர்மாணித்தவருமான திரு. எஸ். எம். முத்தையா ஸ்தபதி (சிற்பி) யை அவர்கள் அடையாளம் காட்டி, அன்புடன் பணித்து ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்கள். இத்திருவாலயத்தின் எல்லா பகுதிகளையும், சுற்றுப்புற சூழ்நிலைகளையும்பார்வையிட்டபின் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் அபிஷேகத்துக்கு இரண்டாம் பிரகாரத்தின் அக்கினி மூலையில் (தென்கிழக்கு) உள்ள கிணற்றில் இருந்து புனிதநீர் எடுப்பது தவறு என்று அவர் கூறியதோடு, வடகிழக்கு ஈசான மூலையில் இருந்து ஈசனின் அபிஷேகத்திற்கு புனிதநீர் எடுப்பதுதான் இந்து ஆகம விதிமுறையாகும் என அவர் விளம்பினார். அதோடு இப்பெரிய கோயிலில் எழுந்தருளி இருந்த ஈஸ்வரனுக்கு அபிஷேகம் செய்ய ஈசான மூலையில் புனிதநீர் கிணறு ஒன்று இருந்திருக்க வேண்டும் அல்லது ஈசான மூலையில் புதிய புனிதநீர் கிணறு ஒன்று தோண்டும்படியும் அவர் கூறினார்.

இந்து மத சாஸ்திரங்களுக்கு ஏற்ப அவர் கூறியதன்படி இக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தின் ஈசான மூலையில் புனித நீர் கிணறு தோண்ட "அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் தர்ம ஸ்தாபனத்தின்" நிர்வாகத்தினர் திட்டமிட்டு பணியைத் தொடங்கினார்கள். பசும்புல்லும், செடிகளும் வளர்ந்து சமதளமாக காட்சி அளித்துக் கொண்டிருந்த ஈசானமூலையில் புனிதநீர் கிணறு தோண்ட பக்தர்கள் கடப்பாறையினால் குத்தியதும் "கணீர் கணீர்" என்ற சத்தத்துடன் கடப்பாறை மேலே கிளம்பி எகிறியது. அதைத் தொடர்ந்து பணியாட்கள் சுற்றுமுள்ள பகுதியை கிளறி பார்க்கும் பொழுது, இரண்டு நீள பாறாங்கற்கள் அங்கு புதைந்து கிடப்பதைக் கண்டார்கள். அவற்றை அவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தியதும், ஏற்கெனவே அங்கு வட்ட வடிவமாக இருந்த ஆழ புனிதநீர் கிணறு தூர்க்கப்பட்டு, மூடி வைக்கப்பட்டிருந்ததை அவர்கள் புதையல் போல் கண்டு பிடித்தார்கள். அதன்பிறகு அக்கிணற்றை மேலும் தோண்டி சுத்தப் படுத்தும் பணியில் பக்தர்களும், பணியாட்களும் ஈடுபட்டார்கள்' இவ்வாறு தோண்டிக் கொண்டிருக்கையில் அவர்களுக்கு அங்கு ஓர் அதிசயம் காத்துக் கொண்டிருந்தது. சுமார் 10 அடி ஆழம் தோண்டினதும் கிணற்றின் தென் புறத்தில் சுரங்கம் (குகை) ஒன்று காணப்பட்டது. அத்திசையின் பக்கவாட்டில் சில அடி தூரம் தோண்டிச் சென்றதும் அங்கு சுமார் 4 அடி உயரம் 2 அடி அகலத்தில் கற்கதவு ஒன்று தென்பட்டது. அதைத்திறந்து உள்ளே சென்றதும் அங்கு சுமார் 9 அடி அகலம், 18 அடி நீளத்தில் நான்கு புறங்களிலும் மற்றும் மேலும், கீழும் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட நீராழி மண்டபம் ஒன்று பூமிக்கடியில் புதைந்து இருப்பதை கண்டுபிடித்தார்கள்.

இப்புனித நீர் கிணரான கங்கா-கௌரி கிணற்றின் தற் போதைய ஆழம் ஏறத்தாழ 35 அடிகளாகும். அருள்மிகு

ஜலகண்டேஸ்வரரின் தினசரி அபிஷேகத்திற்கு இப்பொழுது இக் கிணற்றில்தான் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. இத்தகைய சிறப்புமிக்க புனிதநீர் கிணற்றில் காசுகளை போட்டால் அக்காசுகள் தண்ணீரில் மூழ்கியிருக்கும் படிகட்டுகளின் மேல்போய் நிற்பின், அக்காசுகளை போடும் பக்தர்கள், காசுகளை போடும் நேரத்தில் அவரவர்கள் மனதில் எதை, எதை நினைத்து போட்டார்களோ அக் காரியங்கள் சீரோடும் சிறப்போடும் செவ்வனே வெற்றியுடன் நடந்தேறும் என்பது இந்து சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்களி டையே தொன்று தொட்டு இருந்து வரும் நம்பிக்கையாகும் என்று பழம்பெரும் இந்து சமய அறிஞர்கள் கூறுகிறார்கள். இக் கிணற் றின் தெளிந்த நீருக்கடியில் ஆங்காங்கே உள்ள படிகளில் காசுகள் தேங்கி குவிந்து கிடப்பதும், படிகள் அல்லாத மற்ற இடங்களில் காசுகள் சிதறி காட்சி அளித்துக் கொண்டு இருப்பதும் இந்துசமய வழிபாட்டில் நம் மக்களின் உள்ளங்கள் எவ்வாறு ஈடுபாடு கொண்டு பிணைந்து இருக்கிறது என்பதை இவை பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன என்றால் அது எள்ளளவும் மிகையாகது !

## துவஜஸ்தம்பம் [கொடி மரம்]

நாயக்கர் மன்னர்கள் காலத்தில் கொடிமரங்கள் தேக்கு, சந்தன மரங்களாலும் செம்பு, வெள்ளி தகடுகள் போர்த்தப்பட்டும் தங்கமுலாம் பூசப்பட்டும் இருந்தன. திருவிழா கால தொடக்கத் தில் நல்ல நேரத்தில் கொடி ஏற்றி, விழா முடிந்ததும் கொடி இறக்கப்படும். கொடிகட்டி பறக்கவேண்டிய இக்கோயில் கொடி மரம் இழந்து இருந்த குறையை வடாற்காடு மாவட்ட விஸ்வ கரும சங்கத்தினர் மனமுவந்து வந்து நீக்கினர்.

தமிழக அரசு வனத்துறை பரிந்துரை செய்து சலுகை விலைக்கு கொடுத்த பொள்ளாச்சி அருகே ஆனமலை "டாப்சிலிப்" உலந்திரேஞ்சில் செங்குத்தான 46 அடி நீளமுள்ள தேக்கு மரத்தை வன இலாகா ஒத்துழைப்புடன் சங்கத்தலைவர் திரு. எல். சுப்பிரமணிய ஆசாரி, திரு மோகன் ஆசாரி, திருவலம் திரு. சுப்பிரமணிய ஆசாரி தேர்ந்தெடுத்து வேலூர் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக எடுத்துவந்து கோயிலுக்கு கொடுத்தனர்.

கொடிமரத்தில் பல்வேறு வேலைப்பாடுகளைச் செய்து ஸ்தாபிக்கும் பொறுப்பை ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் தரும ஸ்தாபனத்தார் ஏற்றனர். மரவேலைப்பாடுகளை திருவலம் திரு. சுப்பிரமணிய ஆசாரி மூலமும், செப்பு தகடு முதலிய வேலைகளை சுமாமிமலை திரு எஸ். தேவசேனாபதி ஸ்தபதி மூலமும், கருங்கல் குறடு திரு. எம். முத்தையா ஸ்தபதி மூலமும் ஆகம விதிப்படி தயார் செய்து 15—5—1983-ல் கொடி மரம் கும்பாபிஷேகம் மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

பழங்காலம் முதல் தொன்றுதொட்டு செய்துவரும் சிற்ப சாஸ்திர முறைப்படி புகழ்பெற்ற பிற சிவாலயங்களில் உள்ளதைப் போன்று, குறிப்பாக வரலாற்று சிறப்புமிக்க தஞ்சை பெரியகோயிலில் உள்ள கொடிமரம் போன்று இக்கொடிமரம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இக்கொடிமரம் இந்து ஆகம முறைப்படி பத்மம், பெரிய அரடா, பரங்கிக்காய், பரங்கி அரடா, சதுரப்பெட்டி. அரடா பேழா, தலா ஒன்றும், மேற்சுரை ஒன்பதும், அரடா, வள்ளிமாலை வள்ளி அரடா, பேழா, கண்டம், சதுரமணி பலகை ஆகியவைகள் தலா ஒவ்வொன்றும், மேல் விசிறி பலகை, கலசம் ஆகியவைகள் தலா மூன்றும், சதுரப்பெட்டி, வாழைப்பூ, தண்டு ஆகியவைகள் தலா இரண்டுமாக மொத்தம் 32 அமைப்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொடி மரத்தில் பரங்கிக்காயை நான்கு பூதங்கள் தாங்கிக்கொண்டும், அதற்குமேல் அமைந்துள்ள சதுரப்பெட்டியை நான்கு யானைகளும், சதுரமணிப் பலகையை நான்கு யாழி

களும் தாங்கிக்கொண்டு இருக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

இக் கொடிமரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சதுரப்பெட்டியில் தெற்கு பக்கத்தில் ஸ்ரீ விநாயகரும், மேற்கில் ஸ்ரீ அஸ்திரதேவரும் வடக்கில் ஸ்ரீ வள்ளி தேவசேனா சுப்பிரமணியரும், கிழக்கில் ஸ்ரீ உமா மகேஸ்வரரும் பஞ்சலோக விக்ரகங்களாக அமைக்கப் பட்டுள்ளன. இவ்வருள் பாலிக்கும் விக்ரகங்களை எந்த திசையில் நின்று உற்று நோக்கினாலும் பார்ப்பவர்களுக்கு தெய்வங்கள் ஒரு அழகிய இரதத்தில் பவனி வருவதுபோல் காட்சி அளிக்கும்.

## வாகனங்கள்

இக்கோயிலின் உற்சவமூர்த்திகள் வீதியுலா வர தேவை யான மூஷிக வாகனம், ரிஷப வாகனம், பூத வாகனம், சிம்ம வாகனம், மயில் வாகனம், அன்ன வாகனம், பிரதோஷ ரிஷப வாகனம், அம்மன் ரிஷப வாகனம், சண்டிகேஸ்வர ரிஷப வாகனம் நாக வாகனம், அதிகார நந்தி, தயார் செய்து முடிக்கப்பெற்றன. மேலும் சூர்ய பிரபை, யானை வாகனம், குதிரை வாகனம், கிளி வாகனம், காமதேனு வாகனம், இராவணேஸ்வரர் வாகனம், புருஷா மிருக வாகனம் முதலியவைகள் தயாரிக்கப்படுகின்றன. திருவலம் சுப்பிரமணிய ஆச்சாரி அவர்கள் ஆகம விதிப்படி வாக னங்களையும், பீடங்களையும் தயார் செய்கிறார்.

## வெள்ளி ரதம்

இக்கோயிலுக்கு ரதங்கள் இல்லாது குறையாக உள்ளது பஞ்சமூர்த்திகளுக்கு 5 ரதமும், வெள்ளியில் ஒரு ரதமும் சுமார் 300 கிலோ கிராம் எடை வெள்ளியில் செய் வதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக திரு வலம் சித்தர் யோகீஸ்வரர் ஸ்ரீ சிவானந்த மௌனகுரு சுவாமி களால் ஒரு குழு அமைக்கப்பட்டு, பிரபல நகை வியாபாரி திரு. ருக்ஜி ஆர் கன்யாலால் அவர்களை தலைவராகவும், திருவலம் சேட் திரு. ஹீராலால் அவர்களை உதவி தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் சிவலிங்கத்தின் மேல் ஐந்து தலை நாகப்பாம்பு குடைப்பிடித்து நின்றார்போல் வெள்ளி நாக பாஷனம் அமைக்கப்பட்டுள்ளது. வேலூர் மொத்த ஜவுளி வியாபாரிகள் சங்கம் இதை இக்கோயிலுக்கு உபயமாக அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இதுபோன்று மக்களும், ஏராள மான பொருட்களை இக்கோயிலுக்கு உபயமாக வழங்கியுள்ளார்கள்.

## கும்பாபிஷேகம்

இத்திருக்கோயில் முதல் முதலில் நிர்மாணித்து கட்டிமுடிக் கப்பட்டு விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்தபின், குட முழுக்கு, குடநீராட்டு என வழங்கப்படும், கும்பாபிஷேகம் எத்தனை முறை நடைபெற்றது என்பது பற்றி எந்தவிதமான குறிப்போ தகவலோ ஆதாரப்பூர்வமாக இல்லை. புதிய கோயில் கட்டி முடிக்கப்பட்ட போதும், அல்லது பழைய கோயிலை புதுப்பிக்கும் போதும் இக்கும்பாபிஷேக திருவிழா நடைபெறும். இக்கும்பாபிஷேக விழா ஒரு குறிப்பிட்ட நன்னாளில் குறிப்பிட்ட சுபவேளையில், யாகசாலையில் இருந்து கொண்டு வரப்படும் புனித நீரை கோயிலின் ராஜகோபுரம், மூலவர் கோபுரம், மற்றும் உள்ள கோபுரங்கள் ஆகியவற்றின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் கலசங்களின் மேல் ஊற்றுவதே இவ்விழாவின் சிறப்புமிக்க நிகழ்ச்சி ஆகும். "பூமி, ஆகாயம், அக்கினி, வாயு, வர்ணன், சூரியன், சந்திரன், ஆன்மா" எனப்படும் எட்டுப் பொருள்களாக இறைவன் இவ்வுலகில் வியாபித்து எழுந்தருளியுள்ளார் என்பது ஆகம விதி என்பதால் அஷ்ட பந்தன கும்பாபிஷேகத்தின் போது சிவாச்சாரியார்கள் சிவ மந்திரங்களை ஓதி ஐம்புல அழுக்குகளை நீக்கி விக்கிரகங்களை தூய்மையாக்கி உயிராக்குவார்கள் என்பது தத்துவமாக உள்ளது.

இந்த மகா கும்பாபிஷேக விழாவை யொட்டி இக்கோயிலின் முதல் பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில் வடக்கு தெற்காக 140

அடி நீளத்திலும், மேற்கு கிழக்காக 43 அடி அகலத்திலும் ஆகம விதிப்படி பிரம்மாண்டமாக கலை எழில்மிளிரும் அழகிய வேலைப் பாடுகளுடன், 44 சூத்திரம் கிழக்கு வடக்காக இட்டு, ருத்திர சூத்திர கிரமம் என்னும் விதிப்படி அமைக்கப்பட்டது. இதில் மொத்தம் 1849 பதங்கள் இருந்தன. இவை முறையே நடுவில் சிவபதம் அமையப்பெற்று அவற்றைச் சுற்றி 8 சக்தி பதங்கள், 16 நர்த பதங்கள், 24 பிந்து பதங்கள், 32 சதாசிவ பதங்கள், 40 மகேஷ்வர பதங்கள் 48 அஷ்டவித்யேஷ்வர பதங்கள், 56 ஈஸ்வர பதங்கள், 64 சுத்த மாயா பதங்கள், 72 மந்திர பதங்கள், 80 வர்ண பதங்கள், 86 கண பதங்கள், 96 பிரகிருதி பதங்கள், 104 கால பதங்கள், 112 கலா பதங்கள், 120 வித்தியா பதங்கள், 128 வைஷ்வை பதங்கள், 136 அவித்தியா பதங்கள், 144 விக்ருதி பதங்கள், 152 பிரம பதங்கள், 160 தைல பதங்கள், 168 ராட்சத பதங்கள் ஆகியவைகள் அமைக்கப்பட்டன.

## புனித நீர் கலசங்கள்

இதுல பிந்து சதாசிவ பதங்களுக்கு நடுவே 8 குண்டங் களும், சுத்த மாயா மந்திர பதங்கள் நடுவே 8 குண்டங்களும், கால பதங்கள் நடுவே 8 குண்டங்களும், விக்ருதி பிரம பதங்கள் நடுவே 8 குண்டங்களும், பிரதான குண்டம் ஒன்றும் ஆக மொத்தம் ஈஸ்வரனுக்கு 33 குண்டங்களும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்மனுக்கு 8 குண்டங்களும், மற்றும் விநாயகர், முருகன், உற்சவர், வெங்கடேச பெருமாள், கோபுர விமான ஸ்தூபிகள், சுவாமி பரிவாரங்கள், அம்பாள் பரிவாரங்கள், நவக்கிரகம், ஸ்ரீ நடராஜர், சண்டேசுவரர், பைரவர் ஆகியவர்களுக்குத் தலா ஒரு குண்டம் வீதம் 11 குண்டங்களும் ஆக மொத்தம் யாக சாலையில் 53 குண்டங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. இந்த யாக குண்டங்களைச் சுற்றி 238 புனித நீர் கலசங்கள் வைக்கப்

பட்டு இருந்தன. இவற்றில் கங்கை, அரித்துவார், திருவேணி சங்கமம், கன்னியாகுமரி சங்கமம், இராமேஸ்வரம், தாமிரவருணி, வைகை, அமராவதி, சிறுவாணி, நொய்யலாறு, பவானி, காவேரி, பொன்னை, செய்யாறு, பாலாறு ஆகியவற்றின் புனித நீர் நிரப்பி வைக்கப்பட்டு இருந்தது.

இவற்றில் கிழக்கே பிருத்வி தத்துவ நான்கு கோண குண்டமும், அக்கினி திக்கில் (திசை) ஜீவாத்மாவான மாயாத்வமான யோநி குண்டமும், தெற்கில் அர்த்த சந்திர வடிவ குண்டம் அக்கினி தத்துவத்தையும், மேற்கே விருத்த குண்டம் ஆகாச தத்துவத்தையும், வாயில் அறுகோணகுண்டம் வாயு தத்துவத்தையும், வடக்கே பத்ம குண்டம் கலா தத்துவத்தையும், ஈசானத்தில் எண் கோண வடிவ குண்டம் சூரிய தத்துவத்தையும், ஈசான கிழக்கு மத்தியில் விருத்தம் பிரதான குண்டமும், சமஸ்டிருபமாக அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குண்டமும் சிவலிங்க சொருபமாகவே கருதி வேள்வியாற்றி பூசிக்கப்பட்டது.

## 96 சிவாச்சாரியார்கள்

இவற்றின் நடுவே கலசங்கள் ஸ்தாபன வேதிகை முறையே அதே பட்டிகை, மத்திய பட்டிகை, அஷ்டகஜங்களும், அஷ்ட நாகம், கும்ப குண்டம், ஊர்த்துவ பட்டிகை, ஜககுனத்ரயம், பங்கஜம், என அஷ்டவர்க்கங்களை உடையதாக அமைக்கப் பட்டிருந்தது. குண்டத்திற்கு சிரசு, இருதயம், நாடி, கண்டம், யோநி, ஒன்று, இரண்டு, மூன்று மேகலைகள்,பரிஸ்தரணம் என ஒன்பது உருபுகள் உண்டு. குண்டத்தில் செய்யப்பட்ட ஓமத்தில் முக்கிய தத்துவம் தத்வேஸ்வரர், தத்வேசுவரி, மூர்த்தி, மூர்த்திஸ்வரர், மூர்த்திஸ்வரி ஆக ஆறு மந்திரங்கள் மட்டில் எண்ணிக்கையாக கொள்ளப்பட்டு, அவ்வாறு ஒவ்வொரு காலமும் ஒவ்வொரு குண்டத்திலும் ஆயிரத்து முன்னூற்று எண்பத்தெட்டு

(1388) ஓமமாக செய்து, பிரதான குண்டத்தில் எழுபத்திரண்டு ஓமங்கள் அதிகப்படியாக செய்து, எட்டு காலங்களில் மொத்தம் கால்கோடி (25 இலட்சம்) ஓமம் செய்யப்பட்டது.

இம்முறையிலே அம்பிக்கைக்கு அமைக்கப்பட்டிருந்த ஒன்பது குண்டங்களில் யாகம் காலம் ஒன்றுக்கு குண்டம் ஒன்றுக்கு ஆயிரத்து நானூற்று அறுபது (1388+72) வீதம் எட்டுக்காலங்களில் ஆறு இலட்சம் ஓமங்கள் நடைபெற்றன. திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் சுவாமி தேவஸ்தான சிவகாம வித்தியா சரஸ்வதி சிவகாம தீட்சாக்கிரிய கலாப சக்ரவர்த்தி, பட்டம், இராமலிங்க சிவாச்சாரியார் தலைமையில் 96 சிவாச்சாரியார்கள் இந்த யாகசாலை குண்டங்களில் 8 நாட்கள் கிரியைகளை நடத்தினார்கள். அதோடு இதில் பெருமளவில் வேத விற்பன்னர்களும் திருமறைப் பாராயணகாரர்களும் கலந்துக் கொண்டார்கள். இந்த யாக நாட்களில் மகா கும்பாபிஷேக கிரியைகளில் சிறப்பானவைகளான கலா கர்ஷணம், ஸ்பரிசாருதி மகா கும்பாபிஷேக மூல மந்திர ஆவாகனங்களால் மூல ஸ்தானத்தில் உள்ள இறைவன்பால் இவற்றினை தொடர்புபடுத்தி மகா கும்பாபிஷேகத்தினால் மந்திர பூர்வமான தெய்வ சக்திகளை மூல பிம்பங்களிடத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப்படுகிறது, என்பது ஆகம விதியான தத்துவம் ஆகும்.

## மக்கள் வெள்ளம்

துந்துபி ஆண்டு ஆனித்திங்கள் 24-ம் நாள் (8—7—1982) வியாழக்கிழமை துவிதியை திதி, திருவோண நட்சத்திரம், சித்த யோகம் கூடிய நன்னுளில் அதிகாலையிலே, புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் மளமளவென்று மக்கள் கோட்டைக்குள் நுழையத் தொடங்கிவிட்டார்கள். அன்று காலை 7-மணிக்

கெல்லாம் கோட்டை முழுவதிலும் மக்கள் வெள்ளம் நி ர ம் பி வழியத் தொடங்கியது. ஆலயத்தின் உள்பிரகாரம், வெளிபிர காரம் மற்றும் ஆலய கட்டிடங்களின் மேல் பகுதி, திறந்த வெளி பிரகார பகுதிகள் ஆகியவைகளில் எல்லாம் கூட்டம் நிரம்பி, கட்டுக்கடங்காதவாறு முண்டியடித்துக் கொண்டிருந்தது ஒரு பக்கம். நேரம் செல்ல செல்ல வெளியூர், உள்ளூரிலிருந்து வந்த கூட்டம் கோயில் எதிரில் உள்ள பரந்து விரிந்த மைதானத்தில் நிரம்பி அலைமோதி நின்று கொண்டிருந்தது மற்றொரு பக்கம். அதோடு கோட்டை மதில் சுவர்கள், மாடி கட்டிடங்கள், கோட்டை மைதானம், ஆபீசர்ஸ் லைன், பெங்களூர் சாலை, வீட்டு மாடிகள், கடைகள், எங்கெங்கெல்லாம் ராஜகோபுரம் தெ ரி கி ற தோ அங்கெங்கெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று விழி இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பின்னர் காலை 7-40 மணிக்கு யாகசாலையில் இருந்து புனித நீர் கலசங்களை சிவாச்சாரியார்கள் மேளதாளத்துடன் கோபுரங்களுக்கு எடுத்துச் சென்றார்கள். கோபுர உச்சிகளை அவர்கள் அடைந்ததும், கோபுர கலசங்கள் ஒவ்வொன்றுக்கும் கொடி நாட்டினார்கள். 7-50 மணிக்கு மூலவரான ஈஸ்வரர் கோபுரத்துக்கு சிவாச்சாரியார்கள் பு னி த நீர் கலசங்களை கரங்களில் ஏந்திக்கொண்டு வந்தார்கள். எங்கு நோக்கினும் பக்தி படர்ந்த அமைதி. அதைத் தொடர்ந்து 8-10 மணிக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கோபுரத்துக்கு வந்தார்கள். 8-15 மணிக்கு கோபுர கலசங்களுக்கு சிவாச்சாரியார்கள் மாலை அணிவித்து கும்பாபிஷேக மந்திரங் களை ஓதத் தொடங்கினார்கள்.

அதன் பிறகு 8-25 மணிக்கு ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பக்தர்களை ஆசீர்வதித்து அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் பெருமையைப்பற்றி கூறிய அருள்வாக்காவது:-

# ஸ்ரீ சங்கராச்சாரியாரின் அருள்வாக்கு

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு தாய், தகப்பன் இருப்பார்கள். ஆனால் இந்த உலகம் முழுவதுக்கும் தாய், தகப்பனாக இருப்பது பார்வதி, பரமேஸ்வரன். "அம்மையே, அப்பா ஒப்பில்லா மணியே" என்று இறைவனைப் பற்றி புகழ்கிறார்கள். அப்படிப் பட்ட உலகத்துக்கு தாயும், தகப்பனாக ஈஸ்வரனாய் உள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரருக்கு இப்போது கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது. ஒவ்வொரு க்ஷேத்திரமும், (ஆலயம்) மூன்று வகையில் பிரசித்தம் உள்ளது. ஒன்று சுயம்போல் நின்று தானாகவே இறைவன் தவம் செய்கிறவர்களுக்கு அருள் பாலிப்பதற்காக எழுந்தருளுவது ஒரு உருவம். இரண்டாவதாக பல அரசர்களால் நாட்டின் நன்மைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்ட க்ஷேத்திரங்கள். மூன்றாவதாக நாமெல்லாம் வழிபடுவதற்கு ஆங்காங்கே கோயிலை வைத்து கொள்வது என்பது.

இந்த அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அரசர்களால் நாட்டின் நன்மையை உத்தேசம் பண்ணி பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு முக்கியமான க்ஷேத்திரம். இந்த க்ஷேத்திரத்துக்கு ஒரு பெரிய வரலாறு உண்டு. நான்கு பக்கம் மதிலோடு கூடியுள்ள ஒரு கோட்டைக்குள்ளே இங்கே அருள்மிகு ஜலகண்டேஸ்வரரும், அகில அண்டத்துக்கும் ஈஸ்வரியாய் உள்ள தாயாரும், குடிகொண்டிருக்கிறார்கள். நம்முடைய இதிகாசத்திலே இறைவனுக்கு சரியாக வரலாறு உண்டு. அந்த வகையிலே அருள்மிகு ஜலகண்டேஸ்வரருக்கும், ஒரு பெரும் சிறப்பும், வரலாறும் இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. இந்த அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு கிராமத்திலே எழுந்தருளி, அங்குள்ள மக்களுக்கு

அருள் பாலித்துவிட்டு திரும்பவும் தன்னுடைய இடத்துக்கு வந்து, இப்போது அருள் பாலிக்க வந்து இருக்கிறார். அதுதான் இந்த அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் சுவாமியுனுடைய ஒரு பெரிய விஷேசம்.

ஆகவே, எல்லா அன்பர்களும் இதுபோன்ற நல்ல விசேஷங்களில் ஈடுபட வேண்டும். வேலூர் மக்கள் நல்ல உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும், இந்த அருள்மிகு ஜலகண்டேஸ்வரரை பிரதிஷ்டை செய்வதில், கும்பாபிஷேகம் செய்வதில் மிகவும் உற்சாகமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். மக்கள் சக்தி ஒன்றுப்பட்டால் உலகத்திலே எந்த காரியத்தையும் சாதிக்க முடியாதது அல்ல, என்பதற்கு வேலூர் மக்களின் கூட்டு முயற்சி, மிகவும் பாராட்ட தகுந்தது. ஆகவே, இது போன்ற கும்பாபிஷேக காரியங்களில் நாமெல்லாம் ஈடுபட்டு இறைவன் அருள் பெற வேண்டும்.

இறைவனை கும்பாபிஷேகம் செய்யும் போது அந்த நீரானது இறைவன் மேல் விழுந்தாலும், நம்முடைய உள்ளத்துக்குள்ளே சென்று நம் உள்ளத்தை எல்லாம் குளிர வைப்பதுதான் கும்பாபிஷேக நிகழ்ச்சி. வெளியிலே மழை பெய்தால் அது நம்மை வெளிப்புறத்திலே குளுமை படுத்துகிறது. கும்பாபிஷேகம் செய்வது மூலமாக இறைவன் மேல் புனித நீர் படும்போது நம்முடைய உள்ளமெல்லாம் குளிர்ந்து, கவலைகள் எல்லாம் நீங்கி, நல்ல சந்தோஷமும், ஆனந்தமும் அடைவதற்கு வாய்ப்பாகத் தான் கும்பாபிஷேகம் வைக்கப்படுகிறது. ஆகவே, கும்பாபிஷேக நல்ல நேரத்திலே, எல்லா அன்பர்களும் இறைவனை மனதிலே நினைத்து, அந்த கும்பாபிஷேக நீர் விழும் போது "நம்முடைய மனதில் உள்ள கவலைகளும் நீங்கி, மனது சந்தோஷமாகவும், ஆனந்தமாகவும் இருக்க வேண்டும்" என்று

ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்து இறைவன் அருள் பெற்று இன்புற்று இருப்போமாக. இவ்வாறு அவர் அருள்வாக்காற்றினார்.

அதன் பிறகு 9-மணிக்கு கோபுர கலசங்களுக்கு சிவாச்சாரியார் மந்திரம் ஓதி தர்ப்பப்புல் வைத்து மலர் சரங்களால் கட்டினார்கள். 9.01-மணிக்கு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஆசியுடன் அவர் முன்னிலையில் ஈஸ்வரர் கோபுர கலசத்துக்கு சிவாச்சாரியார் புனித நீரை ஊற்றி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார். அதே நேரத்தில் இராஜகோபுரம், உள் கோபுரம், அம்மன் கோபுரம், நடராஜர் கோபுரம், பெருமாள் கோபுரம் மற்றும் கோயில் சுற்றுச் சுவரில் உள்ள கிழக்கு, வடக்கு வாயில் கோபுர கலசங்கள் மீது ஆங்காங்கே இருந்த சிவாச்சாரியார்கள் புனித நீரை, கோப்ுர கலசங்களில் ஊற்றி மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார்கள். பின்னர் சுவாமி கோபுர கலசத்துக்கு சிவாச்சாரியார் சந்தன திலகமிட்டு, மாலை அணிவித்து, தீபாரதனை காட்டி அங்கவஸ்திரம் சூட்டினார். அந்த தட்டை ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமியிடம் கொடுக்க அவர் அதை வாங்கி கண்ணில் ஒற்றிகொண்டார். பின்னர் கூடியிருந்த பக்தர்களை நோக்கி சிவாச்சாரியார் தீபாரதனை தட்டை காட்டினார்.

இந்த கண்கொள்ளா இனிய காட்சியை கண்ணுற்று கண்டு களித்த இலட்சோப இலட்சம் பக்தர்கள் பக்தி பரவசத்தால் கரங்களை கூப்பி, எழுந்து நின்று, "சிவ சிவ சங்கரா, சிவ, சிவ சங்கரா" என்று இறைவனை பிரார்த்தித்து, பக்தி பரவசத்தில் மூழ்கினார்கள். அதோடு கோபுர விமானங்களில் இருந்த சிவாச்சாரியார்கள் நாலா பக்கங்களிலும் புனித நீரை தெளித்து பக்தர்களை அகமகிழச் செய்தார்கள். அறனாகிய சிவபெருமானுக்கு சமர்ப்பித்த புனித நீர் மேனியில் பட்டதும்,

பக்தர்கள் தங்களை மறந்து உள்ளம் உருகி நின்ற காட்சியை காண கோடிகண்கள் வேண்டும் போல் இருந்தது.

## கும்பாபிஷேக பலன்கள்

"தனது உடம்பில் பாதியை உமையாளுக்கு ஈந்து நிற்கும், அமலனாகிய சிவபெருமானுக்கு சிறப்புச்செய்யும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தை கண்டு களிக்கும் மக்கள் அறிந்தும், அறியாமலும் செய்த பாவங்கள் அனைத்தும் ஆதவனை கண்ட பனிபோல விலகும்; அதோடு சிறப்பை விரும்புகிறவர்கள் வாழ்க்கையில் சிறப்பை பெறுவர்; நில புலனை விரும்புகிறவர்கள் நில புலனை அடைவர்; மக்கள் செல்வத்தை விரும்புகிறவர்கள் மக்கள் செல்வத்தை பெறுவர்; நிறைவான வாழ்வையும், பொருளை விரும்புகிறவர்கள் அவற்றினை பெறுவர்; அறிவை விரும்புகிறவர்கள் அறிவை பெறுவர்; மோட்சத்தை (மோனம்) விரும்புகிறவர்கள் மோட்சம் அடைவர்; மேன்மையை விரும்புவோர் மேன்மையை அடைவர்; ஆயுளை விரும்புவோர் நீண்ட ஆயுளை பெறுவர்; இப்பிறப்பில் இவர்கள் மகப்பேறிருஞ் செல்வமுடையவராய் திகழ்ந்து வாழ்வார்கள்" என்று ஆகம சுலோகத்தில் கும்பாபிஷேக பலன்களாக கூறப்பட்டு உள்ளது.

# தொண்டைநாட்டில் உள்ள




# பஞ்சபூத ஸ்தலங்கள்

PRINTED BY : CANARA PRINTERS MADRAS

